# உதயன்



23

www.onlineuthayan.com

26பக்கங்கள் சுடர் 27 கதிர் 366 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 11 திங்கட்கிழமை (26/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# கடும் எதிர்ப்பால் மஹிந்தவின் மலேசியாவுக்கான பயணம் ரத்து



யாழ்ப்பாணம்,நவம்பர்26
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தன்னுடைய மலேசியாவுக்கான பயணத்தை இறுதி நேரத்தில் எந்தவித காரணங்களும் தெரிவிக்காமல் திடீரென இடைநிறுத்தியுள்ளார்.

''போர்க் குற்றவாளியான மஹிந்த மலேசியாவுக்குள் காலடி வைத்தால் போராட்டங்கள் வெடிக்கும்'' என்று மலேசியாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பாக தமிழ்த் தொண்டு அமைப்புகள் எச்சரித்திருந்தமையே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மலேசியாவில் உலக இஸ்லாமிய பொருளாதார மன்றத்தினின் எட்டாவது மாநாடு நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் மலேசியாவுக்கு மஹிந்த வரப்போகின்றார் என்ற செய்தி வெளியான உடனேயே அந்த நாட்டில் வாழும் சுமார் 15 லட்சத்துக்கும்

பார்க்க பக்கம் 4

## யுவதியின் சடலம் தூக்கில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 26.
கொக்குவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் 17 வயது யுவதியின் சடலம் ஒன்றுநேற்று மீட்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு, நாமகள் வீதியைச் சேர்ந்த றமேஸ்குமார் விதுஷா என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை அவர் தூக்கில் தொங்கியிருக்கக் கூடுமென்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி மு.உதயசிறி மரணவிசாரணையை மேற்கொண்டார். யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ஐ-4)

## மனைவியை மிரட்டியவர் போனார் பரலோகம்

யாழ்ப்பாணம், நவ. 26.
மனைவியை மிரட்டுவதற்காக நஞ்சு மருந்துப் போத்தலை வாயில் வைத்தவர், எதிர்பாராத விதமாக மருந்து உட்கொள்ள நேரிட்டதால் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தாவளை, இயற்றாலை வரணியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (வயது -58) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் தனது மனைவியை மிரட்டும் நோக்கில், ''நஞ்சு மருந்தை குடித்து விடுவேன்'' என்று பாவனை

பார்க்க பக்கம் 4

## நீதியரசர் விசாரணை விவகாரம்: அவதானிக்கிறது அமெரிக்கா

கொழும்பு, நவ.26
பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை உள்ளிட்ட சகல நடவடிக்கைகளையும் அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது - என்று அமெரிக்க இராஜதந்திரியொருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாக, நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட சட்ட வல்லுநர் குழுவொன்று கண்காணித்து வருவதாகக் கூறப்படுகிறது.

நீதியரசர் மீதான விசாரணைகள் தொடர்பில் கொழும்பிலுள்ள தனது தூதரகத்தின்

பார்க்க பக்கம் 4

## இடியுடன் கூடிய கனமழை வடக்கு, கிழக்கில் தொடரும்

யாழ்ப்பாணம், நவ. 26
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை சில தினங்களுக்கு தொடரும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இதன் போது கடல் கொந்தளிப்பாக காணப்படும். எனவே மீனவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று வானிலை அவதான நிலையத்தின் கடமைநேர அதிகாரி லக்ஷ்மிலத்தீப் அறிவித்துள்ளார்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை இன்னும் சில தினங்களுக்குத் தொடர்ந்து பெய்யக்கூடும். அதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிற்பகலிலோ அல்லது இரவிலோ இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று

பார்க்க பக்கம் 4

## இன்று பிரபாகரனின் பிறந்ததினம்; சோதனைகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,நவ.26
இன்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 58 ஆவது பிறந்த தினமாகும் . இதனை முன்னிட்டும் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் நாளை முன்னிட்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதையடுத்து அங்கு படையினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. அத்துடன் வீதியில் பயணிப்போரும்

பார்க்க பக்கம் 4

## பூந்தமல்லி முகாமில் ஈழ அகதி போராட்டம்

### திறந்த முகாமுக்கு மாற்றக்கோரி



சென்னை, நவ.26
பூந்தமல்லி அகதிமுகாமில் இருந்து திறந்தவெளி அகதிகள் முகாமுக்கு மாற்றுமாறு கோரி பரமேஸ்வரன் என்ற இலங்கை அகதி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில்குதித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வெடிபொருள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பரமேஸ்வரன் கடந்த 2008 ஆம் ஆண்டு கியூ பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். விசாரணையின் போது பரமேஸ்வரன் குற்றமற்றவர்

பார்க்க பக்கம் 4

## பல்கலை ஆசிரியர் சங்கம் அரசுடன் மீண்டும் பேச்சு

யாழ்ப்பாணம்,நவ.26
அரசுடன் அடுத்துவரும் வாரங்களில்தமது கோரிக்கைகள் தொடர்பில் உத்தியோகபூர்வ பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக் கழகஆசிரியர் சங்கத் தலைவர் நிர்மல் ரஞ்சித் தயாசிறி தெரிவித்துள்ளார்.

வரவு- செலவுத் திட்டத்தில் உயர்கல்விக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் நாளை மறுதினம் புதன்கிழமை திறைசேரிச் செயலாளருடனும், எதிர்வரும் 28 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சுடனும், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு நடத்த உள்ளனர்.

இதன்போது ஏற்கனவே உயர்கல்வி அமைச்சு உறுதியளித்ததற்கிணங்க சில சுற்றறிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் தேசிய உற்பத்தியில் இலவச கல்விக்கு 6 வீத நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் இதன்போது வலியுறுத்த வுள்ளோம் என்றும் பேராசிரியர் தயாசிறி தெரிவித்துள்ளார். (ந-16)

## இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள்; நல்லிணக்கத்துக்கு வழிகோலுமா?

கொழும்பு, நவ.26
இலங்கை இராணுவத்தில் தமிழ்ப் பெண்களை இணைத்த விடயம் பலத்த வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்துள்ளது. அது குறித்து அரசியல் பிரமுகர்கள் வெளியிட்ட கருத்துகள் வருமாறு:

**தம்பர அமில தேரர்**
**(தலைவர், தேசிய பிக்குகள் முன்னணி)**

அரசு வர்த்தமானி அறிவித்தல் எதனையும் விடுக்காது இராணுவத்துக்கு முன்னாள் போராளிகளை இணைத்த விடயம் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. இராணுவத்தில் தமிழர்கள் சட்டரீதியாகவே சேர்க்கப்பட வேண்டும்.

**கலாநிதி குமரகுருபரன்**

தமிழ்ப் பெண்கள் பலவந்தமாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை தவறானதாகும். அதனால் அவர்களை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும்.

**கலாநிதி குணதாச அமரசேகர**
**(தலைவர், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்)**

பலவந்தமாகத் தமிழ் யுவதிகள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் எனக் கூறப்படுவது முதல்தரமான பொய்யாகும். தமிழ் இளைஞர்கள் நல்ல நிலையில் இருப்பதை தமிழ்க் கூட்டமைப்பு விரும்பவில்லை.

**எம்.ஏ.சுமந்திரன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்)**

தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணையவேண்டும் என்று இராணுவத் தளபதி வீட்டுக்குவீடு சென்று கட்டளை பிறப்பித்து இதை நிறைவேற்றியுள்ளார். ஏன் இவர்கள் பெண்களை மட்டும் இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்க வேண்டும்? என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

**உதய கம்மன்பில(ஜாதிக ஹெல உறுமய)**

தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டதை கூட்டமைப்பும் மற்றும் சில தமிழ் இனவாதிகளுமே எதிர்க்கின்றனர். நல்லிணக்கத்துக்குத் தடையாக உள்ளவர்கள் யார் என்பது இப்போது நாட்டு மக்களுக்குப் புரிந்திருக்கும். (ந-சி)

## யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய பிரசவ விடுதி அடுத்த வருடம்

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது பிரசவ விடுதி அமைந்துள்ள இரண்டு மாடிக்கட்டடத்தை இடித்து விட்டு, அந்த இடத்தில் சகல வசதிகளும் கொண்டதாக பிரசவ விடுதிக்கான புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது- இந்தத் தகவலை வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது பிரசவ விடுதி அமைந்துள்ள மாடிக் கட்டடத்தில் ஒரு சில இடங்களில் சிமெந்துப் பூச்சு சொரிந்து விழுந்துள்ளது. அதனால் நீண்ட காலத்துக்கு அந்தக் கட்டடம் நின்று நிலைக்கும் என்பது சந்தேகமே. இத்தகைய நிலையற்ற கட்டடத்தால் விடுதிகளில் உள்ள பிரசவத் தாய்மார்கள், குழந்தைகள் என்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையைக் கட்டுப்படுத்தும் நகர்வில் நிறைவேற்று அதிகாரம்

## நீதியரசர் பிரேரணை எதிரொலி என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, நவ. 26
நாட்டில் ஜனநாயகம் நிலைபெற நீதித்துறை, செயலாற்றுத்துறை, சட்டவாக்கத் துறை ஆகிய மூன்று முக்கிய துறைகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயலாற்ற வேண்டும். இவற்றுள் ஏதேனும் ஒரு துறை, அதிகாரம் தம்மிடம் இருக்கிறது என்ற மமதையில் செயற்படுமானால், அது நாட்டுக்கு நன்மை பயக்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் தெரிவித்தது.

விசாரணைகளை இடைநிறுத்தக் கோரி உயர்நீதிமன்றம் தெரிவுக்குழுவிடம் விடுத்த பணிவான வேண்டுகோளை அது நிராகரித்துள்ளது. இதனை மேற்கோள் காட்டி கருத்து வெளியிட்டபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக்குழு விசாரணைகளை இடைநிறுத்தக் கோரிய மனுக்கள் பல உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்களை ஏற்று விசாரணை செய்து அது தொடர்பிலான சரியான சட்ட வியாக்கியானத்தை வழங்க கால அவகாசம் அவசியம் என்றும், இந்தக் காலப் பகுதியில் தெரிவுக்குழு தமது விசாரணை நடவடிக்கைகளை இடைநிறுத்தவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவுக்குழுவிடம் பணிவான வேண்டுகோளை விடுத்தது.

உயர் நீதிமன்றத்தின் இந்த வேண்டுகோளை தெரிவுக் குழு ஏற்கும் என நாம் எதிர்பார்த்தோம். ஆனால், அந்தப் பணிவான வேண்டுகோளை தெரிவுக்குழு நிராகரித்துவிட்டது. தெரிவுக்குழுவின் இந்த நடவடிக்கையானது நாட்டுக்கு உகந்ததல்ல.

நாட்டில் ஜனநாயகம் நிலைபெறவேண்டுமெனில், நீதித்துறை, செயலாற்றுத்துறை, சட்டவாக்கத்துறை ஆகிய மூன்று முக்கிய துறைகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படவேண்டும்.

இந்த மூன்று துறைகளுள் ஒரு துறை மற்றொரு துறையிடம் விடுக்கும் பணிவான வேண்டுகோளை அந்தத் துறை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனை நிராகரிக்கும் அதிகாரம் தம்மிடம் இருக்கிறது என்ற மமதையில் செயற்படுவது நாட்டுக்கு உகந்ததல்ல.

சட்டவாக்கத்துறையை தமக்குக் கீழ் கொண்டுவர நிறைவேற்றுத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. அதன் எதிரொலிதான் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நடவடிக்கையாகும். நாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் அரசின் இந்த நடவடிக்கையை இல்லாதொழிக்க மக்கள் அனைவரும் எம்முடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் - என்றார் சுமந்திரன்.

(ஐ-சி)

# தெரிவுக்குழு விசாரணை வியூகம் குறித்து ஆராய்வு

## நிராகரித்தது சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, நவ. 26
பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை எதிர்கொள்வது தொடர்பில் நடவடிக்கைகளை எடுப்பதற்காக குழு ஒன்றை நியமிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில் கூடிய சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக சங்கத்தின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனினும், உயர் நீதிமன்றத்தின் வேண்டுகோளை நிராகரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது விசாரணையை நடத்தியது.

இந்நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளது. இதன்படி, சிரேஷ்ட சட்டத்தரணிகளைக்கொண்டு நியமிக்கப்பட்ட இந்தக் குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க ஏதுவான சட்ட நடவடிக்கைகளை ஆராயவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**உயர் நீதிமன்றத்தின் வேண்டுகோளை நிராகரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது விசாரணையை நடத்தியது.**

பிரதம நீதியரசரின் சட்டத்தரணிகள் மற்றும் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகளுடன் இந்தக் குழு தொடர்பாடல்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

தேவையேற்படின், நீதிமன்றத்திற்குச் சென்று இதற்காக நீதி கேட்கவும் மேற்படி சட்டத்தரணிகள் குழு முன்னேற்பாடுகளைச் செய்து வருவதாக அந்தச் சங்கத்தின் சட்டத்தரணியொருவர் தெரிவித்தார். (ஐ-சி)

# மாவீரர் தினத்தை இம்முறை மக்கள் கொண்டாடுவார்கள்

## முன்னாள் மாநகர சபை உறுப்பினர் நிசாந்தன் உறுதி

யாழ்ப்பாணம், நவ. 26.
இந்தமுறை மக்கள் தமது வீடுகளில் அமைதியான முறையில் ஒரு நிமிட வணக்கத்துடனாவது மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீவக இளைஞர் அணி அமைப்பாளரும் மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான எஸ். நிசாந்தன்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

உயிரிழந்த படையினருக்கு தென்பகுதியில் நினைவுதினம் அனுஷ்டிக்க முடியுமெனின், ஏன் தமிழர்களது உரிமைக்காகவும் விடிவிற்காகவும் உயிர்த்தியாகம் செய்த எமது உறவினரான மாவீரர்களுக்கு எங்கள் பிரதேசங்களில் நினைவுதினம் அனுஷ்டிக்கக் கூடாது?

வடக்கு கிழக்கில் நவம்பர் 27 இல் மாவீரர்களுக்கு நிச்சயமாக சுடரேற்றுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் தீபமேற்றி நினைவு கூருவார்கள்.

இலங்கை அரசு தமிழ் மக்களை சகோதர மக்களாக ஏற்றுக்கொண்டால் எமது நினைவு தின நிகழ்வுக்கு எதுவித இடையூறும் இருக்காது. இறந்து போன எங்கள் உறவுகளுக்காய் பிரார்த்திக்கும் இந்த நாளில் முடிந்தால் சிங்கள மக்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# தவறிய கைபேசியைக் கையளிக்க முயன்றவருக்கு ஏற்பட்ட அவமானம்

## யாழ். பெண்ணின் காட்டுமிராண்டித்தனம்

யாழ்ப்பாணம், நவ. 26
வீதியில் தவறவிடப்பட்டிருந்த கைத்தொலைபேசியைக் கண்டெடுத்தார் பெரியவர். அதனை உரியவரிடம் கையளிக்க முயன்ற அவருக்கு ஏற்பட்டது பெரும் அவமானம்.

இந்தச் சம்பவம் நடந்தது யாழ் நகரில். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் ஓர் இளம் பெண். அவரின் அநாகரிகச் செயல் இதனை வாசித்தால் தெரியும்.

சம்பவம் இதுதான்:

பெரியவர் ஒருவர் அவரது தனிப்பட்ட விடயமாக காரைநகருக்குச் சென்று திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியில் காரைநகர் பாலத்தில் வீதியில் அநாதரவாகக் கிடந்தது ஒரு பை. அதனை எடுத்தார். அதில் கைத்தொலைபேசியுடன் சில ஆவணங்களும் இருந்தன.

அவரது பயணம் தொடர்ந்தது. ஒரு சில நிமிட நேரத்தில் கண்டெடுத்த தொலைபேசி அலறத் தொடங்கியது. பெரியவர் அதனை கையில் எடுத்துப் பேசத் தொடங்கினார்.

தொலைபேசிக்குரியவர் எனக் கூறி பெண் ஒருவர் பேசினார். ''நீங்கள் எடுத்த அந்தப் பையில் கைத் தொலைபேசியுடன் முக்கிய ஆவணங்களும் உள்ளன. உடனடியாக அந்தப் பையை ஒப்படைத்துவிட வேண்டும்'' என்று அதிகாரத் தொனியில் கட்டளையிட்டார்.

''அம்மா நான் யாழ். நகர் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். குறித்த எனது முகவரிக்கு வந்து கைபேசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' பெரியவர் பவ்வியமாகக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து பேச விடாமல் தடுத்த அந்தப் பெண் ''உடனடியாகப் பையை ஒப்படைத்து விடும் இல்லாவிட்டால் நடப்பது வேறு'' என்று முழங்கித் தள்ளினார்.

பெரியவர் அதிர்ந்து போனார். ''உதவி செய்யப் போய், இது என்ன வம்பு'' என்று தன்னை நொந்து கொண்டார் அவர்.

அவரது பயணம் தொடர்ந்தது. வீடு வந்து சேர்ந்தார். நடந்த புதினத்தை வீட்டாரிடம் மனவேதனையுடன் கூறினார். ''சரி அதற்கென்ன அவர்கள் வந்தவுடன் கொடுப்போம்'' மனைவி, பிள்ளைகள் ஆறுதல் கூறினர்.

சில மணி நேரத்தில் மீண்டும் ஒலித்தது அந்தத் தொலைபேசி. ''நீங்கள் கூறிய முகவரிக்கு அருகில் வந்து நிற்கிறேன். கைத் தொலைபேசியை எடுத்து வையுங்கள், வருகிறேன்'' என்று அந்தப் பெண் கூறினார்.

''பொழுது சாய்ந்து விட்டது நாளை காலையில் வா பிள்ளை'' என்றார் பெரியவர். சீறினார் அந்தப் பெண். ''நீங்கள் சொல்லும் நேரத்துக்கு வரமுடியாது. அதற்கு எனக்கு நேரம் இல்லை. இன்னும் சில நிமிடங்களில் வருகிறேன்'' என்று கூறிவிட்டு தொலைபேசியைத் துண்டித்து விட்டார். கவலையுடன் காத்திருந்தனர் வீட்டார். நீண்ட நேரம் காத்திருந்த அவர்களுக்கு பெரும் அதிர்ச்சி.

வீட்டின் முன்னால் நவீன ரக கார் மற்றும் ஒரு ஓட்டோவும் சினிமாப் பாணியில் வந்து பெரும் சத்தத்துடன் 'பிறேக்' போட்டு நின்றன.

இளைஞர்கள் சிலர் தடிகள், பொல்லுகள், இரும்புக் கம்பிகளுடன் குதித்தனர்.

''எங்கே தொலைபேசி? முன்னர் கதைத்தது யார்? என்று கூச்சல் போட்டனர். இந்த இரவு வேளையில் பெண் றோட்டில் திரிவதா எதற்காக அவரை அழைக்கிறீர்கள்...?'' எனக் கத்தத் தொடங்கினர்.

பதிலளிக்க முற்பட்ட வீட்டு இளைஞரை நிலத்தில் தள்ளி விழுத்திய அந்த கோஷ்டி ''எல்லோரையும் வெட்டிச் சாய்த்து விடுவேன்'' என்றான் அவர்களில் ஒருவன்.

ஒரு சில நிமிடங்கள் நீடித்த இந்த அடாவடித்தனத்தை அடுத்து தொலைபேசியைப் பறித்து எடுத்துக் கொண்டு பறந்துவிட்டது அந்தக் கும்பல்.

பெரியவரும் வீட்டாரும் அதிர்ந்து போய் விட்டனர்.

(ஒ-13)

# சமயப் பிரசங்கி சிவசண்முக மூர்த்தி காலமானார்

பிரபல சமயப் பிரசங்கியும், நாட்டார் பாடல் கலைஞரும், இசைத்துறை ஆசிரிய ஆலோசகருமான நடேசன் சிவசண்முக மூர்த்தி நேற்றுக் காலமானார்.

இவர் கிருபானந்தவாரியின் சீடராக இருந்து சமயப் பிரசங்கத்தைப் பயின்றவர். பட்டதாரியான பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைப்பிரிவில் நெறியாளராகப் பணிபுரிந்தார்.

லண்டன், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பல ஆலயங்களில் பல சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தியவர். சிலகாலம் நீரிழிவு நோயினால் பாதிப்புற்றிருந்தார். அவரது இறுதிக்கிரியைகள் திருவடி நிலையில் நேற்று மாலை நடைபெற்றன. (அ)

# மீண்டும் சீரானது நிலத்தடி குடி தண்ணீர் விநியோகம்

கே.கே.எஸ். வீதியில் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில், குடி தண்ணீர் விநியோக வசதிகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் ஏற்கனவே இருந்த நிலத்தடி குழாய் விநியோக மார்க்கத்தில் வீதி அகலிப்பின்போது ஏற்பட்ட பாதிப்பினால் குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

தற்போது யாழ்.மாநகராட்சி சபை நிலத்தடி குழாய் மார்க்கத்தை சீர்செய்து புதிதாக குடி தண்ணீர் குழாயைப் பொருத்தியுள்ளது. இதனால் நிலத்தடி குழாய் குடி தண்ணீர் விநியோகம் மீண்டும் சீர் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(3-17)

# கடற்கரைவீதி புனரமைப்பு வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.26
யாழ்ப்பாணம் கடற்கரை வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கொழும்புத்துறை துண்டி கடற்கரை வீதியில் இருந்து பாஷையூர் கடற்கரை வீதி வரையுமான பகுதியே புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த சில வருடங்களாகப் புனரமைப்பு இன்றிக் காணப்பட்ட இந்த வீதியைத் தற்பொழுது புனரமைப்பதற்காக கற்கள் பரவப்பட்டுள்ளன.

# கருணாநிதி இனத்துரோகி!

## வைகோ சீற்றம்

இலங்கைத் தமிழர்கள் நடத்திய விமானத் தாக்கு தலைப் புகழாமல், இனத்துரோகி கருணாநிதி விமர்சனம் செய்தார் என்று ம.தி.மு.க., பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பத்தில், ம.தி.மு.க., சார்பில், 'நாடாளுமன்றத்தில் வைகோ' நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது வைகோ பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்கள் நடத்திய விமானத் தாக்கு தலைப் புகழாமல், இனத் துரோகி கருணாநிதி விமர்சனம் செய்தார். இனி, இந்தியாவுக்கு ராஜபக்ஷ வந்தால், இந்தியப் பிரதமர் வீட்டை நாம் முற்றுகையிடுவோம். தமிழ்நாடு, மதுவின் பிடியில் நாசமாகிக் கொண்டிருக்கிறது. மதுக்கொடுமையால் கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வுகள் இடம்பெறுகின்றன.

மதுவால் கலாசாரம் நாசமாகி விட்டது. முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தக் கோரி, இராமநாதபுரத்திலிருந்து மதுரை வரை, நடைப்பயணம் மேற்கொள்ள உள்ளோம். எந்தக் கட்சியிலும் இல்லாத அளவுக்கு, இளைஞர்கள், எமது கட்சியில் இணைந்து வருகின்றனர். இலங்கைப் போரைத் தடுக்க வேண்டிய, ஐ.நா. பொதுச்செயலர் கடமையாற்றத் தவறியதால், அவரையும் குற்றவாளி யாகச் சேர்க்க வேண்டும்-என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களில் 6 மணிநேர வைத்தியர் கடமை அவசியம்

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

*ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களில் 6 மணி நேரம் வைத்தியர்கள் கடமையில் இருக்க வேண்டும். யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். உடுவில் ஆலடி ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை குறிக்கப்பட்ட நேரத்தில் வைத்தியர் கடமையில் இல்லாத காரணத்தால் சிகிச்சைக்காக வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரையும் பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 4 மணி வரையும் வார நாள்களிலும், சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் கடமையில் இருத்தல் வேண்டும். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகும்.

இதேவேளை குறித்த வைத்தியர் விடுமுறையில் இருக்கும் பட்சத்தில் இன்னொரு ஆரம்ப சுகாதார வைத்தியர் பதில் கடமை யாற்றுவதுடன் தான் கடமை யாற்றும் வைத்தியசாலையிலும் கடமையில் இருத்தல் வேண்டும்- என்றார்.

உடுவில் ஆலடி வைத்தியசாலையில் கடமையில் இருக்கும் வைத்தியர் முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரையுமே கடமை யாற்றுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட குறித்த வைத்தியசாலையின் அறிவித்தல் பலகையில் மாதத்தில் முதலாவது வெள்ளிக்கிழமை, மாதத்தில் இரண்டாவது புதன்கிழமைகளில் பிற்பகல் 2 மணிவரை, மாதத்தில் இரண்டாவது நான்காவது வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிவரை நோயாளர்கள் பார்வையிடப்பட மாட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அதற்காக காரணங்கள் எதுவும் குறிக்கப்படவில்லை.

குறித்த வைத்தியசாலையில் உடுவில் ஆலடி, மானிப்பாய், சங்குவேலி, மல்வம், மருதனார்மடம், கந்தரோடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில் குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் கடமை நேரத்தில் அங்கு இல்லாத காரணத்தால் சிகிச்சை பெறச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை சிகிச்சைக்காகச் சென்றிருந்த நோயாளர்களுக்கு பார்வையிடும் சிட்டை வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட போதும் வைத்தியர் வருகை தராத காரணத்தால் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

வைத்தியர் வருகை தராத காரணத்தை நோயாளர்கள் அங்கு கடமையிலிருந்த ஊழியர்களிடம் கேட்ட போது, வைத்தியர் பாடசாலை ஒன்றுக்குச் சிகிச்சை வழங்குவதற்காக சென்றுள்ளார். 10 மணிக்கு பின்னர் சிகிச்சை வழங்கப்படும் என்று தெரிவித்தனர்.

ஆனால், அன்றைய தினம் வைத்தியர் நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணிவரையும் சிகிச்சை வழங்கியதுடன் 2 மணிக்கு சென்று விட்டார்.

இந்த நிலைப்பாட்டால் தனியார் வைத்தியசாலைகளை நோயாளர் நாடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (ம-14-4)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு, நவ. 26

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு பன்முகப்படுத்திய வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் தளபாடக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாஒருலட்சம்ரூபாநிதியை இதற்கு ஒதுக்கியுள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்தப் பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்துப்பாடசாலையில் நிலவும் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் இந்த நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கியுள்ளார்.

* * *

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குஉட்பட்ட அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்குத் தளபாடங்கள் கொள்வனவுக்கென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்மாவை சேனாதிராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ்75ஆயிரம்ரூபாவை ஒதுக்கியுள்ளார். (ம-86)

## மாடு மேய்த்தவரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி, நவ.26

மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்த்து வரச் சென்றவர் பாம்பால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை அரசர்கேணியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த விநாயகம் பிரபாகரன் (வயது-25) என்பவரே பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

வேலணை பிரதேசசபையின் மாதாந்தப் பொதுச்சபைக் கூட்டம் காலை 9.30 மணிக்கு பிரதேச சபையின் தலைவர் சி. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-50)

**பாராட்டு விழா**

அனலைதீவு தெற்கு அ. த. க. வித்தியாலயத்தின் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பாராட்டு விழா பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி. ச. விக்கினேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயில்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-14-422)

**கண்காட்சி**

வதிரி திரு. இருதயக் கல்லூரியின் ஆரம்பக்கல்வி மாணவர்களின் கண்காட்சி காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி சி. நற்குணலிங்கம் கலந்துகொள்வார். (ம- 253)

## பரு. பிரதேச சபையின் உபஅலுவலகம் அம்பனில் செயற்பட ஆரம்பித்தது

வடமராட்சி, நவ. 26

பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகம் 13 வருட கால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் அம்பனில் கடந்த வாரம் முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் குடத்தனை 11வட்டாரங்களைக் கொண்ட கிராம சபையாக இருந்த போது இதன் அலுவலகம் அம்பன் அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு அருகில் இருந்து வந்தது.

கிராம சபை நீங்கி அபிவிருத்தி சபையாகவும் பின்னர் பிரதேச சபையாகவும் மாற்றமடைந்த போது குடத்தனை கிராம சபை உப அலுவலகமாக மாறி பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகிறது.

பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை உபஅலுவலகம் கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக 13 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்டது.

அலுவலகம் இருந்த அம்பன் பகுதி நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கியிருந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு நாகர் கோவில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். இதன் போது அம்பன், குடத்தனை, உப அலுவலகக்கட்டடமும் படையினரால் கைவிடப்பட்டது.

சேதத்துக்கு உள்ளான அலுவலக வளவுக்குள் நிறுவப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் குடத்தனை உப அலுவலக எல்லைக்குள் வசிக்கும் மக்கள் இங்கு சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பருத்தித்துறை பிரதேசசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 13 வருடகால இடைவெளியில் குடத்தனை உபஅலுவலகப் பணிகள் சிலகாலம் மந்திகையிலுள்ள பருத்தித்துறை பிரதேசசபையிலும், மற்றும் சிலகாலம் மணற்காட்டுச் சந்தியிலுள்ள குடத்தனை பொது நூல் நிலையத்திலும் தற்காலிகமாக இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சாவகச்சேரி இந்துவுக்கு கிடைத்தது மின்பிறப்பாக்கி

தென்மராட்சி, நவ.26

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கி கிடைத்துள்ளது.

இதற்கான நிதியை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளார். இதேவேளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கல்லூரிக்கு ஒட்டோவை வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# அறிவு சார்ந்த சமூகத்தை உருவாக்குவதாக பரிசளிப்பு நிகழ்வுகள் அமைய வேண்டும்

### ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் கருத்து



யாழ்ப்பாணம், நவ.26

பாடசாலைகளில் இடம் பெறும் பரிசளிப்பு விழாக்கள், பரிசளிப்பு விழாவாக மட்டுமன்றி அறிவுசார்ந்த சமூகத்தை உருவாக்குவதற்காகவும் அமையவேண்டும்.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இவ்வாறு கூறினார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெற்றி பெறுவது மட்டுமன்றி அதனைத் தக்க வைத்துக் கொள்வதும் முக்கியம். அந்த வகையில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் இந்தப் பாடசாலை தங்களுக்குரிய அந்த வெற்றியைத் தக்க வைத்தக் கொண்டு வருகின்றது.

பரீட்சையில் சித்தியடைய மாணவர்களைத் தயார்ப்படுத்துவதுடன் நின்றுவிடாது எதிர்காலத்துக்கு முக்கியத்துவம் தரக் கூடியதான அறிவையும் ஆற்றலையும் அவர்கள் பெறக் கூடியதாக ஆசிரியர்கள் தங்களது பணியை முன்னெடுக்க வேண்டும்.

உலகின் போக்குக்கு ஏற்ப கற்றலில் மாறுபாடான சூழலுக்கு ஏற்ப ஏனைய பாடசாலைகளுக்கு ஒரு மாதிரிப் பாடசாலையாக இது மாற வேண்டும். சிறந்த சிந்தனையாளர்களாக, தரமான பிரஜைகளாக, பொருளாதாரத்தில் சிறந்தவர்களாகப் பிள்ளைகள் விளங்க வேண்டும். மாணவர்களின் கல்வியில் ஆரம்பப் பிரிவு மிகவும் முக்கியமானது. இந்த சமூக மட்டத்தில் எமது பாரம்பரியம் மிக்க ஆரம்ப பாடசாலையாக இதனைப் பார்க்கின்றோம்.

இதன் வளர்ச்சிக்கு இதற்கு முன்னர் இங்கு பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள் இணை அதிபர், ஆசிரியர்கள் காரணமாகவுள்ளனர்- என்றார்.

கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் எஸ். தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் திருமதி து.இளங்கோவனும் கலந்துகொண்டனர்.

நிகழ்வு ஆரம்பமாகுமுன் பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மாணவர்களுக்கான பரிசில்களை விருந்தினர்கள் வழங்கினர். (ம-7-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்ப்பலகை காட்சிப்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு வழக்கு

## அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு,நவ.26

அரச கரும மொழிகள் கொள்கைக்கு அமைய தமது பெயர் பலகைகளைக் காட்சிப்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இத்தகைய நிறுவனங்கள் தொடர்பாக தற்போது தகவல்களைத் திரட்டி வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்ரணவக்க கூறியுள்ளார்.

**அரச கரும மொழிகளுக்கு அமைய பெயர் பலகைகளை காட்சிப் படுத்த தவறிய சுமார் 75 அரச நிறுவனங்கள் தொடர்பாக தற்போது தகவல் கிடைத்துள்ளது.**


அரசகரும மொழிகளுக்கு அமைய பெயர் பலகைகளை காட்சிப்படுத்த தவறிய சுமார் 75 அரச நிறுவனங்கள் தொடர்பாக தற்போது தகவல் கிடைத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பெயர் மற்றும் அறிவித்தல் பலகைகள் மூன்று மொழிகளிலும் காணப்பட வேண்டும் என்பது குறித்து நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதுகுறித்து தமது குழுவினர் ஆராய்ந்து தமக்கு அறிவிப்பதனைத் தொடர்ந்து நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)




தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று நள்ளிரவு தமிழகத்தின் பல பகுதிகளிலும் பட்டாசு வெடித்து, கேக் வெட்டி கொண்டாட்டங்கள் நடைபெற்றன. சென்னை பல்கலைக்கழக மாணவர்களும் கேக் வெட்டி கொண்டாடினர்.



யாழ். ஆரியகுளம் பகுதியில் உள்ள நாகவிகாரைச் சூழலில் இடம்பெற்ற யாழ். பெரஹரா நிகழ்வின் போது. (ந-17)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் தொழிற்பயிற்சி அதிகாரசபை பயிற்சி நிலையத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு முழுநேர, பகுதிநேர விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி நிலையம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம் எனும் முகவரிக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு தொழிற்பயிற்சி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## ஆஸிக்குச் சென்ற 60 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,நவ.26

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு சென்ற 60 பேர் தென்பகுதிக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் படகு மூலம் தென்பகுதியூடாக செல்ல முற்பட்ட வேளை கடற்படையினர் இவர்கள் 60 பேரையும் கைதுசெய்ததுடன் இவர்கள் சென்ற படகுகளையும் மீட்டனர்.

6சிறுவர்கள், 8 பெண்கள் உட்பட்ட 60 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் விசாரணைகளின் பின்னர் காலிக் கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (ந-16)

## மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர், தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதால் நாளை செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 8 மணிவரை குளப்பிட்டிப் பிரதேசம், கொக்குவில் பிரதேசம், நாச்சிமார் கோயிலடி, கோம்பயன் மணல் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும்-

புதன்கிழமை களபூமி பிரதேசம், காரைநகர் டிப்போ பிரதேசம், தீவகப் பிரதேசம் முழுவதும், அளவெட்டி, மல்லாகம் ஒருபகுதி, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## பூந்தமல்லி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்பது நிரூபணம் ஆனது. இதனால் அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விடுதலை செய்யப்படாமல் பரமேஸ்வரன் பூந்தமல்லி அகதிகள் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தன்னை திறந்தவெளி முகாமுக்கு மாற்றுமாறு கோரி பரமேஸ்வரன் உண்ணாநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இன்றுடன் ஐந்தாவது நாளாக இவரது போராட்டம் தொடர்கின்ற போதும், சாதகமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

பூந்தமல்லி சிறப்பு முகாமில் மொத்தமாக 6 இலங்கை அகதிகள் அடைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-16)

## நீதியரசர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஊடாகக் கருத்துப்பரிமாற்றங்களை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இதன்போது இலங்கைத் தூதரகத்தின் ஊடாக இலங்கை அரசுக்கு ஆலோசனைகளையும் அமெரிக்கா வழங்கிவருவதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் அலிஸா ஜரிஸ், நீதியரசருக்கு எதிராகஅரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மிக முக்கிய பல தகவல்களைத் திரட்டியுள்ளார். நாடு திரும்பிய கையோடு அவர் அதனை அமெரிக்க அதிகாரிகளிடம் கையளிக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ந-சி)

## யாழ்.போதனா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தேவை எழுந்தது.

சில மாதங்களுக்கு முன்னரே விடுதியில் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பில் ஆராயப்பட்டு தற்போது அந்தக் கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான முன் ஆயத்தப்பணிகளை விரைவுபடுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதனடிப்படையில் புதிதாக அமையவுள்ள கட்டடத்தில் விடுதிகள், கட்டில்கள், வைத்தியசாலைத் தொழிலாளிகள் தங்குவதற்கான அறைகள் என்பன உள்ளடங்க உள்ளன. இதற்குரிய திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் விடயங்களுக்குத் தேவையான நிதி தொடர்பில் கட்டடத்திணைக்களத்தினால் கணிப்பிடப்படவுள்ளது. பின்னர் அந்தக் கணிப்பீடு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

2013 ஆம் ஆண்டுத் திட்டத்திலே புதிய கட்டடத்தை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ந-4)

## இன்று..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சோதனையிடப்பட்டனர். யாழ். பல்கலைக்கழகத்திலும் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்துக்கு வாழ்த்துக் கூறியும், மாவீரர்களை நினைவு கூர்ந்து நேற்று 'தமிழீழ இளையோர் அமைப்பு' என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (ந)

## இடியுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது மணிக்கு 20 கிலோ மீற்றர் தொடக்கம் 30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். எனவே கடலில் கொந்தளிப்பு நிலை தோன்றக்கூடும் என்பதால் மீனவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்று காலை 8.30 மணி வரை 18.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இடி, மின்னல் குறித்து அனைவரும் அவதானமாக இருப்பதன் மூலம் அவற்றின் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் - என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ந-4)

## மனைவியை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்தபோது, அவரது கட்டுப்பாட்டை மீறி போத்தலில் இருந்த நஞ்சு அவரின் வாய்க்குள் புகுந்தது. இதனையடுத்து உடனடியாக அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-4)

## கடும் எதிர்ப்பால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அதிகமான தமிழர்கள் கொதித்தெழுந்தனர்.

''இலங்கையில் இறுதிப்போரின் போது நடைபெற்ற படுகொலைகளுக்கு காரணகர்த்தவான - போர்க்குற்றவாளியான - மஹிந்த ராஜபக்ஷ மலேசியாவுக்குள் நுழையக்கூடாது'' என்று அந்த நாட்டிலுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கின.

அதையும் மீறி மஹிந்த ராஜபக்ஷ மலேசியாவுக்குள் கால் வைத்தால், பரவலான மக்கள் போராட்டம் நாடெங்கும் வெடிக்கும் என்று அந்த அமைப்புகள் எச்சரித்திருந்தன.

மஹிந்த ராஜபக்ஷ மலேசியாவுக்கு வந்தால் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அவரை வெளியேற விடாமல் முற்றுகைப் போராட்டத்தில் குதிக்கவும் அரச சார்பற்ற அமைப்புகள் ஏற்பாடு செய்து வருவதாக தகவ்ல்கள் வெளியாகி இருந்தன.

இந்த நிலையில், ''தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜனாதிபதியின் வருகை கைவிடப்பட்டுள்ளது'' என்று உலக இஸ்லாமிய பொருளாதார மன்றுக்கு மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு மஹிந்த பயணம் செய்தபோது, தமிழர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய ஆர்ப்பாட்டங்களால் தனது பயணத்தை இடைநிறுத்திவிட்டு ஜனாதிபதி இலங்கை திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தற்போது மலேசியாவிலும் இதுபோன்ற நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே தனது பயணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைவிட்டிருக்கவேண்டும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (ந-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போவதில்லையே!

நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தெரிவாகி உள்ள பராக் ஒபாமா, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மேற்கொண்டுள்ள அதிரடி நடவடிக்கை, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை எதிர்நோக்கும் பேராபத்தைக் கோடி காட்டுகின்றது.

இதுவரை காலமும் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜதந்திரிகள், உயர் அதிகாரிகளே இலங்கை விவகாரத்தையும் கையாண்டு வந்தனர். இனிமேல், அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இலங்கை விவகாரங்களை நேரடியாகக் கையாளப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா முக்கியமாகக் கருதும் பிரச்சினைகளில் இலங்கைப் பிரச்சினையும் உள்வாங்கப்படுவதால் எதிர்காலத்தில் இலங்கை மீதான அமெரிக்காவின் நெருக்குதல்கள் அதிகரிக்கலாம்.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தன்னால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இலங்கை அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்பதை அமெரிக்கா மிகவும் உன்னிப்பாக அவதானித்துவருகிறது. அமெரிக்க உயர் அதிகாரிகள், இராஜதந்திரிகள் அடிக்கடி இலங்கை வந்து செல்வதற்கான காரணமும் இதுதான்.

ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பாக இலங்கை இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் அமெரிக்காவுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பதை இலங்கை வந்து திரும்பும் அமெரிக்க உயர் அதிகாரிகளின் கருத்துகள் பிரதிபலிக்கின்றன. இத்தகைய பின்னணியிலேயே இலங்கை விவகாரத்தை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு நேரடியாகக் கையாளப்போகும் அதிரடி அறிவிப்பு வெளியாகி உள்ளது.

தருஸ்மன் தலைமையிலான ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை, இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம், ஐ.நா. உள்ளக அறிக்கை இவை மூன்றுமே இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கக் கூடியவை. வன்னியில் நடைபெற்ற போரின் இறுதியில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன் நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தும் மேற்கு நாடுகளுக்கு இந்த மூன்றும் சாதகமான நிலைமையை உருவாக்கி விட்டுள்ளன.

தருஸ்மன் அறிக்கை, இறுதிப் போரின் போது 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்கிறது. ஜெனிவாத் தீர்மானம், இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை செயற்படுத்துமாறு பரிந்துரைக்கிறது. ஐ.நா. உள்ளக அறிக்கை, இறுதி போரில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்துபோனதற்கு பான் கீ- மூனைக் குற்றஞ்சாட்டுகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்த மூன்றுமே முக்கியமானவை என்று கருதப்படுகிறது. ஜெனிவாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கைக்கு ஒரு வருடகால அவகாசம் போதுமானது என்பதில் அமெரிக்கா மிகவும் தெளிவாக உள்ளது. இனியும் காலத்தை நீடிக்க அது தயார் இல்லை. அதனாலேயே இலங்கை விவகாரத்தை வெளிவிவகார அமைச்சு நேரடியாகக் கையாள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 2013 மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் 20 ஆவது மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக புதிதாகத் தீர்மானம் கொண்டுவரும் சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அடுத்த கூட்டத்தொடருக்கு இன்னும் நான்கு மாதங்களே உள்ள நிலையில், ஜெனிவாத் தீர்மானத்தின் முக்கிய பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் காட்டும் அக்கறையை விட அடுத்த கூட்டத் தொடரில் தனக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானங்களை முறியடிப்பதிலேயே இலங்கை கூடுதல் கவனம் செலுத்தி வருவது அதனாலேயே ஆகும். பெரு உட்பட சில நாடுகளில் இலங்கைத் தூதரகங்களை நிறுவும் முயற்சியும் இவற்றில் ஒன்றாகும்.

போரின் இறுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூறல், காணாமற்போனோர் தொடர்பான விவகாரங்கள், சட்ட விரோத ஆயுதக்குழுக்கள், விசாரணை இன்றித் தடுத்து வைக்கப் பட்டுள்ளோர் விவகாரம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு போன்ற முக்கிய விடயங்களிலாவது சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தக்கூடிய சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும். பான் கீ- மூனே குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி உள்ள இன்றைய நிலையில் தான் தப்பிவிடலாம் என்று இலங்கை எதிர்பார்க்க முடியாது. ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவதன் மூலமே அமெரிக்காவின் நடவடிக்கைகளில் இருந்து தப்பமுடியும் என்பது வெளிப்பட்டு வருகிறது.

அனைத்துலக அரசியல் தளத்தில் அடிக்கடி அணிசேருதலில் திடீர் திடீரென மாற்றங்கள் ஏற்படுவது வழமை. அவ்வேளைகளில் அதிகாரம் மிக்கனவாக முன்னணியில் நிற்பன பின்தள்ளப்படுவதும் உண்டு. ஆனால் எல்லா நாடுகளுக்கும் பொதுவான செல்நெறிகள் மாற்றமுறுவது அடிக்கடி நிகழ்வன அல்ல.

மக்களுக்குரிய ஜனநாயக உரிமைகள் அவற்றின் பாற்பட்ட விதிமுறைகள் மாற்றமடைவதும் நாட்டுக்கு நாடு வேறுபடுவதும் மிகக்குறைவு எனலாம். ஜனநாயகத்தின் மூலாதார உரிமைகளை, மனித உரிமைகளை மீறும் நாடுகள் அவற்றுக்குப் பதில்கூறியாக வேண்டிய வேளைகளில் எந்தத் தேசமும் தனித்து நின்று தமது தவறுகளை மூடிமறைக்க இயலாது.

தான் நினைத்தவாறு மக்கள் பாதகச் செயற்பாடுகளை முன்னெடுத்து நீண்டகாலத்துக்கு கொண்டுசெல்லலாம் என்பது சாத்தியமற்றது. பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போவதில்லை. இப்போதைய இலங்கை அரசு இதனை மனதிருத்திச் செயற்பட முனையலாகாதா?

# கண்ணிவெடியைக் காரணம் காட்டி இராணுவ மயமாக்கும் செயற்பாடுகள்

## சபையில் சாடினார் அரியநேத்திரன்

கொழும்பு,நவ.26

போர் முடிந்து நான்கு வருடங்களைக் கடந்தும் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை என்ற மாயையை ஏற்படுத்தி எமது பிரதேசங்களை அரசு இராணுவ மயப்படுத்தி வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அரியநேத்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போர் முடிந்து நான்கு வருடங்களைக் கடந்துள்ள போதும், இன்னும் அதிக பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை என்று கூறி அந்தப் பிரதேச மக்கள் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 12 ஆயிரத்து 120 பேர் ஊனமாக்கப் பட்டுள்ளனர். இவர்கள் பார்வையிழந்தவர்களாகவும் பேச முடியாதவர்களாகவும் நடக்க முடியாதவர்களாகவும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களுக்கு இன்று வரை எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 12 தமிழ்ப் பிரதிநிதிகள் மாகாண சபை உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களுள் 11 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஆனால் இப்போது அங்கே அரசியல் பழிவாங்கல்கள் இடம் பெறுகின்றன. பட்டதாரிப் பயிலுநர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 35 பட்டதாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எமது பிரதேசத்திலும் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு ஒரு கணினி நிலையத்துக்கான அடிக்கல் நடவும், அரச சார்பு அரசியல்வாதிகள் தான் வரவேண்டும் எனக் கல்விப் பணிப்பாளர்கள் கூறுகின்றனர். கல்வியிலும் அரசியல் மயம்தான். இவை தீர்க்கப்பட வேண்டும்.

இப்பொழுது இந்த அரசில் 40 க்கும் மேற்பட்ட அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சர்கள் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கின்றனர். எனவே அமைச்சரவை மாற்றம் வரும் போது இந்த எல்லா அமைச்சர்களையும் நீக்கிவிட்டு பஸில் ராஜபக்ஷவை மட்டும் ஒரே அமைச்சராக நியமித்தால் பெருமளவு நிதியை மிச்சப்படுத்த முடியும்-என்றார். (த-2)

# உடற்கல்வி டிப்ளோமாவுக்கு அங்கீகாரம் பெற நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.26

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி விரைவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும். இதற்கான சகல விவரங்களும் அடங்கிய பத்திரம் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக உடற்கல்வி டிப்ளோமா பழைய மாணவர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவிக்கையில்:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி உருவாக்கப்பட்டது.

முதன் முதலாக 1998 இல் உருவாக்கப் பெற்ற டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பித்து இன்று 14 வருடங்கள் முடிவுற்றுள்ளன. ஆனால், இன்று வரை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்தக் கற்கை நெறியை அங்கீகரிக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணத்திடம் கோரினோம். இந்த நிலையில் உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியை அங்கீகரிக்குமாறு கோரி அதற்கான பத்திரங்களை சமர்ப்பித்துள்ளேன்.

விரைவில் இதற்கான பதிலை வழங்குவேன் என்று துணைவேந்தர் தெரிவித்தார் - என்று கூறினார். (ம-50)

## மண்டைதீவில் குறைகின்றன மாடுகள்

மண்டைதீவுப் பகுதியில் மாடுகளின் எண்ணிக்கை குறைகின்றது என்று அந்தப் பகுதி விவசாயிகள் கூறுகின்றனர். நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாவதாலும் மாடுகள் களவாடப்படுவதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளை இங்குள்ள தரவைகளில் அடைத்துப் பாதுகாப்பதன் மூலம் இயற்கை உரங்களை விவசாயிகள் பெறக்கூடியதாக இருக்கும். வயல் நிலங்களில் தற்போது உற்பத்தி செய்யப்பட்ட நெற்பயிர்களைப் பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கும்.

கமத்தொழில் விவசாய கால்நடை சங்கங்கள் மாடுகளைப் பாதுகாப்பது குறித்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கூறுகின்றனர். (ம-7)

## தப்பியது தங்கச் சங்கிலி

பட்டப்பகல் வேளையில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முற்பட்டனர். பெண்ணின் சாதுரியத்தால் சங்கிலி காப்பாற்றப்பட்டது.

கைக்குள் அகப்பட்ட சிறு துண்டுச் சங்கிலியுடன் ஓடிச் சென்றவர்களை மக்கள் துரத்திச் சென்ற போதிலும் திருடர்கள் ஓடி மறைந்து விட்டனர். இந்தத் துணிகரச் சம்பவம் ஆடியபாதம் வீதி கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (ம-115)

# ஆசிரியர் இடமாற்றங்கள் வடக்கில் தற்போது மும்முரம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

வடமாகாணத்தில் உள்ளக, வெளியக ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. நாளாந்தம் சுமார் 150 ஆசிரியர்களது இடமாற்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்தார்.

மாகாணங்களுக்கு இடையிலான மாவட்டங்களுக்கு இடையிலான மற்றும் மாவட்டத்துக்குள்ளே என்ற வகையில் இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. ஒரு பாடசாலையில் 7 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் உட்பட இடமாற்றத்துக்குத் தகுதியுடையவர்கள் இந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பித்தவர்களது பரிசீலனைகளே தற்போது இடம் பெற்று வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இந்த இடமாற்ற பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாளை செவ்வாய்க்கிழமைக்குப் பின்னரும் பரிசீலனைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. மருத்துவம், மேற்படிப்பு உள்ளிட்ட பல காரணங்களுக்காக பிறமாகாணங்களுக்கு இடமாற்றம் பெறுகிறார்கள்.

மாவட்டங்களுக்கு இடையிலான மாவட்டத்துக்கு உள்ளான ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு பதில் ஆசிரியர்கள் இடமாற்றப்படுகிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# கார்த்திகைத் தீபத் திருநாளைக் கொண்டாட ஒத்துழையுங்கள்

## இந்து மகா சபை கோரிக்கை

வலி.வடக்கு,நவ.26

கார்த்திகைத் தீபத்திருநாளைக் கொண்டாடுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்து மகா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்து மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கார்த்திகைத் தீபத் திருநாள் இன்று நேற்று உருவான ஒன்றல்ல. இது பண்டைக்காலம் தொடக்கம் இந்து மக்களால் பாரம்பரியமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கார்த்திகைத் தீபத் திருநாள் இந்து சமய ஆரிய கலாசார நிகழ்வாகும். இது ஒளி வடிவமான இறைவனை வீடுகளிலும் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தீபம் ஏற்றி வழிபடும் நிகழ்வாக இந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதனை இந்துக்கள் அனைவரும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும்.

இந்துக்களின் இந்த வழிபாட்டுக்கு அனைத்துத் தரப்பினரும் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்- என்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் கார்த்திகைத் தீபத் திருநாளில் தீபங்கள் ஏற்றுவது தொடர்பாகப் பலத்த சந்தேகங்கள் மற்றும் நெருக்கடிகள் நிலவுகின்றன.

இந்த நிலையில் இந்து மகா சபையின் பிராந்திய சபைகள் வவுனியாவில் ஒன்றுகூடி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணு உலை தாக்கம் குறித்து விளக்கம்

## மன்னாரிலுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு

மன்னார், நவ. 26

கூடங்குளம் அணு உலையின் தாக்கம் குறித்து கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் பிரஜைகள் குழு பணிமனையில் இடம்பெற்றது.

அதன் போது கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைவர் துமிந்த நாகாமகே, கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அஜீத் சுரேந்திர ரூபசிங்க, பிரசாத் மஞ்சு உட்பட பலர் கலந்துகொண்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினர்.

இலங்கையில் கூடங்குளம் அணு உலைமூலம் ஏற்படக்கூடிய தாக்கம் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் இந்த உலைக்கதிர்வீச்சால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் குழுவினர் தெளிவான விளக்கங்களை அளித்தனர்.



நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை, மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் ஏ.சகாயம், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்களின் தலைவர்கள், அருட்தந்தையர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-12)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் தொடர்ந்தும் குளறுபடி

மன்னார், நவ. 26

இந்திய வீட்டுத்திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் பயனாளிகள் தெரிவின் போது ஆளுங்கட்சி அமைச்சர்களின் ஆதரவாளர்கள் உள்ள கிராமங்களிலேயே பயனாளிகள் தெரிவு இடம்பெறுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களில் அதிகமானவை ஆளுங்கட்சி அமைச்சர்களின் ஆதரவாளர்களுக்கும், ஆளுங்கட்சியில் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களுக்கும் பகிரப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இவ்வாறான நிலை காணப்படுவதாக முறைப்பாடுகள் மக்களால் தெரிவிக்கப்படுகின்றன.

ஆளுங்கட்சியில் அரசியல் செல்வாக்குமிக்கவர்களுக்கும் பகிரப்பட்டுள்ளன.

இந்திய வீட்டுத் திட்ட தெரிவின்போது கைக்கொள்ளப்படும் புள்ளி வழங்கும் திட்டமும் இங்கு கருத்தில் கொள்ளப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீட்டுத்திட்டம் தொடர்பான பிரச்சினைகளில் இந்திய தூதரகம் தலையிட்டு கவனம் செலுத்தி நீதியான முறையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும், அரசியல் கட்சிகளின் தலையீட்டை நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஐ-12)

# நிரந்தர கட்டடம் கோருகிறது மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை

பூநகரி, நவ. 26

பூநகரி, மட்டுவில்நாடு அ.த.க. பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் இன்மையால் அந்தப் பகுதியில் உள்ள பொதுநோக்கு மண்டபம் ஒன்றில் இயங்கிவருகிறது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டியங்கும் இந்தப் பாடசாலையில் 50 மாணவர்கள் கற்று வருகின்றனர்.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு தற்போது கோட்டக் கல்வி அலுவலகம் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதுவரை இதற்கான பதில்கள் கிடைக்காத நிலையில், ஒரு சிறிய கட்டடத்துக்குள் 5 வகுப்புக்களை நடத்துவதில் நெருக்கடி தோன்றியுள்ளதாக பாடசாலை ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையில் 50 மாணவர்கள் கற்று வருகின்றனர்.

குறிப்பாக மழை காலங்களில் கூடுதலான நெருக்கடி நிலவுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மாணவர்களது கல்விச் செயற்பாட்டைப் பாதிக்காத வகையில் இந்தப் பாடசாலைக்கு தற்காலிக கொட்டகையை யாவது அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-18)



கிளிநொச்சி திருநகர் இந்து மயானம் கனரக வாகனம் கொண்டு துப்புரவு செய்யப்பட்டு புனரமைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ஐ-426)

# கட்டடப் பணிகள் மீள ஆரம்பம்

துணுக்காய், நவ. 26

துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருடமாக ஒப்பந்த இழுபறி காரணமாக தடைப்பட்டிருந்த கட்டட வேலைகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் பணிப்பின்பேரில் ஒப்பந்தம் மாற்றம் செய்யப்பட்டு கட்டடப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய்ப் பிரதேச செயலகம் தற்காலிக கட்டடத்தில் இயங்கிவரும் நிலையில், அதற்கான இரண்டுமாடிக் கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டு வந்தது. இதன்போது கட்டட ஒப்பந்தத்தில் ஏற்பட்ட தடையால் கட்டுமானப்பணிகள் பாதிப்படைந்திருந்தன. (ஐ-18)

# தமது அரசியல் உரிமைகளையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்

மன்னார்,நவ. 26

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைத்தான் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் இந்த நாட்டின் இரண்டாம்தரப் பிரஜைகள் அல்லர். பெரும்பான்மை இன மக்களைப் போன்று அவர்களும் அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கவே விரும்புகின்றனர்- இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மக்கள் பேரவையின் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்.

மக்கள் மத்தியில் புரிந்துணர்வையும் உறவையும் கட்டி எழுப்பும் நோக்கோடு தேசியச் சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த 12 பேர்கொண்ட மக்கள் பேரவை உறுப்பினர்கள் மன்னாருக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இந்தக் குழுவினர், கடந்த வியாழக்கிழமை மன்னார் ஆர்.பி.ஆர். நிறுவனத்தில் மன்னார் மக்கள் பேரவையினரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இங்கு, உரையாற்றும் போதே தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து 'உரையாற்றுகையில்-

வடக்கு கிழக்கு மக்கள் அரசிடமிருந்தோ ஏனைய நிறுவனங்களிடமிருந்தோ உலக நாடுகளிடமிருந்தோ சலுகைகளை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தமது உரிமைகளைத்தான் எதிர்பார்க்கின்றனர்.

போர் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் அதன் பாதிப்புக்களிலிருந்து மக்கள் விடுபடவில்லை.

முகாம்களில் இருந்த அவர்கள் காடுகளுக்குள் கொண்டுபோய் விடப்பட்டுள்ளனர். அவர்களுக்கென சொந்தமான வீட்டுக் காணிகள், தோட்டக்காணிகள், வயல் காணிகள் இருந்தும் அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதி மறுக்கப்படுகிறது.- என்றார். (ஐ-12)

# பூநகரி - முக்கொம்பன் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன், நவ. 26

பூநகரி - முக்கொம்பன் வீதி நீண்டநாள்களாகப் புனரமைக்கப்படாமையால் அந்த வீதியூடான மக்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியைப் புனரமைப்பதாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தபோதும் இன்றுவரை வீதித்திருத்தப் பணிகள் நடைபெறவில்லை.

இதனால் பூநகரிக்கும் முக்கொம்பனுக்கும் இடைப்பட்ட கிராமங்களில் வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் இந்த வீதியைப் பயன்படுத்தும் வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னேரிக்குளத்தில் இருந்து காலை 6 மணிக்குப் புறப்படும் தனியார் பஸ் கந்தபுரம் - முக்கொம்பன் - பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும்போது இடைப்பட்ட இந்தப் பகுதியில் நீண்ட நேரம் பயணிக்க வேண்டியுள்ளது. இது போல யாழ்ப்பாணத்திலிருந்து கந்தபுரம் செல்லும் இ.போ.ச. பஸ்ஸும் வீதி சீரின்மையால் உரிய நேரத்துக்கு வந்தடைவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

10 கிலோ மீற்றர் தூரமான இந்த வீதியைப் புனரமைத்து தடையற்ற போக்குவரத்துக்கு உதவுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

10 கிலோ மீற்றர் தூரமான இந்த வீதியைப் புனரமைத்து தடையற்ற போக்குவரத்துக்கு உதவுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

# வினாசியோடைக் கிராமத்துக்கு தற்காலிக போக்குவரத்து வசதி

பூநகரி, நவ. 26

நீண்ட நாள்களாக போக்குவரத்து வசதியின்றியிருந்த பூநகரி வினாசியோடைக்கு, பூநகரி கோட்டக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் தற்காலிக போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வினாசியோடை அ.த.க. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பொதுவாக கடந்த செவ்வாய்க் கிழமையில் இருந்து இந்தத் தற்காலிக சேவை இடம்பெறுகின்றது.

வினாசியோடை கிராமத்தில் 200 வரையான குடும்பங்கள் வசிக்கின்றன. பூநகரி வாடியடியில் இருந்து 18 கிலோமீற்றர் தூரத்தில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. வினாசியோடை அ.த.க. பாடசாலை தரம் ஒன்று தொடக்கம் தரம் -5 வரையான வகுப்புக்களைக் கொண்டு 80 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

இந்தக் கிராமத்துக்கான வெளித்தொடர்புப் போக்குவரத்து வசதியின்மையால் சீராக இல்லை.

இவ்வாறான நெருக்கடி நிலை குறித்து பல தடவைகள் பிரதேச சபையிடமும், பூநகரி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதும் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

# குளம் உடைப்பெடுத்ததால் நெற் பயிர்களுக்கு பாதிப்பு

மாந்தை கிழக்கிலுள்ள கணுக்காய்க்குளம் உடைப்பெடுத்ததால் 42 ஏக்கர்களில் பயிரிடப்பட்ட நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் விவசாயிகளுடன் இணைந்து தற்காலிகமான புனரமைப்புப் பணிகளை குளத்தில் மேற்கொண்டனர்.

ஆனால் குளத்திலிருந்து கணிசமான நீர் வெளியேறியுள்ளதால் இந்தக் குளத்தின் கீழான 42 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இந்தக் குளம் புனரமைக்கப்படாமை மற்றும் போர்க் காலத்தில் குளத்தின் அணைக்கட்டு அரணாகப் பயன்படுத்தப் பட்டமை ஆகியவை இந்தக் குளம் உடைப்பெடுத்தமைக்கான பிரதான காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தை மையமாகக் கொண்டு 7 துறைகளில் பெரும் அபிவிருத்தி

## இந்தோனேஷிய நிறுவனம் முன்வந்தது

யாழ்ப்பாணம், நவ.26

தீவகத்தை மையமாகக் கொண்டு ஏழு துறைகளில் பெரும் அளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு இந்தோனேஷிய நிறுவனமான பி.ரி.பனோறோமா என்ற நிறுவனம் ஜனாதிபதியிடம் அனுமதியைப் பெற்றுள்ளது என்று நிறுவனத் தலைவர் வா.இராசையா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தீவகம் தெற்குப் பகுதியில் உல்லாசத் துறை,கைத்தொழில், வேலைவாய்ப்பு, கல்வி, விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளில் முன்னிறுத்தி இந்தக் கலப்பு அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கு இது தொடர்பாக விரிவான எண்ணக்கரு பத்திரம் வழங்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

தீவகம் தெற்கு கடலை மையமாக வைத்து முன்னெடுக்கும் பெரிய அபிவிருத்தி திட்டத்துக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்வரும் கரையோரம் பேணல் முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் 5 ஆண்டுகளை மையமாக வைத்து இந்தத் திட்டம் நகர்த்தப்படவுள்ளது.

தீவக, யாழ். கலப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் அடுத்த ஜனவரியில் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, இந்தோனேஷிய உட்கட்டுமான நிபுணர்களின் ஆலோசனை பெறப்படவுள்ளது.- என்றார்.

இதன் முதற்கட்டமாக பி.ரி.பனோறோமா நிறுவனத் தலைவர் வா.இராசையா தலைமையிலான ஜப்பான் குழு உல்லாசத்துறை, கைத்தொழில் துறை, வேலைவாய்ப்பு, கல்வி, பயிற்சி, விவசாயம், மீன்பிடித் துறை தொடர்பாக யாழ்.ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளது.

கடல்வளம் சார்ந்த துறைகளையும் ஆராய்ச்சி செய்துள்ளனர். இதேவேளை, யாழ்.கலப்பு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முதலீட்டு சபை தலைவர், மத்திய சுற்றாடல் அமைச்சு ஆகியோரின் விசேட கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



மருதனார்மடம் காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் சேதமடைந்த வாகனங்கள். (ம-86)

# மண்டைதீவு ஆதனவரி பதிவுகள் டிசெம்பரில்

யாழ்ப்பாணம், நவ.26

வேலணை பிரதேச சபைக்கு உட்பட்ட மண்டைதீவு உப அலுவலக பிரிவு ஆதன பதிவு டிசெம்பர் மூன்றாம் திகதி முதல் இடம்பெறும்.

வேலணை பிரதேச சபை தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேலணைப் பிரதேச சபை 5 உப அலுவலகங்களைக் கொண்ட பெரிய பிரதேசம். இந்தப் பிரதேசம் வேலணை, நயினாதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய பரந்த பிரதேசங்களைக் கொண்டது.

இதில் ஏற்கனவே நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய நான்கு உப அலுவலகங்களும் ஆதன மீள்பதிவை ஏற்கனவே மேற்கொண்டுள்ளன.

தற்போது புங்குடுதீவு உப அலுவலக பதிவு இடம்பெறுகின்றது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மண்டைதீவுக்கான ஆதன மீள்பதிவு வேலைகள் மண்டைதீவு உப அலுவலகத்தில் இடம்பெறும்.

பொறுப்பதிகாரி பா.துளசிதாசன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். ஆதன. மீள்பதிவின் போது காணி உறுதி, நிலவரைபடம், குடும்ப அட்டை, அடையாள அட்டை மற்றும் விவரங்களின் மூலப்பிரதியும் அதன் போட்டோப் பிரதியையும் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்- என்று கூறினார். (ம-50)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.26

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றவாளிக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இவ்வாறு ஹன்ரர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற போதே பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார் சாரதி. குறித்த நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அதனையடுத்து அவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் சிறைத்தண்டனை அனுபவிக்க நீதிமன்று உத்தரவிட்டது.

எனினும் குற்றவாளி உடனேயே பணத்தைச் செலுத்திச் சென்றார்.

மணல் ஏற்றிய ஹன்ரர் வாகன உரிமைக் கோரிக்கைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம-4)



யாழ்.நகரில் கே.கே.எஸ்.வீதியின் அகலிப்புப் பணிக்காக வீதியோரம் வெட்டப்பட்ட பகுதிகளில் நேற்றுப் பெய்த மழையை அடுத்து வெள்ளம் நிரம்பிக் காணப்படுகின்றது. வீதியோரம் வெட்டப்பட்ட இந்தப் பகுதிக்குப் பாதுகாப்பு எதுவும் ஏற்படுத்தப்படாத நிலையும் காணப்படுகிறது. கே.கே.எஸ்.வீதியில் மட்டுமல்ல குடாநாட்டிலுள்ள பெரும்பாலான வீதிகளும் இதே நிலையிலேயே உள்ளன. (ம-17)

# கோழி இறைச்சியை வாங்கிவிட்டு காசோலை கொடுத்து ஏமாற்றினாராம்

## யாழ். பொலிஸ் நிலையத்தில் தென்னிலங்கை வியாபாரி முறைப்பாடு

வலி.வடக்கு, நவ.26

கோழி இறைச்சியை வாங்கிவிட்டு காசோலையைக் கொடுத்து ஏமாற்றியுள்ளார் என்று வியாபாரி ஒருவருக்கு எதிராகத் தென்னிலங்கை வியாபாரி ஒருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் 2 லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி இறைச்சியை பிந்திய திகதியிட்ட காசோலையைக் கொடுத்துக் கொள்வனவு செய்துள்ளார்.

காசோலை கொடுக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் அதற்கான பணம் வங்கியில் இடப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த தென்னிலங்கை வியாபாரி கடந்த 10 மாதங்களாகப் பணத்தைப் பெறுவதற்கு முயன்று வந்துள்ளார். அது பயனளிக்காத நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். யாழ். பிரதிப்பொலிஸ் மா அதிபர், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ம-86)

## உற்பத்தியாளர் நலன் கருதி

# கடல் உலர் உணவு விற்பனை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.26

'ஜெய்க்கா' நிறுவனத்தின் 26 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் 'பாசிக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். நகரில் கடல் உலர் உணவு விற்பனை நிலையம் யாழ். மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாச கட்டடத் தொகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'ஜெய்க்கா' நிறுவனத்தின் 3 வருட வேலைத் திட்டத்தில் கடல் உலர் உணவுகளைப் பதப்படுத்துதல் தொடர்பாக பெண் தலைமைத்துவம் கொண்டவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் காரைநகர், வேலணை, மருதங்கேணி, பருத்தித்துறை வடக்கு ஆகிய நான்கு பிரதேச செயலகங்களிலும் உள்ள வேலணை துறையூர், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மணற்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களுக்கும் கடற்றொழிலை மேற்கொள்ளும் குடும்பப் பெண்களுக்கும் கருவாடு பதனிடுதல் தொடர்பாகப் பயிற்சியளிக்கப்பட்டது.

3 வருட பயிற்சியில் சுத்தமானதாகவும், சுகாதாரமாகவும் கடல் உணவுகளை பதப்படுத்துதல் தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டது.

இவர்கள் நேரடியாக முகவர்களைத் தெரிவு செய்து விற்பனை செய்ய முடியாத நிலையுள்ளது. அதற்கு தேவையான நிதியும் இவர்களிடம் இல்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த நிறுவனம் விற்பனை நிலையத்தை ஆரம்பித்து உற்பத்தியாகும் உணவுகளை ஒரே நிலையத்தில் வைத்து விற்பனை செய்கிறது.

இதனால் உற்பத்தியாளர்களுக்கு போதிய வருமானம் கிடைக்கக் கூடியதாகவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-13)

# மேட்டு நிலப் பயிர்கள் தப்பிப் பிழைத்தன

யாழ்ப்பாணம், நவ.26

மழையின்றி வாடிய நிலையில் இருந்த மேட்டுநிலப் பயிர்கள் நேற்று பெய்த மழையால் தப்பிவிட்டன.

கடந்த வாரங்களில் ஏற்பட்ட வறட்சியான கால நிலையால் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்படும் நிலைமை காணப்பட்டது.

மேட்டு நிலங்களில் தண்ணீர் முழுமையாக வற்றிக் காணப்பட்ட நிலையில் நெற்பயிர்கள் வாடிப் போய் இருந்தன.

இந்த நிலையில் நேற்று குடாநாட்டில் பரவலாகப் பெய்த மழையால் வயல்களில் வாடியிருந்த நெற்பயிர்கள் செழித்துக் காணப்படுகின்றன என்று விவசாயி ஒருவர் கூறினார். (ம-17)

# வெங்காயத்தின் விலை நாளாந்தம் உயர்கிறது

யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை நாளாந்தம் உயர்ந்து வருகின்றது. சராசரியாக ஒரு அந்தர் 3 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த வெங்காயம் தற்போது 6 ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

வன்னி, திருகோணமலை மாவட்டங்கள் மாத்திரமன்றி யாழ். மாவட்டத்திலும் கடும் வறட்சியால் சிறுபோக வெங்காயச் செய்கையின் விளைச்சல் வெகுவாகக் குறைவடைந்திருந்தது.


அத்துடன் பெரும்போக வெங்காயச் செய்கை விரைவில் ஆரம்பமாக இருப்பதால் விதை வெங்காயத்துக்கு பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவற்றின் காரணமாகவே வெங்காயத்தின் விலை உயர்வடைந்துள்ளது என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பெரும்போக வெங்காயச் செய்கை ஆரம்பமாகும் வேளை வெங்காயத்தின் விலை மேலும் சில ஆயிரம் ரூபா வரை உயர்வடையலாம் என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிரியின் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கக் கூடிய சுப்பர்சொனிக் ஏவுகணை

### இந்தியா வெற்றிகரமாகச் சோதனை



எதிரி நாட்டு ஏவுகணையைத் தாக்கி அழிக்கக் கூடிய, அதிநவீன சுப்பர்சொனிக் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

ஒரிசா மாநிலம் பலசோர் பகுதியில் நேற்று முன்தினம் சண்டிபூர் கடற் பகுதியில் இருந்து ஒரு ஏவுகணை ஏவப்பட்டது.

அதன்பின்னர் நான்கு நிமிடம் கழித்து, வீலர் தீவிலி ருந்து இடைமறித்து தாக்கும் வல்லமை படைத்த சுப்பர்சொனிக் ஏவுகணை ஏவப்பட்டது. பின் கண்காணிப்பு ராடர்கள் தரும் சமிக்ஞை யின் உதவியுடன் சண்டிபூர் பகுதியிலிருந்த சோதனை ஏவுகணையை சுப்பர்சொனிக் ஏவுகணை இடைமறித்து நடுவானில் தாக்கி அழித்தது.

சண்டிபூர், பலசோரிலிருந்து 15 கி.மீ., தொலைவிலும் வீலர் தீவு சண்டிபூரிலிருந்து, 70 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

குறித்த சுப்பர்சொனிக் ஏவுகணை எட்டாவது முறையாக இந்தியாவில் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



இந்தியா சென்றுள்ள பிரேஸில் முன்னாள் ஜனாதிபதி லூயிஜ் இனாசியோ லூலா டி சில்வா, தலைநகர் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

## மதுரை ஆதீனம், நித்தியின் வழக்கு ஒத்திவைப்பு

மதுரை ஆதீனம், நித்தியானந்தா தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அருணாகிரி சுவாமிகள் தொடர்ந்த வழக்கில், பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரி நித்தியானந்தா தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை ஆதீன மடத் துக்குள் நுழைய நித்தியா னந்தா மற்றும் அவரது சீடர்களுக்கு தடை விதித் தும், மதுரை ஆதீனமும் நித்தியானந்தாவும் சேர்ந்து ஆரம்பித்த அறக்கட்டளை கலைப்பு உள்ளிட்டவை குறித்தும் மதுரை ஆதீனம் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவுக்கு பதில் அளிக்கக் கோரி நித்தியா னந்தாவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இது தொடர்பான விசாரணையின் போது, நித்தியானந்தா தரப்பில் பதில் மனு தாக்கலுக்கு அவகாசம் கேட்கப்பட்டது. (வ)


# ஐ.நா. தீர்மானங்களால் அமைதி ஏற்பட்டு விடாது

### தலாய்லாமா கருத்து

சிவகிரி, நவ.26

ஐ.நா. தீர்மானங்களால் மட்டும் அமைதி ஏற்பட்டு விடாது என்று திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வர்க்கலா அருகில் உள்ள சிவகிரியில் ஸ்ரீநாராயண மடத்தின் 80 ஆவது வருடாந்திர யாத்திரை நிகழ்ச்சியில் தலாய் லாமா நேற்றுமுன்தினம் உரை யாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



புதிய சகாப்தம் (நூற்றாண்டு) இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது. இது, 2012ஆம் ஆண்டு. இந்த நூற்றாண்டில் இன்னும் 88 வருடங்கள் உள்ளன. இந்த நூற்றாண்டை அமைதியானதாக மாற்றும் வாய்ப்பு எம்மிடம் உள்ளது.

எனினும், அமைதி என்பது வெறும் ஐ.நா. தீர்மானங்களால் மட்டும் வந்து விடாது. அது வானத்தில் இருந்தும் குதிக்காது. கோபத்தையும் வெறுப்பையும் மனிதன் வெற்றிகொள்ள வேண்டும்.

அச்சத்தின் அடிப்படையிலேயே கோபமும் வெறுப்பும் ஏற்படுகின்றன. சமூகங்கள், தனிநபர்கள் அல்லது நாடுகளிடையே அன்பின் மூலம் மட்டுமே நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். மற்றவர்களை ஏமாற்றுவது, அச்சுறுத்துவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் 20 ஆம் நூற்றாண்டு வளர்ச்சியைக் கண்டபோதிலும், அது வன்முறை மற்றும் இரத்தம் சிந்துதலின் சகாப்தமாகவே இருந்ததாக ஆன்மிகத் தலைவர்கள் கூறியுள்ளனர். அறிவியலும் தொழில்நுட்பமும் அழிவு, அச்சம் ஆகியவற்றைக் கொண்டு வருகின்றன. வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, கடந்த நூற்றாண்டில் வன்முறை, உள்நாட்டுப் போர் ஆகிய வற்றில் 20 கோடி பேர் கொல்லப்பட்டனர். மனித உயிர்களை எதிர்த்து அணு ஆயுதங்களும் வீசப்பட்டன. அது மிகவும் பயங்கரமானது.

எனவே இந்த நூற்றாண்டை அமைதி சகாப்தமாக்க நாம் முயற்சிக்க வேண்டும். இந்தியா உட்பட உலகின் பல பகுதிகளிலும் ஊழல் வேரூன்றி வருகிறது. ஊழலும் வன்முறையின் ஒரு வடிவம்தான். இந்தியாவின் அகிம்சை மற்றும் மதச் சார்பின்மைப் பாரம்பரியம் இன்றையஉலகுக்குமிகவும்பொருத்தமானதே- என்றார். (வ)

## 'ஆம் ஆத்மி' என்ற பெயரில் கெஜ்ரிவாலின் புதிய கட்சி



டில்லி, நவ26

சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே குழுவிலிருந்து பிரிந்த அர்விந்த் கெஜ்ரிவால், தனது புதிய கட்சிக்கு 'ஆம் ஆத்மி' என பெயர் சூட்டியுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் மேற்படி பெயர் முன்மொழியப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் கெஜ்ரி வால், சாதாரண மக்களே தமது கட்சியை உருவாக்கியதாக புகழ்ந்தார். அரசின் ஊழல் மற்றும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு ஆம் ஆத்மி கட்சி தீர்வை ஏற்படுத்தும்.

கட்சியின் சார்பில் புதிய குழுக்களை ஏற்படுத்தி நாடு முழுவதும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும்- என்றார்.

புதிய கட்சியின் பெயர் சூட்டு விழா அரங்குக்குள் செல்ல தமிழகத்திலிருந்து சென்ற பிரதிநிதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து அவர்கள் கட்சியின் ஒருங்கிணைப்பாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் விழா அரங்குக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது.

இந்தநிலையில் ஆம் ஆத்மி என்பது தங்களது ஸ்லோகன் என தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சி, புதிய பெயரை அர்விந்த் கெஜ்ரிவால் திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (வ)

## கவலைக்கிடமான நிலையில் குஜ்ரால்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் (வயது 92) கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களாக உடல்நலக்குறைவுடன் காணப்பட்ட குஜ்ரால், குர்கானில் மெடிசிட்டி மேதாந்தா மருத்துவமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை சேர்க்கப்பட்டார்.

பரிசோதனையில் அவரது நுரையீரலில் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையில் குஜ்ராலுக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து அவருக்கு செயற்கைச் சுவாசக் கருவிகள் பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள குஜராலை அவரது மகனும் ஷிரோமணி அகாலி தளம் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான நரேஷ் குஜ்ரால் கவனித்து வருகிறார். (வ)

# 200 அடி பள்ளத்தில் உருண்டது பஸ்

### 7 பேர் சாவு; 42 பேர் காயம்

வால்பாறை, நவ.26

வால்பாறை மலையில் இருந்து 200 அடி பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விழுந்ததில் 2 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். படுகாயமுற்ற 42 பேர் மீட்கப்பட்டு பொள்ளாச்சி, கோவை அரசு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வால்பாறையிலிருந்து பழனி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ஆழியாறு அருகே 9 ஆவது கொண்டை ஊசி வளைவு பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து 200 அடி பள்ளத்தில் கவிழ்ந்து உருண்டு விழுந்தது.

உடனே விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பஸ்ஸில் 60 பேர் வரை பயணம் செய்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுவரையிலும் 42 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஏனைய 7 பேரில் 3 பேர் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இன்னும் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இரவு நேரம் என்பதால் இன்னும் பயணிகள் பள்ளத்தாக்கில் சிக்கியிருக்கின்றனரா என மீட்புப் படையினர் தேடிவருகின்றனர்.



விபத்தில் சிக்கியவர்களுக்குத் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் நேரில் சென்று ஆறுதல் கூறியதுடன் சிகிச்சை விவரம் குறித்து கேட்டறிந்தார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒபாமா உரையாற்ற உறங்கினார் ஹிலாரி



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உரையாற்றிக் கொண்டிருக்க, உறங்கிப் போனார் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளிங்டன்.

மியன்மாருக்குச் சென்றுள்ள முதல் அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமையை பெற்றுள்ளார் ஒபாமா. யாங்கூன் பல்கலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை ஆற்றினார். அந்த உரையை சுமார் 1500 பேர் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் மேடையில் அமர்ந்திருந்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனோ நன்றாகத் தூங்கிவிட்டார். அவர் தூங்கும் புகைப்படத்தை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. தொடர் பயணம் காரணமாக அசதியால் அவர் தூங்கி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் போராட்டம்

## எகிப்து ஜனாதிபதி முர்ஸியின் சர்வாதிகாரத்தை எதிர்த்து



எகிப்தில் ஜனாதிபதி முகமது முர்ஸிக்கு எதிராக மக்கள் மீண்டும் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

எகிப்து ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரத்தை வழங்கும் அரசியல் சாசன அறிவிப்பை ஜனாதிபதி முகமது முர்ஸி வெளியிட்டார்.

அதனையடுத்து ஜனாதிபதி முர்ஸியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து நாடு முழுவதும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளனர்.

இந்தநிலையில் ஜனாதிபதியின் அறிவிப்பை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளன. இதற்காக எதிர்க்கட்சி தொண்டர்கள் அடங்கிய குழுவொன்று கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் கூடாரம் அமைத்துத் தங்கியுள்ளது. அவர்களுடன் நேற்றுக் காலையில் மேலும் சில தொண்டர்கள் சேர முயற்சித்தபோது, பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

ஏற்கெனவே, முன்னாள் ஜனாதிபதி முபாரக்கை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## முர்ஸிசியின் முடிவு அதிருப்தி அளிக்கிறது

**– அமெரிக்கா**

எகிப்து ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரம் என்று வெளியான அறிவிப்புக்கு அமெரிக்கா அதிருப்தி தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலாண்ட் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

''எகிப்து ஜனாதிபதியின் அறிவிப்பு அந்த நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கும் கவலையளிக்கிறது. அதிகாரம் ஒரு தனி நபரிடமோ, அமைப்பிடமோ குவிந்திருக்கக் கூடாது. இப்போது எகிப்தில் ஏற்பட்டுள்ள அரசியல் சாசன வெற்றிடத்துக்குத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எகிப்தின் சர்வதேச உடன்பாடுகள், பொதுமக்களின் அடிப்படை உரிமைகள், சமநிலையுடன் கூடிய புதிய அரசியல் சாசனத்தை வடிவமைப்பது அவசியம். இந்த விஷயத்தில் அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து அமைதியான முறையில் தங்கள் வேறுபாடுகளைக் களைந்து தீர்வுகாண வேண்டும்'' என்றார்.

# வரைமுறை மீறும் அமெ. கடற்படை

### குற்றம்சாட்டுகிறது ஈரான்

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிராக நடப்பதாகவும், கடற்பகுதிகளில் அத்துமீறி நுழைவதாகவும் அமெரிக்கா மீது ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ - மூனுக்கு ஐ.நாவுக்கான ஈரான் தூதர் முகமது கஸாயி கடிதம் எழுதி உள்ளார்.

இதில், ''அமெரிக்க கடற்படையினர் ஈரான் நாட்டின் வான்பகுதியில் அத்துமீறி நுழைகின்றனர்.

கடற்கரையோரத்தில் அமைந்துள்ள புஷ்ஹெர் நகரின் வான்பகுதியில் ஒக்ரோபர் மாதம் 7 முறையும், நவம்பர் மாதம் ஒரு முறையும் அமெரிக்க கடற்படையினர் அத்துமீறியுள்ளனர்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு எதிராக அமெரிக்கா நடந்து வருகிறது. இந்த நடவடிக்கையினால் ஏதேனும் பாதகமான விளைவுகள் ஏற்படின் அதற்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும்.

அமெரிக்காவின் அத்துமீறல் நடவடிக்கையை ஐ.நா. கண்டிக்க வேண்டும்'' என்றுள்ளது. இது வரையிலும் ஈரானின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லை.

**''இந்த நடவடிக்கையால் ஏதேனும் பாதகமான விளைவுகள் ஏற்படின் அதற்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும்.''**



வியட்நாமின் ஹனோய் நகரில் புத்தமத துறவிகளின் மாநாடு நடைபெற்று வருகிறது. அதில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான துறவிகள் ஊர்வலமாகச் சென்றனர்.

## சிலைமீது ஏறி நின்று நிர்வாணமாக 'சாகஸம்'

### இளைஞரின் 3மணி நேர சேஷ்டை



பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அலுவலகத்துக்கு அருகில் உள்ள சிலையில் இளைஞர் ஒருவர் நிர்வாணமாக ஏறி நின்று கொண்டார். அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பிரிட்டனில் லண்டன் மையப்பகுதியில் பிரதமர் டேவிட் கமரூன் அலுவலகம் அமைந்துள்ளது. அலுவலகம் எதிரே இருக்கும் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இளவரசர் ஜோர்ஜின் நினைவுச் சின்ன சிலை உள்ளது. அதன்மீது இந்த இளைஞர் நிர்வாணமாக ஏறி நின்று கொண்டார். சிலை போல எழுந்து நிற்பது, கால்களை மடக்கி உட்கார்ந்து கொள்வது என பல சேஷ்டைகளையும் செய்தார்.

இந்தச் 'சகாஸ'ச் செயலைப் பார்க்கப் பெரும் கூட்டமும் கூடியது. இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. சுமார் 3 மணி நேரத்துக்கு பீறகு பொலிஸார் வந்து இளைஞரைக் கைதுசெய்து அழைத்து சென்றனர். மனநிலை பாதிப்பு பிரிவின் கீழ் அவர் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்.

# ஆடைத் தொழிலகத்தில் தீ

## 124 பேர் சாவு; பலர் ஆபத்தான நிலையில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பயங்கரம்

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 124 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியது.

நேற்றுமுன்தினம் 9 அடுக்குகளைக் கொண்ட இந்த ஆடை தொழிற்சாலையின் கீழ்த்தளத்தில் ஏற்பட்ட தீ வேகமாக அனைத்து இடங்களுக்கும் பரவியது. இதனால் தீயைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

மீட்புப் பணிகளில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தீயணைப்புப் படையின் அதிகாரி ஒருவர்,



''நேற்றுக்காலை வரை 120 சடலங்களை மீட்டுள்ளோம். மீட்புப் பணிகள் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். தீயினால் கருகி பலர் உயிரிழந்திருக்கும் அதேவேளை, உயிர் தப்பும் பொருட்டு கட்டடத்தில் இருந்து குதித்ததாலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. பலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக்கூடும்'' என்று தெரிவித்தார்.

மீட்புப்பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷில் ஏறத்தாழ 4,000 ஆடைத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை போதிய பாதுகாப்பு வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

## நாய் கடித்தால் தபால் இல்லை

### பிரிட்டன் தபால்துறை எச்சரிக்கிறது

தபால்காரர்களை நாய் கடித்தால், அந்த நாயின் உரிமையாளருக்குத் தபால் விநியோகம் செய்வதை நிறுத்திவிடுவோம். இவ்வாறு எச்சரித்துள்ளது பிரிட்டன் தபால் துறை.

பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும் தபால்காரர்கள், 3000 பேர் நாய்க்கடிக்கு ஆளாகின்றனர். நாய் உரிமையாளர்களைத் தண்டிக்க உரிய சட்டங்கள் இல்லாததால் தபால்காரர்கள் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

நாய் கடியால் பாதிக்கப்பட்ட தபால்காரர்கள் ஒன்று சேர்ந்து, இதற்கு உரிய தீர்வு காணும்படி வற்புறுத்தியுள்ளனர். தபால்காரர்களைப் பாதுகாக்க உரிய சட்டங்கள் இயற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தபால்காரர்களைக் கடிக்கும் நாய்களின், எஜமானர்கள் மீது வழக்குத் தொடரவும், அவர்களது வீட்டுக்கு தபால்கள் விநியோகிப்பதை நிறுத்தவும் விதிமுறைகளை வகுக்கப்போவதாக 'றோயல் மெயில்' நிறுவனம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து



## சீனாவில் 18 பேர் சாவு

சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 18 பேர் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கில் உள்ள குயிசோவ் மாகாணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து நடைபெற்ற போது சுரங்கத்தில் 28 பேர் பணியில் இருந்தனர். நிலக்கரி வாயு வெடித்துச் சிதறியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

"இந்தவிபத்தில் மூச்சுத்திணறி 18 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காப்பாற்றப்பட்டனர். மற்றையவர்களின் நிலை பற்றி இதுவரை தகவல் எதுவுமில்லை. மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன." - என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

சீனாவில் சுரங்க விபத்துக்களில் கடந்த வருடம் மட்டும் 1973 பேர் உயிரிழந்துள்ளனர். நிலக்கரிச் சுரங்கங்களில் போதுமான பாதுகாப்பு வசதிகள் காணப்படாமையே இந்த விபத்துக்களுக்குக் காரணம் என்று குற்றம்சாட்டப்படுகிறது.

## உணவு விடுதியில் வெடிவிபத்து

### 14 பேர் சாவு; 47 பேர் படுகாயம்



சீனாவில் உணவு விடுதியொன்றில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஷாங்சி மாகாணத்தில் உள்ள உணவு விடுதியொன்றிலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மக்கள் உணவருந்திக் கொண்டிருந்த சமயம் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இதன்போது சம்பவ இடத்தில் 6 பேரும், மருத்துவமனையில் 8 பேரும் உயிரிழந்தனர்.

47 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வெடி விபத்து காரணமாக உணவு விடுதியின் பல பகுதிகள் சேதமடைந்துள்ளன.

இந்த வெடி விபத்துக்கு எரிவாயுக் கசிவே காரணம் எனக் கூறப்படுகிறது.

## சீன ஆதிக்கத்தை எதிர்த்து திபெத்தியர் தீக்குளிப்பு



திபெத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து இளைஞர் தீக்குளித்துள்ளார்.

திபெத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கண்டித்து திபெத்தியர்கள் பல்வேறு வகையில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பலர் தீக்குளித்து தங்கள் உயிரை மாய்த்து வருகிறார்கள்.

இந்த நிலையில் திபெத்திலுள்ள லூஷி என்ற இடத்தில் தாடின் கயூப் (வயது 23) என்பவர் தீக்குளித்தார்.

இவர் முன்னாள் துறவியாவார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அங்கு உயிரிழந்தார்.

இந்த மாதத்தில் மட்டும் இவரையும் சேர்த்து 18 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

## எயிட்ஸ் நோயாளியின் சிகிச்சைக்கு மறுப்புக் கூறினால் உரிமம் ரத்து

### சீன மருத்துவமனைகளுக்கு எச்சரிக்கை

எயிட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மறுக்கும் மருத்துவமனைகளின் உரிமம் ரத்துச் செய்யப்படும் என சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவில் ஏழு இலட்சம் பேர் எயிட்ஸ் மற்றும் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டிருந்த டியான் ஜின் நகரைச் சேர்ந்த வாலிபருக்கு நுரையீரல் புற்றுநோய்சிகிச்சை மேற்கொள்ள வேண்டி இருந்தது.

ஆனால் அவருக்கு சிகிச்சை அளிக்க எந்தவொரு மருத்துவமனையும் முன்வரவில்லை. இது குறித்து அவர் சீன அரசிடம் முறையிட்டார்.

இதனையடுத்து சீன அரசு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. அதில்,

"எயிட்ஸ்நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்க தயங்கக் கூடாது. உண்மையிலேயே போதிய வசதிகள் இல்லாத மருத்துவமனை என்றால் வேறொரு மருத்துவமனையை பரிந்துரை செய்யலாம்.

அத்துடன் எயிட்ஸ் நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும். அதனைச் செய்யாத பட்சத்தில் அந்த மருத்துவ மனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு மூடப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலாலாவுக்கு பிரிட்டனில் வீடு

தலிபான்களின் தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் சிறுமி மலாலாவுக்கு பிரிட்டனில் நிரந்தரமாக தங்க வீடு ஒதுக்கப்பட உள்ளது.

கடந்த ஒக்ரோபர் 9ஆம் திகதி தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளான மலாலாவுக்கு பிரிட்டன் அடைக்கலம் கொடுத்திருக்கிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அரசு, மலாலாவின் தந்தைக்கு பிரிட்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

தற்போது ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டிருப்பதால் பிரிட்டனில் வீடும், வாகன வசதியும் வழங்கப்படுகின்றன. மலாலாவின் உடலில் இருக்கும் குண்டு அகற்றப்பட்ட பின்பு இந்த வீட்டில்தான் அவர் வசிக்க இருக்கிறார் எனக் கூறப்பட்டது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

**சோமசுந்தரம் ஈஸ்வரி**



மலர்வு
22.09.1938

உதிர்வு
27.10.2012

ஒரு மாத காலம் ஓடிச் சென்றதே அம்மா!
உங்களின் மறைவுத்துயர் ஆற்றுவாரில்லையே!
விழி மூடித்தூங்க இயலாது
வேதனையில் தவிக்கின்றோம் அம்மா!
இன்னுமோர் பிறவி எடுத்து
மீண்டும் வாருமம்மா எமக்குத் தாயாய்

533, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

(சி/070)(45.6.7)

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்மகிழ -14.12.1935



மனம்நெகிழ -17.11.2002
திதி: திரயோதசி(26.11.2012)

அமரர்

**சுப்பிரமணியம் கந்தசாமி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

எங்களின் உயர்வுக்காக உங்களது உடலையும் பாராது
உயிரினை துச்சமென நினைத்த உத்தம ஆசான்—எங்கள் ஐயா
எறும்புபோல் உங்கள் சுறுசுறுப்பான உழைப்பிற்கு
ஈடு இணை ஏது இவ்உலகினிலே —ஐயா ஆண்டுகள் பத்து ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம் தங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் குறுக்குத் தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(25713) (5-6-7)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 59 ஆம் நாள் நினைவஞ்சலியும் நினைவு மலர் வெளியீடும்



மலர்வு
20.06.1981

உதிர்வு
30.09.2012

அமரர் **புவனேந்திரன் ஈழநாதன்**

( எழுத்தாளர், கவிஞர், பொறியியலாளர், தொழிலதிபர்)

30.09.2012 ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் சிவபதமடைந்த அமரர் புவனேந்திரன் ஈழநாதன் அவர்களின் 59 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் நினைவுமலர் வெளியீடும் நாளை (27.11.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தவிர்க்க முடியாத வசதியீனங்கள் காரணமாக நேரடியாக அழைக்க முடியவில்லை. தயவு செய்து இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

(சி/1943)(6.8)

தேவன் குறிச்சி ( இலக்கணாவத்தை),
சமரபாகு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

முத்தையா புவனேந்திரன் (தந்தை),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(38)

ஆனால் இவர்கள் பதவியை மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். மாறாக-

பதவியினால் பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும், உலகத்தையே கட்டி ஆளவேண்டும்; மக்கள் தன்னைக் கண்டு நடுங்க வேண்டும் என்று எண்ணக்கூடாது.

ஹிட்லர் உலகத்தையே அடிமையாக்கி ஆள நினைத்தார். அவர் முடிவு என்னவாயிற்று? பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் பதவியை வைத்து மக்களை ஆட்டிப் படைக்க நினைத்தார். இப்போது இருக்கும் இடம் தெரியாமல் உயிருக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார். இடிஅமீனின் கதி என்னவாயிற்று?

பெரும் பதவிக்கு ஆசைப்படுகிறவர்களைக் கண்டு நண்பர்கள் விலகி விடுவார்கள். பெரும்பாலும் பதவிக்கு ஆசைப்படுகிறவர்கள் வீழ்ச்சியை அடைவது உறுதி.

ஆறாவது வகையினர் மற்றவர்களைவிட வேகமாக நண்பர்களை இழப்பார்கள். இவர்கள் அடிக்கடி நண்பர்களை எதிர்பாராத நேரத்தில், வேலை நேரத்தில் சந்தித்துத் தொந்தரவு கொடுப்பார்கள்.

அலுவலகத்தில் வேலை செய்யும்போது, தொழிலில் பிரச்சினைகளைச் சந்திக்கும் நேரத்திலோ, வீட்டில் குடும்பப் பிரச்சினையில் மூழ்கியிருக்கும் அகால வேளையிலோ, திடீர் திடீரென்று விஜயம் செய்வார்கள். ''இந்தப் பக்கம் வந்தேன். சும்மாப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்பார்கள்.

நண்பர்கள் கஷ்டப்பட்டுக் கொஞ்சம் சிரிக்க முயலுவார்கள். வேலைநேரத்தில் குறுக்கிட்டு விட்டேனா? என்றால் ''பரவாயில்லை'' என்பார்கள். கஷ்டப்பட்டு மகிழ்ச்சியடைவதைப் போல் காட்டிக் கொள்வார்கள்.

அழைக்காமல் வரும் நண்பர்களைக்கூட யாரும் விரும்புவதில்லை. அட்டையைப்போல் சமய சந்தர்ப்பம் தெரியாமல் ஒட்டிக்கொள்ளும் இவர்கள் வருவது தெரிந்தாலே போதும். விளக்கை அணைத்து விட்டுக் கதவைச் சாத்திவிடுவார்கள்.

வீட்டிலும் சரி அலுவலகத்திலும் சரி. 'நான் காண வந்த நண்பன் இல்லை போலிருக்கிறது' என்று எண்ணிய படி திரும்பிவிட வேண்டிய நிலைமை இவர்களுக்கு ஏற்படும்.

ஏழாவது வகையினர் பெண்கள், ஆண்கள் தாம் நண்பர்களை விரட்ட முடியுமா? பெண்கள் தமது கணவர்களையே விரட்ட முடியும்.

ஒவ்வொரு ஆணும் தன் மனைவியை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறான். மனைவிக்கு எதையாவது வாங்கித் தர வேண்டும். அவள் சிரித்து மகிழ்வதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறான்.


பெரும்பாலான பெண்கள், குறிப்பாகப் படித்த பெண்கள் என்ன செய்கிறார்கள்? கணவன் என்ன செய்தாலும் குறை கூறுகிறார்கள். என்ன வாங்கி வந்தாலும் ''போயும் போயும் இதைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லையா?'' என்று தூக்கி எறிவார்கள். கணவன் செய்யும் எப்படிப் பட்ட செயலையும், எந்த மாதிரி உதவியையும் பாராட்ட மாட்டார்கள்.

இப்படிப்பட்ட மனைவிமாரை அடைந்தவர்கள் தாம் அடிக்கடி காசிக்கும் இராமேஸ்வரத்துக்கும் போய் வருகிறார்கள். காணாமல் போகும் கணவர்களும் அதிகமாகி வருவது இப்படிப்பட்ட மனைவிமாரின் செயலால்தான்!

எட்டாவது வகையினரும் பெண்கள் தாம். கணவனுக்குக் கொஞ்சமும் அஞ்சாத பெண்கள். கொஞ்சமும் மதிப்புத் தராத பெண்கள்.

குடும்பத்தின் தலைவர் தன் கணவன் என்பதை இவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வீட்டில் எதையும் இவர்கள் தாம் தம் தலையில் போட்டுக் கொண்டு செயற்படுவார்கள். கணவனுக்கு கொஞ்சமும் மதிப்பு தரமாட்டார்கள். பற்றாக்குறைக்கு, ''கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கிறார்கள். இவரால் இந்தக் குடும்பத்துக்கு என்ன இலாபம்?'' என்று வெளிப்படையாக மற்றவர்கள் முன் குற்றம் சாட்டுவார்கள். தூற்றுவார்கள், இழிவாகப் பேசுவார்கள்.

மனைவியின் கழுத்தை நெறித்துக் கொன்று விடலாமா என்று கணவனுக்குத்தோன்றும். ஆனால் எதிர்த்துப் பேசக் கூடத் துணிவு வராது. பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடப்பான்.



கணவனைக் கொடுமைப்படுத்தும் மனைவிகளைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். மனைவியின் கொடுமையால் நலிந்து போயிருக்கும் கணவர்களைப் பற்றி ஏகப்பட்ட வால்யூம்களை எழுதலாம். ஆனால் உண்மையில் கணவன் மனைவி உறவு எப்படி அவர்கள் முன்னேற்றத்துக்கு உதவுகிறது என்பதுதான் முக்கியம்.

கணவன் மனைவியை உயர்வாக நடத்த வேண்டும். மனைவி கணவனை மிகவும் மதித்து அடக்கமாக நடக்க வேண்டும். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். விவாதிக்கலாம். ஆனால் சண்டை போடக்கூடாது.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# தொழில்வள முதலீடுகளை வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் போதுமானவை இல்லை

## யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணத்து வளங்களைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு தொழில் முயற்சியாளர் பலர் இங்கு உள்ளனர். ஆனால் உரிய முதலீடுகளை வழங்குவதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் போதுமானவையாக இல்லை என்று வர்த்தக சங்கத் தலைவர் என்.ஜெயசேகரம் கவலை தெரிவித்தார்.

'ஏசியா பவுண்டேசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.வர்த்தக சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும் போதே ஜெயசேகரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தக சங்கத்தால் சுயதொழில் மேம்பாட்டுக்கான உதவி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக கடன் அடிப்படையில் காசோலைகள் வழங்கப்படுகின்றன. 14 பயனாளிகளுக்கு இலகுகடன் அடிப்படையில் தலா 30 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்படுகிறது.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களில் 150 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகங்களில் 60 பேரும் தெரிவுசெய்யப்பட்டு கோழிப்பண்ணை அமைப்பதற்கான உதவிகள் வர்த்தகர்களின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டன.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 210 குடும்பங்களுக்கு 6,300 கோழிகள் வழங்கப்பட்டதன் விளைவாக, 30 பேர் பண்ணையாளர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். மேலும் தமது கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய 14 பேர் கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக 'ஏசியா பவுண்டேசன்' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் வாழ்வாதார நிதியுதவியை வழங்குகின்றோம்.

6 வீத வட்டியுடன் ஒரு வருடத்துக்குள் மீளச் செலுத்தக்கூடியதாக இலகு கடன் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

இது போன்று தொடர்ச்சியாக பல குடும்பங்களுக்கு கடன் உதவிகள் வழங்கப்படும். யாழ்ப்பாண பிரதேசத்தின் சிறிய நடுத்தர கைத்தொழில்களான கடற்றொழில், விவசாயம் ஆகியவற்றை முன்னேற்றுவதன் மூலம் குடாநாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்கின்றோம்- என்றார். (எ-14)



நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் போ. இரவீந்திரன் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கிக் கௌரவிக்கின்றார். (எ-7)

## ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோர்

தென்மராட்சி,நவ.26

சாவகச்சேரி நகர சபையினர் உலக உளநல தினம் மற்றும் உள்ளூராட்சி வாரம் ஆகியவற்றையொட்டி நகரசபை உத்தியோகத்தர்களிடையே நடத்திய ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வெளிவந்துள்ளது.

உலக உளநல தினத்தையொட்டி 'விரும்பத்தக்க மனிதர்களாக நம்மை நாமே செதுக்குவோம்' என்னும் தொனிப் பொருளில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

கவிதை-க.சிவகுமார் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்), கட்டுரை-சோ.பிரியாதர்சினி (முகாமைத்துவ உதவியாளர்), சித்திரம்- இ.ஜீவிதா (முகாமைத்துவ உதவியாளர்).

உள்ளூராட்சி வாரத்தையொட்டி அலுவலர்களிடையே நடத்திய அறிவுத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

1ஆம் இடம் - இ.ஜீவிதா (முகாமைத்துவ உதவியாளர்), 2 ஆம் இடம் - மு.கோடீஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர்), 3 ஆம் இடம் சோ.பிரியாதர்சினி - (முகாமைத்துவ உதவியாளர்). (எ-9)

## பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்,நவ.26

ஆறுமுகநாவலரின் 133 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையால் தரம் 6, 7,8 பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது.

யாழ்.இந்துக் கல்லூரியில் கடந்த 18 ஆம் திகதி நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்-த.ஆரணி (வயாவிளான் ம.ம.வி.), 2ஆம் இடம்-க.தேனுகா (அராலி சரஸ்வதி ம.ம.வி.), 3ஆம் இடம்-பு.பிரதீபா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.).

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் - வி.கார்த்திகாயினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), 2ஆம் இடம் - ம.மோகனதாரணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - ர.கோபிகா (கனகரத்தினம் ம.ம.வி).

**மேற்பிரிவு**

1ஆம் இடம் - அ.சாம்பவி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை), 2 ஆம் இடம் - நா.சஜீவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி), 3 ஆம் இடம் - சா.சோபிகா (மகாஜனக் கல்லூரி) (எ)

# மாணவ சமுதாயம் நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்ய முற்பட வேண்டும்

## சமூக சேவை நிலைய அறங்காவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

மாணவ சமுதாயம் நல்லதையே சிந்தித்து, நல்லதையே செய்ய முற்பட வேண்டும். மாணவப் பருவத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ஒழுக்கமே எதிர்காலத்திலும் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் என்று விநாயகர் சமூக சேவை நிலைய அறங்காவலர் தெரிவித்தார்.

'அறத் தமிழ் ஞானம்' எனும் கருப் பொருளில் யாழ். கொக்குவில் விநாயகர் சமூக சேவை நிலையத்தில் அண்மையில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அறங்காவலர் எஸ்.வி. ஆறுமுகசாமி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவ சமுதாயம் நாளும் நல்லதையே எண்ணி நல்லதையே செய்யத் துணிய வேண்டும். மாணவர்கள் கல்விக் கூடங்களில் ஆசிரியர்களை வணங்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் புதிய மாற்றங்கள், சிந்தனைகள் பிறக்க வேண்டும். கடவுளைத் தொழுது வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

கடமைகளைச் சரிவரச் செய்யப் பழக வேண்டும். கதியற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். இதனை மாணவர்கள் உணர்ந்து செயற்படுவதற்கு ஆசிரியர்களும் முன்வரவேண்டும்.

சமூகம் சீரழிகின்றது; கலாசாரம் அழிகிறது எனக் கூறப்படுகிறது. இந்த அழிவு எங்கிருந்து உருவாகிறது என சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வாறான சீரழிவுகளைக் கட்டுப்படுத்த ஆசிரிய சமுதாயம் கல்வியை முன்னிறுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்துவதன் ஊடாக சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

இதற்காக அனைத்து ஆசிரியர்களும் முதலில் தம்மை மாற்றி ஆலோசனை ஆசிரியர்களாக மாறவேண்டும் என்றார். (எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனிததிரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மானுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தைபடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ட்ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பொதுக் கழிவு மீது கண் வையுங்கள்

ஒரே தினத்தில் 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு டெங்குநோயின் பரவுகை திடீரென வீரியம் பெற்றிருக்கிறது. கடந்த சில மாதங்களாக ஓரிரண்டு நோயாளர்கள் இனங்காணப்பட்டபோதே சுகாதாரத் திணைக்களம் டெங்கு ஒழிப்பில் முழுவீச்சில் இறங்கி இருந்தது. வீடுகள் தோறும் டெங்கு விழிப்புணர்வுக் குழு அதிரடியாக இறங்கி, டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் இருக்கின்றனவா என்பதை துருவித் துருவி தேடியது. அவ்வாறு இனங் காணப்படும் இடத்து முதலில் ஒரு எச்சரிக்கை விடப்பட்டது. அதற்கும் மசியாமல் தங்கள் குடியிருப்புகளை குப்பைமாகத்தான் வைத்திருப்போம் என்று அடம்பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் பாய்ந்திருந்தது.

டெங்கு நுளம்புக்குரிய ஏதுநிலைகள் மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒழிக்கப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது. வீதிகளில் இளநீர்க் கோம்பைகளை காண்பது அரிதாகவே இருக்கிறது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தொடர்ச்சியான நடவடிக்கையின் பயனாக பெரும்பாலான குடியிருப்பாளர்கள் தங்கள் நிலங்களில் உள்ள வெற்றுத் தகரப் பேணிகள், போத்தல்கள், மற்றும் நீரை ஏந்தி வைக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் என்பவற்றை அப்புறப்படுத்தி இருக்கின்றனர். இதனால் பெருமளவான காணிகள் பார்ப்பதற்கு 'பளிச்' என்று தோன்றுகின்றன. இதைவிட பற்றைகள் நிறைந்துள்ள காணிகள், டெங்கு நுளம்புகள் பதுங்கி இருக்கலாம் என்று சந்தேகிக்கும் இடங்கள் என்பவற்றில் புகையூட்டலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறு தொடர்ச்சியான தாக்குதலை எதிர்கொண்ட பின்னரும், வலிமையான திருப்பித் தாக்கும் திறனும், பலமும் எப்படி டெங்கு நுளம்புகளுக்கு வந்தன?

தமது வளவுகளுக்குள் இருக்கும் கழிவுப்பொருள்களை குடியிருப்பாளர்கள் சரியான முறையில் அகற்றுவதில்லை. அவர்கள் அகற்றுதல் என்பதற்குப் பதிலாக இடம்மாற்றம் செய்தலையே மேற்கொள்கிறார்கள். தமது வீட்டு வளவுகளுக்குள் இருக்கும் டெங்கு உற்பத்தியாகக் கூடிய கழிவுப்பொருள்களை சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அஞ்சி பக்கத்தில் இருக்கும் சந்தியிலோ அல்லது வேறு காணிகளிலோ எறிந்து விடுகிறார்கள். ஆக மொத்தத்தில் கழிவுப் பொருள்கள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றப்பட்டதே தவிர அவை அழிக்கப்படவில்லை. ஆகவே டெங்கு நுளம்புகள் பதுங்கி இருக்க ஏராளமான இடங்களை நாங்களே விட்டு வைக்கிறோம்.

குடியிருப்பாளர்கள் கழிவுகளை அகற்றுவதிலும் சில சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். தினம்தோறும் வீடுகளுக்கு வந்து கழிவுகளைச் சேகரித்து அவற்றை ஒதுக்கப்பட்ட இடத்தில் குவித்து பின்னர் அவற்றை அழிக்கும் நடைமுறை யாழ்ப்பாணத்தில் நகரப் பகுதியில் மட்டுமே உண்டு. அதுவும் சீரில்லை என்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள். ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் தங்கள் வீடுகளில் சேரும் கழிவுகளை தமது வளவுகளுக்குள்ளேதான் எரிக்கவோ அல்லது புதைக்கவோ வேண்டும்.

ஆனால் 'எரிக்கவா? புதைக்கவா?' என்னும் இரண்டும் கெட்டான் நிலை டெங்கு பதுங்கி இருக்கும் என்று கூறப்படும் கழிவுப்பொருள்களை அழிப்பதில் ஏற்படுகின்றது. ஏனெனில் போத்தல்கள், கொள்கலன்கள், பைகள் என்பன கண்ணாடியாலோ அல்லது பிளாஸ்ரிக்காலோ தான் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை வீட்டு வளவுக்குள் புதைத்தால் மண்ணில் வளம் கெடுவதோடு, ஒரு மழை பெய்தால் வளவு முழுக்க கண்ணாடிச் சிதறல்களும், பிளாஸ்ரிக் துண்டுகளும் வெளியே வந்து பல்லிளித்துக்கொண்டிருக்கும். அதேநேரம் இவற்றை எரிப்பதும் சுற்றுச்சூழலுக்கு ஒவ்வாதது. [கண்ணாடிப் போத்தல்களை எரியூட்டினால் வீட்டிலுள்ளவர்கள் கண்ணாடிச் சிதறல்களை உடலில் ஏந்தவேண்டிய நிலை ஏற்படும்]. இத்தகைய சிக்கல் நிலையை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் கண்டறிந்த பொறிமுறையே 'பக்கத்துக் காணிக்குள் எங்கள் வீட்டுக் குப்பையை கொட்டும்' உத்தி.

சுகாதாரத் திணைக்களத்தினர் தனிப்பட்ட வீடுகளையும், காணிகளையும் மட்டும்தான் டெங்கு உருவாகும் இடங்களாக இனங்கண்டு நடவடிக்கை எடுக்கிறார்கள். ஊரெங்கும் பரவலாக அமைந்திருக்கும் பழைய கேணிகள், குளங்கள், பள்ளங்கள் என்பவற்றில் குவிந்திருக்கும் குப்பைகளை கணக்கில் எடுப்பதில்லை. எடுத்தால் அதனை யாரையும் எச்சரித்தோ சட்ட நடவடிக்கை மேற்கொண்டோ அகற்றுவது கடினமே. பொதுக் கேணிக் குப்பைக்கு யார்மீது வழக்குப் போட முடியும். அவற்றைக் கடைசியில் தாமே அகற்ற வேண்டியிருக்கும் என்பதாலோ என்னவோ பொது இடத்து கழிவுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அவையே இவ்வாறு ஒரே நாளில் 17 பேரை 'வார்ட்டுகளில்' தஞ்சம் அடைய வைக்கும் அளவுக்கு டெங்கு நுளம்புகளை கொழுக்க வைத்திருக்கின்றன. சுகாதாரத் திணைக்களத்தினர் பொதுக் கழிவுகள் மீதும் கண்வைக்க வேண்டியது கட்டாயம்.

# உயர் நீதிமன்ற பரிந்துரையை தெரிவுக்குழு புறக்கணித்தது

சண்டே ரைம்ஸ் அரசியல் விமர்சனத்திலிருந்து
**கோகுலன்**

- பிரதமரின் சுகவீனத்தால் அமைச்சரவையில் மாற்றம்?
- அமெரிக்கா சென்ற ஜனாதிபதிக்கு மருத்துவ சோதனை
- நீதித்துறையுடனான முறுகல் முற்றுகிறது

கடந்த வாரம் வியாழக்கிழமை அதிகாலையில் வொஷிங்டன் டல்லஸ் சர்வதேச விமான நிலையத்தில் டுபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் பயணிகள் விமானம் தரையிறங்கிய போது, அதில் வந்திருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஏற்றிச் செல்ல அமெரிக்க இரகசிய அதிகாரிகள் பலை மொன்றும் வாகன அணியொன்றும் அங்கு காத்திருந்தன. சுகஸ்தானில் இருந்து கொழும்பு வரும் வழியில் ஜனாதிபதி வொஷிங்டனுக்கும் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் பல வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்ததாலும் அது மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்துள்ளது.

தாம் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போர்சிஸன் ஹோட்டலில் சிறிது நேரம் கழித்ததின் பின்னர் மேரிலாந்திலுள்ள மால்டிமோர் ஜோன்ஸ் ஹொப்பில் மருத்துவமனைக்கு ஜனாதிபதி புறப்பட்டுச் சென்றார். அங்கு சிகிச்சை பெற்று வரும் பிரதமர் டி.எம். ஜயரட்ணவை சென்று பார்ப்பது அவரது நோக்கமாக இருந்தது.

பிரதமர் இன்றைய தினம் திங்கட்கிழமை மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்படுவதாக இருந்தாலும் அவர் உடனடியாக பணிக்குத் திரும்பும் நிலையில் இருக்கமாட்டார் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இது அமைச்சரவையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று அரச தரப்பினர் மத்தியில் எதிர்வுகூறலை தோற்றுவித்துள்ளது. புதிய ஆண்டின் ஆரம்பத்தில் இது நிகழலாம் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் ராஜபக்ஷவுக்கு நெருங்கிய வட்டாரங்கள் இது குறித்து மௌனமாகவே இருந்து வருகின்றன.

**மருத்துவ சோதனை**

பிரதமரை மருத்துவமனையில் சந்திக்கச் சென்றிருந்தாலும் ஜனாதிபதி மஹிந்த தமது வழமையான மருத்துவ சோதனையையும் நடத்திக் கொள்வதைக் கருத்தில் கொண்டே அங்கு சென்றிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த விஜயம் முழுக்கவும் தனிப்பட்ட ஒன்று என்றாலும் கூட, ஒரு நாட்டின் தலைவர் என்ற முறையில் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அவருக்கு வேண்டிய மரியாதைகள் எல்லாவற்றையும் செய்திருக்கின்றது. ராஜபக்ஷவும் தமது அமெரிக்க விஜயத்தை மிக அடக்கமாகவே மேற்கொண்டிருந்தார். உடல் நலத்தைப் பரிசோதித்துக் கொள்வதற்கு அமெரிக்காவுக்கு அவர் விஜயம் செய்திருப்பது இது முதல் தடவையல்ல. கடந்த வருடம் வொஷிங்டனுக்கு உடல் பரிசோதனைக்கு சென்றார். அதே சமயம் தமது சகோதரர் டட்லியைச் சந்திப்பதும் அவர் நோக்கமாக இருந்தது.

வொஷிங்டனில் இருந்த போது அங்கிருந்து கொழும்புக்கு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதிலும் அவர் கவனம் செலுத்தியிருந்தார். அவர் முக்கியமாக அக்கறை காட்டிய விடயங்களில் ஒன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் குற்றப் பிரேரணை விசாரணைகள் பற்றியதாகும்.

**அரசு- நீதித்துறை நேரடி மோதல்**

நீதித்துறைக்கும் சட்டமியற்றும் துறைக்கும் இடையில் இப்போது அரசமைப்பு தொடர்பாக நேரடி மோதல் ஒன்று உருவாகியிருப்பது தெளிவு.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவானது, உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் மூவர் கொண்ட ஆயத்தின் [illegible] பரிந்துரையை [illegible]

கிழமை தீர்மானித்தது.

உயர்நீதிமன்றத்தின் முன் சில அரசமைப்பு விதிகள் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான முடிவுகள் வரும்வரை தெரிவுக்குழுவின் அமர்வுகளைப் பிற்போடுமாறு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது. தெரிவுக் குழுவின் அமர்வுகளைப் பிற்போடுவது விவேகமான ஒரு நடவடிக்கையாக இருக்க முடியும் என்று உயர்நீதிமன்ற ஆயம் இவ்வாறு தெரிவித்து சில தினங்களுக்குள்ளாகவே நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அமர்வுகள் தொடர்ந்து நடைபெறும் என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

இந்த விடயத்தில் நாடாளுமன்றமே அதிஉயர் பீடம் என்பதைக் காட்டுவது அரசினதும், எதிர்க்கட்சிகளினதும் நிலைப்பாடு இது என்பதை இந்த செயல் வெளிப்படுத்தியுள்ளது. அதனால் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையை ஏற்க வேண்டும் என்பதையோ விவேகமாக செயற்படும்படி கூறுவதையோ ஏற்க வேண்டும் என்பதில்லை என்ற நிலையை அவர்கள் எடுத்துள்ளார்கள். தெரிவுக்குழுவின் உறுப்பினர்களின் கொழும்பிலுள்ள விலாசங்களில் உயர்நீதிமன்றின் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் சம்பிரதாயப் பூர்வமான பதிலும் கூட அனுப்பப்படவில்லையென்று தெரிகிறது.

மறுபக்கமாக அரசமைப்பை வியாக்கியானம் செய்வது தொடர்பாக எழும் கேள்விகளுக்கு செவிசாய்ப்பதற்கும், அது குறித்து தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றத்துக்கே ஏகத்துவமும் எது சரியென்று தீர்மானிக்கும் தத்துவமும் இருக்கிறது என்பது கடந்த வாரம் உயர்நீதிமன்றத்தின் முன் வெளிப்படுத்தப்பட்டது. அதன்படி வேறு எந்த நீதிமன்றின், விசாரணை சபை அல்லது நீதியை நிர்வகிக்க அல்லது சட்ட அல்லது அரைவாசி சட்ட செயற்பாட்டுக்காக சட்டவலு உள்ள நிறுவனங்களின் முன் விசாரணைகளின் போது எழும் பிரச்சினைகள் அவைகள் உடனடியாக உயர்நீதிமன்றின் தீர்மானத்துக்காக தாக்கல் செய்யப்பட வேண்டும். இது தொடர்பான சட்டப்பிரிவு அரசமைப்பின் 125 ஆவது அதிகாரத்தில் தரப்பட்டுள்ளது.

இவ்விதமாக அரசின் இரண்டு அதிகாரமிக்க அங்கங்களான நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறை ஆகிய இரண்டும் தலைக்குத் தலை மோதிக் கொள்ளும் ஒரு கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இது இவ்வாறு தொடருமானால் மாற்றி அமைக்க முடியாததும் குழப்பகரமானதுமான ஒரு நிலை உருவாகலாம் என்று இருதரப்பிலும் உள்ள நன்நோக்காளர்கள் தெரிவிக்கிறார்கள்.

பிரதிசபாநாயகரின் கருத்தானது பிரதமநீதியரசர் நாடாளுமன்ற விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

**14 கேள்விகளுக்கும் பதில் இணைப்பு**

தெரிவிக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ள 14 குற்றச்சாட்டுகளுக்கும் பிரதம நீதியரசர் பதில்களை இணைத்துள்ளார்.

பதில்களை 24 பக்கங்களில் தயாரித்த பின்னர் நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் செல்வது உட்பட பல விடயங்களையும் அவரும் அவரது சட்டவல்லுநர்களும் ஆராய்ந்தார்கள். அரசசார்பான சில பிரிவினர் பிரதம நீதியரசரை மரியாதைக் குறைவாக நடத்துவதற்கு முயற்சி செய்திருந்தார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். நாடாளுமன்றின் பிரதான வாயில்வரை அவர் நாடாளுமன்ற சபைக்குரிய பஸ்ஸில் பயணம் செய்யும்படி செய்ய வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்துள்ளது. அவர் தயாரித்திருந்த பதிலின் எழுத்து வடிவம் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற விதிகள் அவை வெளியிடப்படுவதைத் தடை செய்கின்றன. ஆனால் அதைப் பெற்றுள்ள ஒரு அரசியல் கட்சி அதனை இணையத்தில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளது. அதே போல் ஒரு சிங்கள பத்திரிகையும் அதனை வெளியிட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**தேங்காய் உடைத்து வழியனுப்பல்**

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க கடந்த வெள்ளியன்று ஹல்ஸ்டோர்ப்பிலுள்ள தனது மன்ற அறைக்குச் சென்ற போது, அவரை வரவேற்பதற்காக உயர் மற்றும் கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகள் கூடியிருந்தார்கள். பின்னர் அவர் தமது அறையில் இருந்து புறப்பட்ட போது சட்டவாளர்களும் நீதிமன்றப் பணியாளர்களும் அவருக்கு ஆரவாரம் செய்து வாழ்த்துக் கூறினார்கள். தமது அலுவலக வாகனத்தைப் பயன்படுத்தாமல் அவருக்கு அனுசரணை வழங்கும் சட்டத்தரணி கந்தையா நீலகண்டனின் காரில் அவர் ஏறிக்கொண்டார். சட்டவாளர்களும் பொது மக்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு கைகளைத் தட்டியும், கோஷங்கள் எழுப்பியும் அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள். சில சட்டத்தரணிகள் தெய்வ ஆசிகோரி தேங்காய்களை அடித்து உடைத்தார்கள். நீதிமன்ற ஊழியர்கள் அருகிலுள்ள பௌத்த ஆலயத்தில் அவருக்காக விசேட பூஜை நடத்தினார்கள்.

பிரதம நீதியரசரின் கார் புறப்பட்ட போது காரின் பின்பக்கம் அவருக்கு அருகில் சட்டத்தரணிகள் கந்தையா நீலகண்டனும் முன்பக்கம் சட்டவாளர் சாலிய பீரிசும் அமர்ந்திருக்கக் காணப்பட்டார்கள். வாயிலைக் கடந்த போது அவர் காரின் பின்கதவைத் திறந்தார். பத்திரிகையாளர்களைப் பார்த்து முறுவலித்தார். அவர் உற்சாகமாக பதற்றமின்றிக் காணப்பட்டார். சிறிது கழித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் காரின் கதவை மூடும்படி கேட்டுக் கொண்டு படப்பிடிப்பைத் தடுக்கும் விதத்தில் மறைத்துக் கொண்டு நின்றார். இதைக்கண்டதாலோ என்னவோ அவர் மீண்டும் கண்ணாடியைத் திறந்து பத்திரிகையாளர்களைப் பார்த்தார். படப்பிடிப்பாளர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அவர் பத்திரிகையாளர்களுக்கு கருத்து எதையும் வெளியிடவில்லை.

நாடாளுமன்றத்தை வாகனம் அடைந்த போது உதவி படைக்கல சேவிதர் குஷான் ஜயரட்ணவினால் வரவேற்கப்பட்டார்.

முதலில் தெரிவுக்குழுவின் முன்னால் அவரை மட்டும் முன்னிலையாகும்படி கூறப்பட்டது. அதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவே சிரேஷ்ட சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா அவருடன் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஒரு மணி நேரத்தின் பின் ஏனைய சட்டத்தரணிகளும் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு மணி 45 நிமிடம் குழுவின் செயற்பாடுகளின் பின்னர் அவர் திரும்பவும் வந்து தமது சட்டத்தரணியின் காரில் அமர்ந்தார். பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு மேற்கொண்டும் எதுவும் தெரிவிக்க வேண்டுமானால் நவம்பர் 30 ஆம் திகதிவரை அவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவகாசத்தை அதிகரிக்க அவர் கோரிய போதும் அது பலனளிக்கவில்லையென்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். தெரிவுக்குழு மீண்டும் டிசெம்பர் 4 ஆம் திகதி கூடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிலக்கியமும் தமிழிசையும்




■ சோ. சிவசுப்பிரமணியன்

உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளில் செவ்வியல் மொழி என்னும் பெருமையுடன் வாழும் மொழி தமிழ்மொழி ஆகும். தமிழ் மொழியில் தொல்காப்பியம் தொடங்கி புதுக்கவிதை வரையிலும் ஏராளமான இலக்கியங்கள் வாழ்ந்து வருகின்றன. இயல், இசை, நாடகம் என முத்தமிழாகப் போற்றப்படுவது தமிழ் மொழி ஆகும். இசைத்தமிழாகிய தமிழ் இசை தொல்காப்பியர் காலம் முதற்கொண்டு சிறப்புடன் திகழ்வதைக் காண முடிகிறது. தமிழ் இசையானது தனக்கே உரிய தனித்தன்மையுடன் விளங்குவதோடு தமிழ் இலக்கியங்களில் இரண்டறக் கலந்திருப்பதையும் காணலாம்.

கலைஞர்களிடமுள்ள அழகுணர்ச்சியின் வெளிப்பாடாகப் பிறப்பதே கலை ஆகும். கலைகளைப் படைக்கும் கலைஞன் அவற்றால் தான் மகிழ்வதோடு அந்தக்கலையைச் சுவைப்பவர்களையும் மகிழ்ச்சி அடையச் செய்கிறான். நுண்கலைகளில் ஒன்றாகச் சிறப்பிற்குரியதாகப் போற்றப்படுவது இசைக்கலை ஆகும். ஓசையை அடித்தளமாகக் கொண்டு, செவி நுகர் கனியாக அமைவது இசைக்கலை ஆகும். ஒலியைக் குறிப்பிடத்தக்கவை என்றும் குறிப்பிட்டுக் காட்ட இயலாத குழப்ப ஒலிகள் எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். இசைக் கலையில் நுட்பமான முறையில் ஒலியைப் பிரித்து உணர வேண்டியுள்ளது. ஒலியின் நுட்பத்தைப் பகுத்தறியும் ஆற்றல் உடையோருக்கு வாய்ப்பானதாகவே இருந்தது இசைக்கலை.

எழுத்துக்களை உருவாக்கிச் சொற்களைப் பொருள் தருமாறு அமைப்பது போல் ஒலியின் பகுதிகளைச் சுவை தருமாறு இணைத்து இசை உருவங்களான பணிகளை உருவாக்கி இசைக் கலையைப் படைக்கிறான் மனிதன். ஏழு இசைகள் என்பது எங்கும் பரவிக் காணப்படுகின்றது. சங்கப் பாடல்களில் ஏழிசைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. மேலைத்தேச இசையைக் காட்டிலும் கிழத்தேசிய இசை மிகச் சிறப்பானதாகவும் முழுமை பெற்றதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இசையானது எல்லா உயிர்களையும் ஈர்க்கும் தன்மை படைத்ததாக விளங்குவதோடு மனித சமுதாயத்தின் உயர்ந்த பண்பாட்டு விழுமியத்திற்குச் சான்றாக விளங்குகிறது. இசை என்பது மொழி, இனம், நாடு கடந்த பொதுமை உடையது. எந்நாடும் உரிமை கொள்ளத்தக்கதாகும். ஆகவே இசைக்கு மொழி இல்லை என்றாலும் மொழிக்கு இசை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் பழங்காலத்தில் இருந்தே தங்கள் அறிவுத்திறனால் இசையமைப்பு முறையை அமைத்திருந்தனர். இதனைத் தொல்காப்பியக் குறிப்புகளிலிருந்தும் சங்க இலக்கியப் பாடல்களில் இருந்தும் அறியமுடிகிறது. பழந்தமிழ் மக்கள் சுரங்களையும், சுருதிகளையும் ராகம் உண்டாக்கும் விதிகளையும் நன்கு உணர்ந்து பன்னிரண்டாயிரம் ராகங்களைப் பாடி வந்தார்கள் என்று பழந்தமிழ் இசை நூல்கள் கூறுகின்றன. இசை அமைப்பு, பண் அமைப்பு, தாள அமைப்பு, வண்ணங்களை இனிமையாகப் பாடுதல் ஆகியவற்றில் பண்டைத்தமிழர் தனித்திறமை பெற்றவராகத் திகழ்ந்தனர்.

பக்தி மணம் கமழும் நாயன்மார்கள், ஆழ்வார்களின் இசைப் பாடல்கள் பல நாடினரையும் வெகுவாகக் கவர்ந்தன.

தமிழிசையே இன்று உழையிசையாடிப்பாடையில் தாய்ப் பண்புகளையும் கிளைப்பண்களையும் வகுத்தும் பழந் தமிழ்க் குறியீடுகளையும் பண்ணுப் பெயர்களையும் வடசொல்லாக மாற்றியும் கர்நாடக சங்கீதம் எனப் பெயரிட்டு வழங்கி வருகின்றனர் என்று இசையியல் என்னும் நூல் சான்று பகர்கின்றது.

கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியர், இன்றைய மொழியியலின் அடிப்படை அலகான ஒலியின் நுட்பத்தை அறிவியல் பூர்வமாக உணர்ந்து இலக்கணம் வகுத்தவர். உயிர், உயிர்மெய், மெய் ஆகிய எழுத்துக்கள் அளபெடுப்பதை இசை நீட்டம் எனக் குறிப்பிடும் தொல்காப்பியர் அதனைக் குறிப்பிடும்போது,

இசைகோடு சிவனிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்
[தொல்.1:33 2-3]

என்று கூறுகிறார். இதிலுள்ள நரம்பின் மறைய எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது இசையைப் பற்றியும் யாழ் போன்ற இசைக் கருவியையும் உள்ளடக்கி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் குறிப்பிடும் பாட்டு, வண்ணம் ஆகிய சொற்கள் இசையோடு தொடர்புடைய ஆழ்ந்த பொருள் பொதிந்த சொற்களாகவே அமைந்துள்ளன. தொல்காப்பியர் வண்ணத்தை 20 வகையாகப் பிரித்துப் பெயர்களைச் சூட்டி நூற்பா இயற்றியுள்ளார். இவ்வண்ணங்களை வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம் என இசைத்தன்மையை உயர்த்தும் வகையில் அமைத்துள்ளார். தொல்காப்பியர் பாடல்களை அவற்றின் அமைப்பு, கருத்து மற்றும் இசைத்தன்மையைக் கொண்டு பாகுபாடு செய்துள்ளார். கலிப்பாவும், பரிபாடலும் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தன.

உளம் ஈர்க்கும் வாயில்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் பாணன், கூத்தன், பாடினி, விறலி ஆகியோர் இசையிலும் கூத்திலும் திறமை உடையவர்கள் என்பதைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. ஐவகைப் பண்புகளையும் இசைக்கருவிகளையும் தொல்காப்பியர் விரிவாகக் கூறுவது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

சங்க காலத்தில் ஆண்கள், பெண்கள், மட்டுமல்லாது பாணர், பாடினியர், ஆடல்மகளிர் போன்றோர் பண்ணும் தாளமும் கூடிய இசைப்பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள், தாளவிசைக் கருவிகள் துணையோடு சிறப்பாகப் பாடி உள்ளனர். ஆம்பல் பண், காஞ்சிப் பண் காமரம், குறிஞ்சிப் பண், செவ்வழி பண், நைவளம், பஞ்சுரம், படுமலைப் பண், பாலைப் பண், மருதப் பண், விளரிப் பண் ஆகிய பண்கள் முழுமையாகவும் அவற்றின் பிரிவுகளாகவும் இசைக்கப்பட்டுள்ளன.

சங்க காலத் தமிழர் பண்களைப் பல்வேறு இசைக் கருவிகள் துணையோடு இசைத்துப் பாடியுள்ளனர். யாழ், கின்னரம், குழல், சங்கு, தூம்பு, வயிர், தண்ணுமை, முழவு, முரசு, பறை, கிணை, துடி, தடாரி, பாண்டில் மற்றும் இன்னியம் முதலான இசைக் கருவிகள் இருந்துள்ளன.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து 12- ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தில் சிலப்பதிகாரம் முதல் கம்பராமாயணம் வரையில் காப்பியங்கள் பல தோன்றியுள்ளன. இசையானது மனித வாழ்க்கையின் ஒரு கூறு ஆகும். காப்பியங்கள் பலவும் பழந்தமிழ் இசைச் சுரங்கங்களாகவே அமைந்துள்ளன. அவற்றுள்ளும் சிலப்பதிகாரம் இசைச் செய்திகளை மிகவும் அதிகமாகத் தருகிறது. அடுத்த நிலையில் பெருங்கதை இசை மலிந்த காப்பியமாகக் காட்சி அளிக்கிறது.

சிலப்பதிகாரம் தமிழிசைக் காப்பியமாகும். இசை ஆசிரியரின், தண்ணுமை ஆசிரியரின் அமைதி பற்றி இளங்கோ அடிகள் கூறுகிறார். தண்ணுமைக் கருவியின் பயன்பாட்டுச் சிறப்பை ஆக்கல், அடக்கல், மீத்திறம் படாமை என இளங்கோ அடிகள் கூறுகிறார்.

யாழின் அமைப்பு, யாழிசை அமைப்பு, யாழாசிரியரின் திறமை முதலியன கூறப்படுகின்றன. வரிப்பாடல், தெய்வம் சுட்டிய வரிப்பாட்டல், குடைப்பாடல் முதலியன இசையின் நுட்பத்தைப் புலப்படுத்துவன. புகாரில் இசை வல்லுநர்கள் இருந்ததை, அரும் பெறன் மரபில் பெரும்பாண் இருக்கையும் (சிலப்:535-3%) என்ற அடியாலும் வீணை இசைக் கருவி இருந்ததை, மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத் (சிலப்.6:18-23) என்ற அடியாலும் உணர முடிகிறது.

உலகின் தொன்மை வாய்ந்த மனித இனங்களுள் தமிழினத்தின் தனிச்சிறப்பாகத் தமிழ் இலக்கியங்களும் தமிழிசையும் அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வளர்ச்சி அடைந்து வருவதைப் போலவே தமிழிசையும் இரண்டாயிரமாண்டு பழமையுடன் சிறந்து விளங்கி வருகிறது.

தமிழிலக்கியத்தின் அமைப்புகளில் வடமொழி ஆதிக்கம் செலுத்தும்போது எல்லாம் அதனை மீறி இலக்கியம் வளர்ந்தது போல் தமிழிசையில் வடமொழி, தெலுங்கு போன்ற மொழிகள் ஆதிக்கம் செலுத்த முனைந்தபோது அவற்றை எதிர்த்து வளர்ந்து வந்துள்ளது.

தமிழிலக்கியங்களும் தமிழ் இசையும் தமிழரின் பண்பாட்டு அடையாளம், வரலாற்றுக் கருவூலம், எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் அழியாச் செல்வங்கள் என்றால் அது மிகையாகாது.

# சுதேச மருத்துவர்களின் மருத்துவச் சான்றிதழ்

■ க.வி.கந்தவேள்
பாரம்பரிய பதிவு பெற்ற அறுவை மருத்துவர் .

அரசு ஆயுர்வேத அலோபதி மருத்துவ சபையினருக்கு தம் துறைசார் பதிவு பெறமருத்துவர்களுக்கான நெறிமுறைகளினை வரையறுப்பதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது.

பதிவு செய்யப்பட்ட சுதேச மருத்துவர்கள் சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியை 1972.02.03 இன் 138/1 இலக்கச் சுற்றிக்கையினால் பெற்றுள்ளனர்.

எவ்வேளை, எவ்வளவு காலப் பகுதிக்கு எவ்வாறு வழங்கலாம், என்பனவற்றினில் இரு துறையினரும் வேறுபட்டுள்ளனர் எனினும் அவற்றின் நம்பகத்தன்மையினையும் சட்டவலுவினையும் பேணிப் பாதுகாப்பதனில் இரு துறையினருமே கண்ணும் கருத்துமிக்கவராயுள்ளனர்.

மருத்துவர்கள் தாம் வழங்கிய சிகிச்சையினால் சான்றிதழ் வழங்க சட்டரீதியான உரித்தும் கடமைப் பாடும் மிக்கவராகின்றனர். நோயாளிகள் தாம் பெற்ற சிகிச்சையினால் சான்றிதழை சட்டரீதியாகப் பெறும் பேறு பெற்றவராகின்றனர்.

தனிப்பட்டவரின் அந்தரங்கத் தகவல்களையும் தரவுகளையும் தன்னகத்தே தாங்கி நிற்கின்ற சட்டபூர்வமான ஆவணம் என்பதால் குறிப்பிட்ட நோயாளி தவிர்ந்த எவருமே சான்றிதழ் வழங்குமாறு மருத்துவர்களைக் கோர இயலாது. மருத்துவர்களும் வழங்க இயலாது. நோயாளியின் சம்மதமின்றி வழங்கும் மருத்துவரும் பெற்றுக் கொண்டவரும் தண்டனைக்குரிய குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுவார்கள்.

ஆயுர்வேதத் திணைக்களத்தினர் விற்பனை செய்கின்ற அச்சிட்ட சான்றிதழ்களில் அடிச்சிட்டைகள் உள்ளன. நோயாளியின் பெயர், முகவரி, வயது, நோய் நிர்ணயம் சிகிச்சை தொடங்கிய நாள் விடுமுறைக்கு சிபார்சு செய்யப்படுகின்ற நாள்கள் நோயாளியின் கையொப்பம் மற்றும் மருத்துவரின் பதிவிலக்கம் கையொப்பம் என்பன ... தகவல்களைப் பூரணப்படுத்துவதற்கு கூடுகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான ஒன்றைப் பயன்படுத்த விரும்பாத மருத்துவர்கள் மேலே சுட்டிக்காட்டிய விபரங்களை உள்ளடக்கிதனக்கே உரிய சான்றிதழை வடிவமைத்துப் பயன்படுத்தலாம்.

நோயாளிகள் அநேக வேளைகளில் விடுமுறை பெற, நீதிமன்றிற்கு சமூகம் கொடுக்க இயலாமையை உறுதி செய்ய, பரீட்சைக்குத் தோற்ற இயலாமையை உறுதி செய்ய, நோயினால் வரையறுத்த பணியை ஆற்ற இயலாத வேளை அல்லது அதனைத் தவிர்த்து இலகுவான வேறு பணியை ஆற்ற வேண்டிய நிலை எழுகின்ற வேளை சான்றிதழ்களைப் பெற முனைகின்றனர்.

நோயாளிகளுக்கும் சுதேச மருத்துவர்களுக்கும் பின்வரும் விடயங்களில் அநேக வேளைகளில் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. அவற்றினைத் தீர்ப்பதற்கான சில அணுகுமுறைகள்.

அ.சிகிச்சைக்கு உள்ளாகாது சான்றிதழ் கோரல்.

ஆ.நோயின் காரணமாய் ஏற்பட்ட இயலாமையின் அடிப்படையில் ஓய்வு எடுக்க வேண்டிய கால எல்லை முடிவடைந்ததும் விடுமுறை நாளை அதிகரிக்க முயலுதல்.

இ.நோயாளிக்கு சிகிச்சை ஆரம்பித்த திகதிக்கு முன்னரான திகதியை சான்றிதழில் குறிப்பிடுமாறு கோருதல் .சிகிச்சைக்கு முன்னரான திகதியைக் குறிப்பிடல் தண்டனைக்குரிய குற்றம். அலோபதி மருத்துவர்கள் உள்ளக நோயாளிகள் தவிர்ந்த ஏனையோருக்கு சிகிச்சைக்கு முன்னரான 3 நாள்களுக்கு மேல் வழங்கின்ற வாய்ப்புடையவர்கள் என்ற கருத்து நிலவுகின்றது.

சுதேச மருத்துவ சபையினர் சிகிச்சைக்குமுன்னரானசான்றிதழை சுதேச மருத்துவர்கள் இத்தனை நாள்கள்தான் சிகிச்சை பெறும் நோயாளிக்கு வழங்கலாம் என எங்குமே வரையறுத்ததாய் அறியவில்லை. எனினும் நோயாளியினது நலன் கருதியும் மருத்துவர் பிரச்சினைகளுக்கு வீணே முகம் கொடாதிருக்கவும் 14 நாள்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியினருக்கு மேல் வழங்க வேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படின் அந்நிலை பற்றி மருத்துவ சபையின் பதிவாளருக்கு காலத்திற்குக் காலம் அறிவித்தல் சாலச் சிறந்ததாகும்.

ஆயுள் வேத மருத்துவ சபையினரின் தலையீட்டைத் தவிர்க்க

1.நோயாளியின் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தினை ஆவணங்களில் உள்ளடக்கல்.

2.விசேட மருத்துவர்களாயின் தாம் பதிவு பெற்ற துறை தவிர்ந்த ஏனைய நோய்களுக்கு சிகிச்சை வழங்கலைத் தவிர்த்தல்.

பதிவு பெற்ற சுதேச மருத்துவாகள் தம் துறை சாரா மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்கும் வேளை'' போலி'' என நாம் சூட்டப்படுவதால் நீதி தேவதையின் முன் அவர்களை நிறுத்தலாம்.

பதிவு பெற்ற சுதேச மருத்துவர்களால் 1972.02.03 இன் 2-138.1 இலக்கச் சுற்றறிக்கைகளில் சுட்டிக் காட்டியுள்ள வரையறைகளுக்கு ஒப்ப வழங்கப்பட்ட சான்றிதழை ஆயுள்வேத மருத்துவ சபை தவிர்ந்த எவருமே எதிர்த்துரைக்க இயலாது. அவ்வாறன வேளை நோயாளியோ அல்லது வழங்கிய மருத்துவரோ நீதித்துறையின் மூலம் நிவாரணம் பெற முற்றும் முழுதுமான உரித்துடையவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கு நீயே நீதிபதி

உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும், ஒரே விதமான மனப்போக்கில் படைக்கப்படவில்லை.

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மனப்போக்கில் இருக்கிறார்கள். அதுதான் இறைவன் வகுத்த விதி.

உலகில் நன்மை, தீமை இரண்டும் இருக்கும்.

பகல் என்றிருந்தால் இரவும் இருக்கும். இன்பம் இருந்தால் துன்பமும் இருக்கும்.

நல்லவன், கெட்டவன் என்று மனிதரிலும் இரண்டு வகையினர் உள்ளனர். உன்னைப் பற்றி, பிறரை விட உனக்கு நன்றாகத் தெரியும்.

எது தர்மம்? எது அதர்மம்?என்றும் உனக்குத் தெரியும்.

நீ தர்ம வழியில் நட. பிறரது பழிச்சொற்களைக் கண்டு வருந்தாதே! எந்த நிலையிலும் நீ தர்ம வழியிலிருந்து தவறாதே! உன்னைக் கெட்டவன் என்று பிறர் கூறலாம். அதற்காக மனம் கலங்காதே. உன்னை நீயே பரிசோதனை செய்து கொள். நீ செல்வது நல்வழி என்று தீர்மானித்தால் அவ்வழியில் தயங்காமல் செல்.

அறநூல்களைப் படி. அதன் வழி நட. நல்லதைச் செய். நல்லதையே பிறருக்குச் சொல்.

ஆனால், உன் கருத்துக்களைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணாதே! .

ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவர்களுக்கு இல்லை என்றால் விட்டுவிடு.

"நான் நல்லவனாகத் தானே வாழ்கிறேன். ஊரார் ஏன் என்னைப் பழிக்கிறார்கள்?" என்று மனம் வருந்தாதே! ஐந்துவிரல்களும் ஒன்றாய் இருக்கும் மனிதன் உலகில் இல்லை. அத்தனை பேருக்கும் நல்லவனாக ஆண்டவன் கூட இருக்க மாட்டான்.

தனக்கொரு துன்பம் வந்தால் ஆண்டவனைக் கூடப் பழிப்பான் மனிதன். உன்னைப் பாராட்டப் பத்துபேர் இருந்தால் பழிப்பதற்கும் பத்து பேர் இருப்பார்கள்.

காய்த்த மரம் தான் கல்லெறிபடும் என்பதை நினைவில் கொள். நீ நல்லவனா தீயவனா என்பதை இறைவன் நன்கறிவான். உன்னைப் பற்றி மனிதன் என்ன பேசுவது?

போற்றினாலும் தூற்றினாலும் எதையும் மனதில் கொள்ளாமல் உன் தர்மத்தைச் செய்.

அது உன்னை நிச்சயம் காக்கும். நல்லவனாய் இருப்பவனுக்குப் பகைவர்கள் அதிகமாவது இயல்பு.

நல்லவர்களான பாண்டவர்கள் ஐந்து பேர். தீயவர்களான கௌரவர்கள் நூறு பேர். தீமை அதிகமாக இருப்பினும் இறுதியில் அது நன்மையினால் அழிக்கப்படுகிறது. நீ நல்லவனாய் வாழும் போது அதற்குப் பல வழியில் எதிர்ப்புகள் வரலாம். பகைவர்கள் அதிகரிக்கலாம்.

உன்னைப் பலர் முன்னிலையில் பழித்துரைக்கலாம். எதற்கும் கலங்காமல் இறைவனைச் சிந்தனை செய். பழி ஒருநாள் விலகும்.

புத்தர், காந்தி போன்ற உத்தமர்களைக் கூட இவ்வுலகம் குற்றம் சொன்னதுண்டு. ஆதலால் உனக்கு நீயே நீதிபதி. மனச்சாட்சியான நான் கூறுவதன்படி, என் வழி காட்டுதலின் படி நீ நடந்து கொள். உனக்கு இறைவன் அருள் நிச்சயம் உண்டு. உன்னைப் பற்றி உனக்குத்தான் நன்கு தெரியும். இறைவனும் உன்னை நன்கறிவான். அதனால் பிறரது விமர்சனங்களால் நீ பாதிக்கப்படக் கூடாது.


'மகாத்மா' என்று போற்றப்படும் தேசபிதா, ஒரு நாள் தனது சபர்மதி ஆச்சிரமத்தில் இரண்டு இளம் பெண்களின் தோள் மீது கைபோட்டபடி நடந்து சென்றார். இதைக் கண்ட பலர், காந்திஜியை மிகத் தவறாக விமர்சனம் செய்தனர்.

இதைக் கேள்விப்பட்ட காந்திஜி மிகவும் மனம் வருந்தினார். "என் மனதில் எந்தவிதக் களங்கமுமின்றி, எனது பேர்த்தி வயதுள்ள இந்தப் பெண்களின் துணையுடன் நடந்து செல்வதை இவர்கள் இப்படிக் கேலி செய்கிறார்களே" என்று கலங்கினார்.

தனது வருத்தத்தை இராஜாஜிக்குக் கடிதமாக எழுதினார். காந்திஜியின் கடிதத்தைப் படித்த இராஜாஜி, அவருக்கு எழுதிய பதில் கடிதத்தில்,

"தங்கள் கண்ணியத்தைப் பற்றியும் நேர்மையைப் பற்றியும் மற்றவர்களை விட தங்களுக்கே நன்கு தெரியும். மற்றவர்களின் தவறான விமர்சனத்தைக் கண்டு நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

அந்த விமர்சனத்துக்கு நீங்கள் மதிப்புக் கொடுத்து வருந்தினால், அவர்கள் சொல்வது உண்மை என்றாகிவிடும். எனவே, அடுத்தவர்களின் தவறான விமர்சனத்துக்கு மதிப்பளிக்காதீர்கள். அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாதீர்கள்." என்று எழுதியிருந்தார். காந்திஜி அன்றிலிருந்து மற்றவர்களின் விமர்சனத்தைக் கண்டு கொள்வதே இல்லை. பிறர் விமர்சனங்களால் நீ பாதிக்கப்படத் தொடங்கினால் ஒரு நாள் கூட சந்தோஷமாக இருக்க முடியாது.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# மன்னார் மாவட்டமும் பனம்பொருள் உற்பத்தியும்



■ எஸ்.ஆர்.லெம்பேட்

வடமாகணத்தில் அதிகளவு பனை வளம் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக மன்னார் திகழ்கின்றது. இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி (பனை அபிவிருத்திச் சபை, மன்னார் - 2010), சுமார் மூன்று மில்லியன் பனை மரங்கள் மன்னாரில் காணப்படுகின்றன. இவற்றில் பெரும் பங்கு (83%) மன்னார் தீவுப் பிரதேச செயலகத்துக்கு (பேசாலை - தலை மன்னார்) உட்பட்ட பகுதிகளிலேயே காணப்படுகின்றன. அத்துடன் மாந்தை மேற்கு (11.66%) மற்றும் நானாட்டான் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க அளவு பனை மரங்கள் காணப்படுகின்றன.

மன்னாரில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் பனை வளத்தை நம்பி வாழ்கின்றனர். எனினும் கூட இது ஒரு சாதியம் சார்ந்த தொழிலாக நோக்கப்படாத தன்மையையும் மன்னாரில் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, மீன் பிடிப்பவர்கள் விவசாயம் செய்வதும், விவசாயம் செய்பவர்கள் மீன் பிடிப்பதும், இதே போல, தமக்கு அருகில் பனை வளம் இருந்தால் அதனை பயன்படுத்தி தொழிலாற்றும் பாங்கை மன்னாரில் அவதானிக்கலாம்.

**மன்னார் பனை அபிவிருத்திச் சபை**

பனம் பொருள் உற்பத்திகளில் பெரும் பங்கு மன்னார் பனை அபிவிருத்திச் சபையினால் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. தவிரவும், பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் தனியார் வியாபார அமைப்புக்களினாலும் ஊக்கமடைவதனை அவதானிக்கலாம். விசேடமாக மன்னார் பனை அபிவிருத்திச் சபையினால் பனங்கட்டி, பனங்களி மற்றும் பனந்தும்பு ஆகியன ஏற்றுமதித் தரத்தில் உற்பத்தி செய்யப்படுவதுடன், கடந்த சில ஆண்டுகளாக இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் உள்ளன.

> விசேடமாக மன்னார் பனை அபிவிருத்திச் சபையினால் பனங்கட்டி, பனங்களி மற்றும் பனந்தும்பு ஆகியன ஏற்றுமதித் தரத்தில் உற்பத்தி செய்யப்படுவதுடன், கடந்த சில ஆண்டுகளாக இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் உள்ளன.

தவிர, சீவல் ஒடியல், ஒடியல் மா மற்றும் கைவினை அலங்காரப் பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை பனை அபிவிருத்திச் சபை வழங்கி வருகின்றது. இதற்கென மன்னாரில் மூன்று பயிற்சி நிலையங்களைக் கொண்டுள்ளதுடன், நாடு பூராகவுமுள்ள தனது (கற்பகம்) விற்பனை வலையமைப்பையும் பயன்படுத்துகின்றது.

**மன்னார் பனை தென்னை அபிவிருத்திச் சங்கம்**

கள்ளு மற்றும் பதநீர் உற்பத்தியை ஊக்குவிப்பதில் பனை தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இங்கு சுமார் ஐந்து பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் (மன்னார் தீவில் - 3, நானாட்டானில் - 01, மாந்தை மேற்கில் - 1) செயற்படுவதுடன் இவை மன்னாரில் மொத்தமாக பதினைந்து கள்ளுக் கடைகளையும் (தவறணை) கொண்டுள்ளன. இறுதியாகக் கிடைத்த தரவுகளின் படி (மாவட்ட செயலகம் - 2010), சுமார் 864 அங்கத்தவர்கள் மேற்படி அபிவிருத்திச் சங்கங்களில் பதிவு செய்துள்ளனர். இதில் பெரும் பங்கு மன்னார் தீவுப் பகுதியிலும், இரண்டாம் நிலையில் மாந்தை மேற்கிலும் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும், தற்போது செயற்பாட்டு நிலையிலுள்ள அல்லது தொழில் ஆற்றும் அங்கத்தவர்கள் சரி அரைவாசியிலும் குறைவடைவதாகக் காணப்படுகின்றனர். இதற்கு, குறைந்த தொழில் ஆர்வம், இடப்பெயர்வு, உடல் நல அக்கறை, மூப்படைதல், கல்வி மற்றும் இதர அபிவிருத்தி என்பவற்றுடன் சில சமூக எதிர்பார்ப்புகளுக்கும் அமைவாக, தற்போது கள்ளு இறக்கும் தொழிலாளர்களின் ஆர்வம் மன்னாரில் குறைந்து வருவதாக அபிவிருத்திச் சங்கங்கள் கூறும் அதேவேளை, வருடாந்த கள்ளு உற்பத்தி அதிகரித்து வருவதனை தரவுகள் காட்டுகின்றன. இது, ஏற்கனவே உள்ள தொழிலாளர்கள், தாம் சீவும் மரங்களின் எண்ணிக்கையை சிறியளவில் அதிகரிப்பதனால் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பு என பனை தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் குறிப்பிடுகின்றன.

மேலும், பனை தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் ஒரு போத்தல் கள்ளு 35 ரூபா என்ற விலையில் அங்கத்துவ தொழிலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து, ஒரு போத்தல் கள்ளு 50 ரூபா என்ற விலையில் தவறணைகளின் ஊடாக பொது மக்களுக்கு விற்பனை செய்கின்றன. இந்த விலையானது கடந்த பல மாதங்களாக உறுதியாகவே காணப்படுகின்றது. இதன் மூலம், கள்ளு இறக்கும் தொழிலாளி ஒருவர் மாதாந்தம் ரூபா 40,000 - 60,000 வரையில் சம்பளம் பெறுவதாக அறிய முடிகின்றது. எனினும், இது கள்ளு இறக்கும் தொழிலாளியைப் பொறுத்த வரையில் ஒரு பகுதி நேர (காலை/மாலை) வேலைச் சம்பளமே. மீதமுள்ள நேரங்களில் மீன் பிடித்தல் அல்லது விவசாயம் செய்தல் அல்லது கூலி வேலைக்குச் செல்லுதல் போன்ற முழு நேர வேலைகளிலும் கள்ளு இறக்கும் தொழிலாளிகள் ஈடுபடுகின்றனர்.

எது எவ்வாறாயினும், இந்த குடும்பங்கள் இடையே மிக மோசமான வாழ்கைத் தரம் காணப்படுவதும், கள்ளு இறக்கும் தொழிலில் இளந்தலைமுறைகள் ஆர்வம் காட்டாத தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. இது ஏன்? என்பது மேலதிக ஆய்வுக்குரிய ஓர் விடயமாகும்!

**கள்ளு சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள்**

ஜனவரி - ஜூலை மாதம் வரையில் கள்ளு உற்பத்திக்கு ஏற்ற பருவ காலம் காணப்படுவதுடன், ஏனைய காலத்தில் இதற்கு மிகைக் கேள்வியும் நிலவுகின்றது. இந்தக் காலத்தில், மாதம்பை போன்ற பிற மாவட்டப் பிரதேசங்களில் இருந்து மன்னாருக்கு கள்ளு இறக்குமதி செய்யப்படுகின்றது.

மன்னாரில் தனியுரிமை நிலையில் கள்ளு சந்தைப்படுத்தலை மேற்கொண்டு வரும் பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்கள், சந்தைப்படுத்தலில் பல பிரச்சினைகளையும் எதிர் நோக்குகின்றன. குறிப்பாக, பருவ காலத்தில் மீதமாகும் கள்ளைப் போத்தலில் அடைக்க அல்லது ஏனைய பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிப் பத்திரம் பெற வேண்டும். எனினும், இது பனை, தென்னை அபிவிருத்திச் சங்கத்துக்கு மட்டுமே மாவட்ட செயலகம் வழங்கியுள்ள நிலையில், ஏனைய நான்கு சங்கங்களும் அனுமதியளிக்கப்பட்ட சங்கத்துக்கே மிகையான கள்ளை வழங்க வேண்டும் என மாவட்டச் செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. இதனூடாக, சமூக பொருளாதார செயற்திறனை பாதுகாக்க முடியும் என மன்னார் மாவட்ட செயலகம் எதிர்பார்க்கின்றது.

எனினும், மிகையான கள்ளை விற்பனை செய்தல் அல்லது போத்தலில் அடைத்தல் அல்லது பரிமாற்றம் செய்தலிலுள்ள சிக்கல் நிலைமைகள் தீர்ந்தபாடில்லை என சங்கங்கள் கவலை தெரிவிக்கின்றன. உதாரணமாக கடந்த ஜனவரியில், 300 போத்தல் கள்ளினை சந்தைப்படுத்த முடியாமல், நிலத்தில் ஊற்றியதாக மாந்தை மேற்கு, பனை, தென்னை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விவரங்களை திரட்டிவரும் படையினர்

## பெண்களை தனியாக நிறுத்தி புகைப்படம் எடுப்பதால் மட்டக்களப்பு மக்கள் அச்சம்

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்று பிரதேசத்திலுள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் வீடு வீடாகச் செல்கின்ற படையினர் குடும்ப விவரங்களைத் திரட்டுவதுடன், குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களை புகைப்படமும் எடுக்கின்றனர் என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சில குடும்பங்களில் கணவன்மார் வெளிநாடு சென்றுள்ளதால் மனைவியை மாத்திரம் வைத்து புகைப்படம் எடுக்கின்றனர்.

பகல் வேளைகளில் படையினர் வீடுகளுக்குச் செல்வதனால், கணவன் தொழிலுக்கும் பிள்ளைகள் பாடசாலைக்கும் சென்றுள்ள நிலையில், குடும்பப் பெண்களைத் தனியாக வைத்து புகைப்படம் எடுப்பதால் அந்தப் பெண்கள் அச்சமடைந்துள்ள நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை அண்மையில் கொக்கட்டிச்சோலைப் பகுதியிலுள்ள எனது ஆதரவாளர்களின் வீடுகளுக்கு சென்று புலனாய்வுத்துறையினர் எனக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் இளைஞர்களை மிரட்டியுள்ளனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

''மாவீரர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகளை செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தயாராகிவருகிறார். அதற்கு உதவினால் உங்களை கைது செய்து நான்காம் மாடிக்கு அனுப்புவோம்'' என்று புலனாய்வுப் பிரிவினர் மிரட்டி வருகின்றனர்.

மாவீரர் தினத்தில் துண்டுப் பிரசுரம் மற்றும் நிகழ்வுகளை அவர் செய்ய இருப்பது தொடர்பில் தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. அதனால் இது தொடர்பில் நீங்கள்தான் மாட்டுவீர்கள் என்று அவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

புலனாய்வுத்துறையினரின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்களை மிரட்டுவது எனக்கு அச்சுறுத்தல் விடுவதாகவே கருதவேண்டியுள்ளது என்று அரியநேத்திரன் கூறினார். இவ்வாறான அச்சுறுத்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளேன். மக்கள் மறந்து வரும் விடயங்களை படையினர் ஞாபகமூட்டி மக்களை உணர்ச்சி வயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மட்டு.பட்டதாரி பயிலுநர்களில் 1,200 பேர் வேறு மாவட்டங்களுக்கு

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகள் நியமனத்தில் பயிலுநர் சேவைக்காக உள்ளீர்க்கப்பட்டவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளை தற்காலிகமாக உள்ளீர்க்கும் வகையில் 2,132 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்டனர். இவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,000 பட்டதாரிகள் மட்டுமே நிரந்தரமாக்கப்படவுள்ளனர். ஏனைய பட்டதாரிகள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் மேலதிகமாக உள்ள பட்டதாரிகளை பொலநறுவை, பதுளை, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு அனுப்புமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தெரிவித்தார். இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து சுமார் 1,200 பட்டதாரிகள் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தில் பட்டதாரிகள் தொகை அதிகமாக இருப்பதன் காரணமாக அங்கு உள்ளீர்ப்பு செய்ய முடியாது என தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் தொகை தேவையை விட மிகவும் அதிகமாக உள்ளதால் இந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு பிரதேச செயலகத்துக்கு 50 அல்லது 60பேர் போதும். ஆனால் மட்டக்களப்பில் உள்ள பிரதேச செயலகங்களில் 200 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனை குறைக்க வேண்டிய தேவை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கண்டியில் சீனப் பெண் மாட்டினார்

கண்டி,நவ.26

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்ட சீனப் பெண் ஒருவர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் குழு ஒன்று மேற்கொண்ட தேடுதலின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கண்டி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனையில் ஈடுபட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் ''ஒன்றிணைவோம் ஐந்து வயதுக் குட்பட்ட பிள்ளைகளின் இறப்பு வீதத்தை குறைப்போம்'' எனும் தொனிப் பொருளில் மக்களை விழிப்புணர்வூட்டும் பேரணி கிரான் பிரதேசத்தில் நடை பெற்றது.

## காத்தான்குடிப் பாடசாலைகளுக்கு மாகாண உறுப்பினர் திடீர் வருகை

மட்டக்களப்பு,நவ.26

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எப்.எம்.சிப்லி பாரூக் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அதன்போது பாடசாலையின் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டதோடு, பற்றாக்குறையாகக் காணப்படும் அபிவிருத்தி, பௌதீக வளங்கள் குறை பாடுகளால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தரம் 1 இல் மாணர்களைச் சேர்த்துக் கொள்வதிலுள்ள சிரமங்கள், மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலான பங்களிப்புகள் பற்றியும் மாகாண சபை உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்படும் நிதிகளைக் கொண்டு அவை நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## பட்டதாரி பயிலுநர்களுக்கு செயலமர்வு



மட்டக்களப்பு,நவ.26

பொருளாதார அபி விருத்தி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கான செயலமர்வு அக்கரைப்பற்றுப் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

உதவி திட்டமிடல் பணிப்பாளர் யூ.எல்.ஏ.ஹசன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், பிரதம வளவாளராக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அன்வர்தீன் கலந்து கொண்டார்.

இந்தச் செயலமர்வில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, இறக்காமம் ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பட்டதாரிகள் கலந்துகொண்டனர். (ச)

## மீளக்குடியேறிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குக

### கிழக்கு விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு மாவட்டத்தின் காரமுனை, புணானை அணைக்கட்டு, வாகனேரி, அல்மஜ்மா மேற்கு மற்றும் அல்மஜ்மா தெற்கு ஆகிய கிராமங்களில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமதிடம் கல்குடா விவசாயச் சங்கத் தலைவர் தலை மையிலான குழுவினர் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நஸீரை, அவருடைய ஏறாவூர் அலுவலகத்தில் கல்குடா விவசாயச் சங்கத் தலைவர் ஐ.எல்.எம்.முஸ்தபா தலைமையிலான குழுவினர் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை முன்வைத்தனர்.

இன முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கல்குடாத் தொகுதியிலுள்ள 33 தமிழ் கிராமங்களில் வசித்து வந்த முஸ்லிம் மக்கள் தமது வாழ் விடங்களிலிருந்து வெளியேறினர் என்றுகல்குடா விவசாயச் சங்கத் தலைவர் ஐ.எல்.எம்.முஸ்தபா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2008 ஆம் ஆண்டு இந்த மக்கள் காரமுனை, புணானை அணைக்கட்டு, வாகனேரி, அல்மஜ்மா மேற்கு மற்றும் அல்மஜ்மா கிழக்கு ஆகிய 5 கிராமங்களில் சுயமாக மீளக் குடியேறி வசித்து வருகின்றனர்.

இந்த மக்களுக்கு அரசிடமிருந்து எந்தவிதமான உதவிகளோ, மானியங்களோ இதுவரைக் கிடைக்கவில்லை. இங்கு வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, இந்த மக்களுக்குச் சொந்தமான சுமார் 2000 ஏக்கர்கள் விவசாயக் காணிகளின் அனுமதிப் பத்திரங்கள் தற்போது வேறு நபர்களின் பெயர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. வாகனேரி பிரதேச செயலகத்துக்குச் சென்று இந்த மக்களுடைய காணி அனுமதிப் பத்திரங்களின் இலக்கங்களைக் குறிப்பிட்டுத் தேடியபோது, அவை வேறு நபர்களின் பெயர்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது.



இந்த நிலையில், இந்தக் கிராமங்களில் மீளக் குடியேறிய மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான நீர்ப்பாசன வசதிகளும் இல்லாமல் உள்ளன.

எனவே இந்தப் பகுதி மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை நிறைவேற்றுவதற்கு உதவ வேண்டும் என்றனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹாபிஸ் நஸீர், குறித்த கிராமங்களுக்கு தான் விரைவில் பயணம் செய்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து நேரில் கேட்டறிந்து கொள்ளவதாகக் கூறினார்.

இதேவேளை, இந்தக் கிராம மக்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு கிழக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து உதவி களைப் பெறுவதற்கு முயற்சிப்பதாகவும் தெரிவித்தார். (ச)

## வீட்டில் புகுந்து தங்கச் சங்கிலி சூறையாடல்

**இனந்தெரியாத கொள்ளையர்கள் வீட்டினுள் புகுந்து உரிமையாளர்களின் வாயில் பிளாஸ்டரை ஒட்டிவிட்டு கொள்ளையில் ஈடுபட்டனர்.**

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு, குருமன்வெளியிலுள்ள வீடொன்றில் 9 பவுண் எடையுடைய சங்கிலியொன்று கொள்ளையிடப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாத கொள்ளையர்கள் இந்த வீட்டினுள் புகுந்து வீட்டு உரிமையாளர்களின் வாயில் பிளாஸ்டரை ஒட்டிவிட்டு இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் வெள்ளை வான் ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிடாதீர்கள். வியாபாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**இடபம்:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். யோகா, தியானம் என மனம் செல்லும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தலைவலி, வாயுக் கோளாறு நீங்கி உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**சிங்கம்:** கவனமாகச் செயற்படுங்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதர வழியில் நன்மை உண்டு. வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** மன உளைச்சல் ஏற்படும். குடும்பத்தில் பலவீனங்களையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். சில இடங்களில் நீங்கள் நல்லது சொல்லப்போய் அது பொல்லாப்பாக முடியக் கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள்..

**நாளை**

கார்த்திகை -12செவ்வாய்க்கிழமை 27.11.2012
திதி: சதுர்த்தசி மா.06.22 வரை
நட்சத்திரம்: பரணி பி.ப 12.58 வரை
சுபநேரம்: 10.43 - 12.13 வரை
ராகுகாலம்: 03.13- 04.43 வரை
(திருக்கார்த்திகை தீபம் குமாராலயதீபம்)

**துலாம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஆலோசனை செய்வீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். சகோதர வழியில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும்.

**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிட்டும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**மகரம்:** மனநிறைவுடன்சிலகாரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வாகனச்செலவு விலகும். அயலாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கும்பம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரியும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**மீனம்:** எதிலும் நிதானித்து செயற்படுங்கள். அரைக்குறையாக நின்ற வேலைகள் முடியும். நட்பால் ஆதாயம் உண்டு. வரவேண்டிய பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் இலாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | | 2 | 9 | | 7 | |
| 7 | 5 | | | | | 2 | 9 | 6 |
| | | | 6 | | 5 | | | |
| 2 | | | | | 6 | 1 | | |
| 5 | | | 1 | 8 | 4 | | | 2 |
| | | 1 | 2 | | | | | 9 |
| | | | 8 | | 7 | | | |
| 6 | 7 | 2 | | | | | 5 | 3 |
| | 8 | | 5 | 3 | | | 1 | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 4 | 5 | 1 | 9 | 2 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 8 | 2 | 7 | 9 | 1 | 4 |
| 2 | 9 | 1 | 3 | 4 | 6 | 7 | 5 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 9 | 1 | 5 | 8 | 7 |
| 1 | 2 | 9 | 7 | 5 | 8 | 4 | 3 | 6 |
| 7 | 8 | 5 | 6 | 3 | 4 | 1 | 2 | 9 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 5 | 8 | 9 | 2 |
| 5 | 4 | 2 | 9 | 8 | 3 | 6 | 7 | 1 |
| 9 | 6 | 8 | 1 | 7 | 2 | 3 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## கணவதிப்பிள்ளை கந்தசாமி

மாதகல், யாதம்பையை பிறப்பிடமாகவும் கனடா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான கணவதிப்பிள்ளை கந்தசாமி 23.11.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-இலட்சுமிப் பிள்ளை தம் பதியரின் மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் (கனடா), பரமேஸ்வரி (கனடா), இலட்சுமிப்பிள்ளை, சண்முகசுந்தரம் (அமெரிக்கா), காந்தி மதி (கனடா), விமலாதேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, பொன்னம்பலம் (செட்டிகுளம்), மற்றும் கணபதிப்பிள்ளை, முத்துலிங்கம் (கனடா), திலகவதி (அமெரிக்கா), பொன்னம்பலம் (வவுனியா), கடம்பமலர், சச்சிதானந்தம், சேய்ராதா, கங்கா தேவி, சிறிமுருகன், பிரணவசோதி, சோதி ஆகியோரின் மைத்துனரும் சிறிபத்மராணி, கோபாலசிங்கம், சிவபாலகிருஷ்ணன் (கனடா), கருணாகரன், காஞ்சனாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான கிருபாகரன், சிறிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தமகேஸ்வரன், புவனேஸ்வரி, தயாசலா (கனடா), மங்களேஸ் வரி (கனடா), பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனாரும் தனஞ்சயா, கோதீசன், சுபர்ணா, தேனுஜா, மதுராஜ், அகில்ராஜ், ஜனுசா, லேனுசா, புகழரசி, விழியரசி, திருவரங்கன், திவியரசி, லக்ஸ்மனன், செல்வி, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தமிழ்க்கீரன், கபிசாயினி, திசானி, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மாதகல் 0774001696
0771864579
0214900946

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/1965) (45,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக மீனவர் தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை மீனவர் தொழிலாளர் தொழிற்சங்கம் உட்பட நீர் கொழும்பில் உள்ள பல்வேறு மீனவ அமைப்புக்கள், மனித உரிமை அமைப்பு, சிவில் அமைப்புக்கள் ஆகியன இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

## முதலாம் தரத்துக்கு அனுமதி; நாளாந்தம் 250 முறைப்பாடு

கொழும்பு,நவ.26

முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக நாளாந்தம் சுமார் 250 முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் அநேகமான முறைப்பாடுகள் கடிதங்கள் மூலம் கிடைப்பதாக அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிவாகியுள்ள முறைப்பாடுகள் குறித்து மாகாணக் கல்வித் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

அடுத்த வருடத்துக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

முதலாம் தரத்தில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும் மாணவர்களை உரிய ஆவணங்களுடன் அழைத்து வருமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தமது மேன்முறையீடுகளைத் தாக்கல் செய்ய முடியும். இதுகுறித்து விசாரணைகள் நடத்தப்படும்.- என்றார். (ச)

## எம்.பிக்களுக்கு வழங்கப்பட்ட உணவில் சயனைட் நஞ்சு

கொழும்பு,நவ.26

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொஹில கிழங்கு கறியில் ச்யனைட் நச்சுப்பொருள் கலந்திருந்தமை அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16 ஆம் திகதி நாடாளுமன்ற உணவகத்தில் சமைக்கப்பட்ட கொஹில கிழ்ங்கு, பருப்பு சேர்க்கப்பட்ட உணவு வழங்கப்பட்டது.

அதில் கொஹில கிழங்குக் கறி வழமைக்கு மாறாக சிவப்பு நிறத்தில் இருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து,சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத மரக்கறிகள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க சபாநாயகரால் உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு பகுப்பாய்வு செய்து திணைக்களத்தினால் நாடாளுமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில், கொஹில கிழங்குக் கறியில் சயனைட் நஞ்சு கலந் திருந்தமை கண்டிறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நாடாளுமன்ற பொலிஸார் பலரிடம் வாக்குமூலங்களைப் பெற்று, விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## பிரதம நீதியரசர் பதவியை ஏற்குமாறு கேட்கவில்லை

### மொஹான் பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு,நவ.26

இலங்கையின் தற்போதைய பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால், பிரதம நீதியரசராக பதவியேற்குமாறு தம்மிடம் யாரும் கேட்கவில்லை என்று முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசர் பதவியை எதிர்ப்பார்த்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பில் அவர் தமது மறுப்பை வெளியிட்டுள்ளார். நீதித்துறை தொடர்பில் தற்போது அவர் ஜனாதிபதியின் ஆலோசகராக செயற்பட்டு வருகிறார்.



எனவே நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக அவரே நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனை மறுத்துள்ள மொஹான் பீரிஸ் சரியான ஒருவர் அந்த பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று தெரிவித்தார். (ச)

# குற்றப் பிரேரணை விசாரணையை இரு மாதங்களுக்கு பிற்போடுங்கள்

### சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு,நவ.26

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரணைகளை இரண்டு மாதங்களுக்கு பிற்போடுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கொழும்பில் கூடிய சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக எடுத்துள்ளனர் என்று சங்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்கு வழக்குகள் முடியும் வரை, பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணைகளை நடத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு உயர்நீதிமன்றம் வேண்டுகோள் விடுத்திருந்தது என்று அவர் கூறினார்.



எனினும் அதனை உதாசீனப்படுத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு தமது விசாரணையை நடத்தியது. இந்த நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் தமது தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடளாவிய ரீதியில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று அவர்மேலும் தெரிவித்தார்.(ச)

## லஞ்ச குற்றச்சாட்டு; 30 எம்பிக்கள் விசாரணை

கொழும்பு,நவ.26

முறையற்ற வகையில் சொத்துச் சேர்த்தமை தொடர்பில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த 30 பேருக்கும் எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலஞ்ச மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

சுமார் 60 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் என 400 பேர் மீது இலஞ்ச ஊழல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் தலைவர் ஜெகத் பாலபட்ட பெந்தி தெரிவித்தார்.

இதேவேளை பலர் முறைப்பாடுகளைச் செய்துள்ள போதும் பயம் காரணமாக தமது பெயர்களைக் குறிப்பிடாமை காரணமாக தமது ஆணைக் குழுவினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அவர் கூறினார்.

## இலங்கையிலும் தாய்ப்பால் வங்கி

கொழும்பு,ந.26

தொழில் புரியும் தாய்மார் தமது குழந்தை களுக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் பல்வேறு சிரமங் களை எதிர் நோக்குகின்றனர்.எனவே இலங்கையிலும் தாய்ப்பால் வங்கி ஒன்றை அமைப்பது குறித்து சுகாதார கல்வி அலுவலகத்தின் கவனம் திரும்பியுள்ளது என்று தேசிய போஷாக்கு தொடர்பான இணைப்பாளர் லலித் சந்திரசேன தெரிவித்தார்.

உலக தாய்ப்பால் ஊட்டல் தொடர்பான ஆய்வின் 2012ஆம் ஆண்டுக்கான இலங்கை அறிக்கை வெளியிடும் வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தை பிறந்து மூன்று அல்லது 4 மாதங்களில் தமது பிரசவ கால விடுமுறை முடிந்த பின்னர் தாய்மார் தொழிலுக்குச் செல்ல நேரிடுகின்றது.

இத்தகைய தாய்மார் தமது குழந்தைக்கு பால் மாவை வழங்குகின்றனர். இதனால் குழந்தையின் போஷாக்குக்கு பங்கம் ஏற்படுகின்றது.

குறைந்த பட்சம் தாய்மார் ஆறு மாத காலத்துக்காவது தமது குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்ட வேண்டும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அத்தகைய தாய்மாரின் குழந்தைகளுக்கு தாய்ப்பால் வங்கியூடாக தாய்ப்பாலைக் கொடுக்க முடியும்..

எடை குறைந்த குழந்தைகளுக்கு அவர்களது போஷாக்கு நிலையை அதிகரித்துக்கொள்வதற்கு உத்தேச தாய்ப்பால் வங்கி வரப்பிரசாதமாகும். பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இத்தகைய வங்கிகள் நல்ல பலனை அளித்துள்ளன. குறைந்த செலவில் இலங்கையில் தாய்ப்பால் வங்கிகளை அமைக்க முடியும். என்றார். (ச)

## ரஷ்யா—இலங்கைக்கு இடையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் திட்டம்

### அந்நாட்டு தூதர் பஸிலுடன் பேச்சு

கொழும்பு,நவ.26

ரஷ்யாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளை வலுவாக முன்னெடுப்பதற்கு தேவையான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கைக்கான ரஷ்யாவின் புதிய தூதர் எலெக்ஸாண்டர் ஏகாச்வா தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுலா மேற்கொள்கின்றவர்களில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறைகள் குறித்து தமது நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்கு விசேட திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும்.

இலங்கை தொடர்பான பிரசாரங்களுக்காக ரஷ்ய இலத்திரனியல் மற்றும் அச்சுத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விசேட ஊடகக் குழு ஒன்றை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்றார். (ச)

## பாடசாலைகளில் மாணவர் படையணி

கொழும்பு,நவ.26

மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் அனைத்து பாடசாலைகளிலும் மாணவர் படையணியை ஆரம்பிப்பதற்கு தேசிய மாணவர் படையணி அமைப்பு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் தேசிய மாணவர் படையணி அமைப்பானது 50,000 மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றது என்று அதன் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர தெரிவித்தார். கெடேற் சார்ஜன்களுக்கான உயர் பயிற்சி அடுத்த வருடம் ரன்தம்பை கெடேற் பயிற்சி நிலையத்தில் 9 நாள்களுக்கு இடம் பெறவுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## அதிவேக நெடுஞ்சாலைக்கு ஒரு வருடம் பூர்த்தியாகிறது இதுவரையில் விபத்துக்கள் 350; வருமானம் 95 கோடி ரூபா

கொழும்பு,நவ.26

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டு நாளை செவ்வாய்க்கிழமையுடன் ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில், இந்த வீதியின் மூலம் இதுவரையில் 95 கோடி ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியை நிர்மாணிப்பதற்காக 45 கோடி ரூபா செலவிடப்பட்டிருப்பதாக நெடுஞ்சாலைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

தெற்கு அதிவேக வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகள் மீது 2,721 வழக்குகள் குறித்த காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலை திறக்கப்பட்டு இந்த ஒரு வருட காலத்துக்குள் 350 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், மூவர் உயிரிழந்துள்ளனர் என்று நெடுஞ்சாலைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
27.11.1949

உதிர்வு
17.11.1994

# அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர் -கனகா பத்திரிகை விற்பனையகம்)

திதி: திரயோதசி

ஆண்டுகள் பதினெட்டு ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம் மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா!

நிரந்தர முகவரி:
'கனக இல்லம்'
கைதடி கிழக்கு, கைதடி.

தற்போதைய முகவரி:
இல. 60, பலாலி வீதி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

(க/1971) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

# பளை - காங்கேசன்துறை ரயில் பாதை புனரமைப்பு

## 149 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.26

பளை - காங்கேசன் துறை வரையிலான 56 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதை மீள் நிர்மாண வேலைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கென 149 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.


2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வேலைகள் நிறைவு பெற்று ரயில் சேவை ஆரம்பிக் கப்படும் என்று யாழ். காங் கேசன் துறை ரயில் பாதை மீள் நிர்மாணத் திட்டப்பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் துறை சார் மீளாய்வுக் கூட்டம் அண் மையில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமை யில் இடம்பெற்றது.

இதன் போது திட்டப் பணிப்பாளர் மேலும் தெரி வித்ததாவது:-

பளையில் இருந்து காங் கேசன்துறை வரையிலான 56 கி.மீற்றர் ரயில் பாதை 2014 ஜூன் மாதம் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட் டுள்ள போதிலும் ஒப்பந்த காரர் 2013 டிசெம்பர் மாதம் முடிப்பதற்கு முயற்சி செய்து வருவதாகவும் அவர் தெரி வித்தார்.

மேலும் ரயில் பாதை மீள் நிர்மாணத்திற்காக தேவைப் படும் பொருள்களை உரிய இடங்களுக்கு அருகில் போடு வதற்கான இடங்களைப் பிர தேச செயலாளர்கள் ஒதுக்கி உதவ வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (3-50)




வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப் பிள்ளையார் ஆலய இலட்சார்ச்சனை மகாயாகத் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தினமும் காலை 8மணி தொடக் கம் 9.30 மணிவரை இலட்சார்ச்சனை, கணபதி ஹோமம் என்பன இடம்பெற்று 9.30மணிக்கு விநாயகர் புராணம் ஓதுதல் இடம்பெறும். (3)

* * *

இயக்கச்சி முகாவில் திரியாய் அம்மன் ஆலய புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகாகும்பாபி ஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11.46 மணிக்கு நடைபெறவுள்ளது. முன்னதாக கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 7.18 மணிக்கு ஆரம்பமாகும். மறு நாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (3-9)

## உருவப்படம் திரை நீக்கம்

அமரர் தம்பியப்பா சண் முகலிங்கத்தின் உருவப் படம் திரைநீக்கம் செய்யப் படவுள்ளது. சைவ பரிபாலன சபையின் செயலாளராக, பொருளாளராக 25 வருடங் களுக்கு மேல் உழைத்து, சபையின் வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றியவர் அமரர் தம்பியப்பா சண்முகலிங்கம்.

இவரது உருவப்படம் சபை மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு திரை நீக்கம் செய்யப்படவுள்ளது என யாழ்.சைவபரிபாலன சபைத் தலைவர் தெரிவித் துள்ளார். (3)

# வருமான வரி விவரத்திரட்டை வெள்ளிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.26

வருமானவரி செலுத்து வோர் வரிமதிப்பாண்டான 2011/2012 ஆம் ஆண்டுக் கான வருமானவரி விவரத் திரட்டுக்களை இந்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரிக் கொடுப்பனவுக்கான பணம் செலுத்தும் படிவத் துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனஉள்நாட்டு இறை வரித் திணைக்கள யாழ்.பிராந் திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106 (1) ஆம் பிரிவின் கீழ் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வரி மதிப்பாண்டு 2011/2012 வரு மான வரித்திரட்டுக்கள் சமர்ப் பிக்கப்படுதல் வேண்டும்.

இறைவரித் திணைக் களத்தின் பிராந்திய அலு வலகத்தில் வருமான வரிக் கோவைகளை வைத்திருப் போர் யாழ்.பிராந்திய அலு வலகத்தில் சமர்ப்பிக்க வேண் டும். இந்தச் சட்டத்தின்படி வரி மதிப்பாண்டுக்கான வரிக் கொடுப்பனவுகள் செப்டெம் பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண் டும் என்று வருமான வரி செலுத்துவோருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இது வரை வரியைச் செலுத்தாத வர்கள் அதனை உரிய முறை யில் இலங்கை வங்கியில் செலுத்தி வரி விவரத்திரட் டுடன் சமர்ப்பிக்க வேண் டும். இந்தச் சட்டத்தின்படி வியாபார அல்லது வர்த்தக இலாபங்கள் மற்றும் வரு மானங்களை வெளிப்படுத்து வோர் வரிவிவரத்திரட்டுடன் தமது நிதியாண்டுக்கான இறுதிக்கணக்குக் கூற்றை யும் இணைக்க வேண்டும். இது தொடர்பில் பிரச்சினை கள் ஏதும் இருக்குமாயின் பிரதி ஆணையாளருடன் கலந்தாலோசிக்கலாம்.

மேற்படி வரிமதிப்பாண்டுக் கான வருமான வரிக்கு பொறுப் புடையவர்களாக இருந்தும் இதுவரை வரிக் கோவைகளை வைத்திருக்காதவர்களும் தாமாக முன்வந்து வரிக் கோவைகளைத் திறக்கலாம்.

இவ்வாறு திறந்து உரிய வரிகளைச் செலுத்த வரி விவ ரத்திரட்டுக்களை குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிப் பதற்குரிய விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. புதிய வரி செலுத்துவோரின் கடந்த கால வருமான விவரங்கள் பற்றி எதுவும் கோரப்படமாட்டாது.

வரியைச் செலுத்தாமலோ அன்றி வரி விவரத்திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டிக் கழிக்கப்படும் இடத்து தண்டப் பணம் அறவிடுவதற்கான ஏற் பாடுகளுக்கும் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தில் இடமுண்டு.

யாழ்.பிராந்திய அலு வலகம் அமைந்துள்ள வீரசிங் கம் மண்டபத்தின் கீழ் மாடித் தளத்தில் 30.11.2012 இல் வருமானவரி விவரத்திரட்டுக் களைப் பெற்றுக் கொள்வதற் கான விசேட கருமபீட மொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. அந்தக் கருமபீடம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை திறந்திருக்கும்.

எனவே உரிய வேளையில் வரிக் கொடுப்பனவுடன் வரி விவரத்திரட்டையும் சமர்ப் பித்து தண்டப்பணம் செலுத் துவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு வரி செலுத்து வோரைப் பிரதி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி.....

அமரர்

**உதயபானு கிறிஸ்ரலின்**

(B.A. Hons)

மண்ணில்
12 ★ 12 ★ 1976

விண்ணில்
26 ★ 11 ★ 2002

ஆண்டுகள் பத்தாகிப் போனதுவோ
எம் செல்வமே உன்னைக் காணாது போய்
மீண்டொருமுறை வந்து உதிப்பாயோ - எம் வீடுதனில்
நீயில்லாத வெளியில் தேடி அலைகின்றோம்
உன்னைத் தினம் நாடியே........

" குறளகம் "
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
115, பாலிநகர், வவுனிக்குளம்.

(25788)(6.7.8)

## தவறிவிட்டது

குலனைநூர், அராலி வடக்கு, கந்தவனம் செல்வநாயகத் தின் மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியன சாவகச்சேரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P : 077 4843144

அல்லது பசோ மோட்டோர்ஸ் யாழ்ப்பாணம்.
பசோ T.V.S. சாவகச்சேரி. (18064)(6.7.8)

## விற்பனைக்கு

Honda CBR Gallam
Black Colour Uo - xxxx
நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு :0770093933
(25784) (2.6.7)

## விற்பனைக்கு

90 sri தொடர் இலக்கமுடைய
HONDA CD 200 மோட்டார்
சைக்கிள் Original
உதிரிப்பாகங்களுடன்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777404926
(18053)(3.14)

## மனமார வாழ்த்துகின்றோம்



வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாவட்டங்களில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகராக கடந்த மூன்று வருடங் களாகப் பணியாற்றி 21.11.2012 ஆம் திகதி தொடக்கம் வடமாகாண பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகப் பதவிப் பொறுப்பை ஏற்றுள்ள

உயர் திரு. **காசிப்பிள்ளை புஸ்பநாதன்**

அவர்களை மனதார வாழ்த்துகின்றோம். மேலும் அவரின் அஞ்சல் சேவை சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

உப அஞ்சல் அதிபர்கள், அஞ்சலர்கள், அலுவலக ஊழியர்கள்,

செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, முள்ளியான், சுண்டிக்குளம், எழுதுமட்டுவாழ், கிளாலி, சோரன்பற்று, தட்டுவன் கொட்டி.

(25810)(45.6.7)

## நன்றி நவில்கின்றோம்



பிரம்மஸ்ரீ கனகசபாபதிகுருக்கள்
குமாரசுவாமிசர்மா
(அச்சுவேலி - கொழும்பு)

01.11.2012 அன்று காலமான எமது அன்புச் சகோதரனது தகனக்கிரியைகள் 23.11.2012 (வெள்ளி) லண்டனில் நடைபெற்று தசாகாதி கிரியைகள் இராமேஸ்வர புண்ணிய சேத்திரத்தில் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

மறைவுச்செய்தி அறிந்ததும் எமது இல்லத்திற்கு நேரில் வந்தும், தொலைபேசி, E-mail மூலமும் ஆறுதல் தெரிவித்தும் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்த அனைத்து உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் கிருகயஞ்ஞத்தில் உறவினர்களையும் சனிக்கிழமை 01.12.2012 முற்பகல் 11.00 மணியளவில் தெஹிவளை ஸ்ரீவிஷ்ணு ஆலய மண்டபத்தில் நடைபெறும் அமைதி பிரார்த்தனையிலும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும்படி நண்பர்களையும் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
ஈஸ்வரன் (077 7349123)

(25798)(6.7.8)

## மரண அறிவித்தல்



**ஆழ்வார் கிட்டினர்**

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், பளையை வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வார் கிட்டினர் (19.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்- சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான இராமர், தெய்வானை, செல்லம்மா, வல்லிபுரம் மற்றும் செல லத்துரை, பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா, சிவபாலன் மற்றும் சிவமலர் (இலங்கை), சிவராணி (இலங்கை), சிவநேசம் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), சிவஞானம் (ஆஸ்திரேலியா), சிவசோதி (லண்டன்), சிவதாசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகமலர் (இலங்கை), இராஜமலர் (லண்டன்), பொன்னுத்துரை (இலங்கை), சிவானந்தம் (பிரான்ஸ்), தங்கவேல் (பிரான்ஸ்), விஜிதா (இந்தியா), பத்மாவதி (ஜேர்மனி), கோபிநந்தா (ஆஸ்திரேலியா), சிவஜெயம் (லண்டன்), ராஜினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிறிதரன், ஜெயவதனி, பிரதீப் மற்றும் கிருஷாந்தி, துளசிதரன், கலைவாணி, சபேஸ்நாத், அருள்நாதன், ஜெயகரன், ஜெயகௌரி, திருவேரகன் (சுதன்), கவிப்பிரியா, தமிழினி, வக்சானந்தன், குகநாத், துளசிநாத்-சிவதர்ஷினி, சிவதர்ஷன், சயந்தா, ரிஷிபா, சாளினி, சானுசா-ரெசாந், ஜெயசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிசாந், அபிசாலினி, சதுர்சனா, லதுர்சா, மிதுரஸ், இலக்கியா, இலக்கியன், லசிதா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2012) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பளை தம்பகாமம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible], பளை.
077-0757191.

தகவல்:
குடும்பத்தினர்.

(25786) 45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டோடு சேர்ந்து வாழ்......



க.அபர்ணா
வட்டுக்கோட்டை

எமது முன்னோர்கள் கட்டி வைத்த பண்பாடு என்னும் அழகிய மாளிகையில் பெண்கள் சிறை வைக்கப்பட்டார்கள் என்பது உண்மைதான். மூட நம்பிக்கைகள் பெண்கள் முன்னேற்றத்தை தடுத்ததுதான். ஆனால் தாய், மனைவி, சகோதரி, மகள் என ஓர் உயிரின் பிரிக்கப்பட்ட உருவங்கள் போல ஆண்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் உறவுகள் பெண்கள், அப்படி இருந்தும் எதற்காக பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டார்கள். சட்டங்கள் கட்டுப்பாடுகள் தனி மனிதன் கையில் இருந்த சர்வாதிகார ஆட்சிமுறைக் காலத்தில் எதிரிகளாலும் நீதி அற்ற கயவராலும் பெண்கள் பயந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. நியாயம் கேட்க முடியாவில்லை. அந்தக் காலத்தில் அடிக்கடி ஏற்படும் போர்ச் சூழலும், வல்லமை உடையோரின் போர், நீதியான மன்னன் ஆட்சியிலும் அநீதிகள் அரங்கேறின. அதனால் பெண்கள் பெட்டகத்து செல்வம் போல பூட்டப்பட்டு பயனற்று திறமை மழுங்கடிக்கப்பட்டு இருந்தார்கள். இருப்பினும் பண்பாடு பெண்களுக்கு எவ்வளவோ பாதுகாப்பாக இருந்திருக்கின்றது. பெண்கள் எவ்வாறு அந்தக் கால மக்களால் போற்றப்பட்டார்கள் என்று நோக்கும்போது பண்பாடு பெண்களுக்கு விலங்கல்ல, ஓர் நேர்மையான காவலாளி.

பெண்கள் பூமி, கங்கை என்றும், கல்வி, செல்வம், வீரம் தருவது பெண் என்றும் தெய்வமாக போற்றப்பட்டார்கள். அத்துடன் பெண்கள் குற்றம் அற்ற வாழ்க்கை வாழவும் வழி வகுத்திருக்கின்றார்கள். மேலும் மது, புகைத்தல், கொலை, பொய், களவு போன்ற தீய செயல்களில் இருந்து கூடியவரை விலக்கி வைக்கப்பட்டு அவற்றைத் தீண்டாதவர்களாக நீதி என்னும் தீயில் எரியக் கூடியவர்களாக புனிதப்படுத்தவும், பெருமைப்படுத்தப்பட்டார்கள். எனவே பண்பாடு பெண்களின் பல்வகை விலங்குகளை உடைத்து ஓர் சுயசுதந்திரத்தைச் சுவாசிக்கவும் நீதியை நேசிக்கவும் கற்றுக் கொடுத்து எதிர்காலத்தை உருவாக்கவும் அநீதியை தட்டிக் கேட்கவும் தகுதி அளித்திருக்கின்றது.

அத்தகைய தேவைகளை உணர்ந்து தன்னை கட்டுப்படுத்திக் கொண்ட பெண்ணை, ஆணைதிக்கவாதிகள் அடிமை நிலைக்கு இட்டுச் சென்றனர். உடன் கட்டை ஏறுதல், ஏற்றுதல் சிறுவயது திருமணம் போன்ற கொடுமைகளையும் விதித்தனர். அந்த கால கட்டத்தில் மகாகவி பாரதியார் போன்றவர்கள் பெண் உரிமைக்காகப் பாடுபட்டு பண்பாடு என்னும் கட்டத்தை பெண்கள் வாழும் அரண்மனை ஆக்கி பெண்களுக்கு விடுதலையும், கௌரவமும் பெற்றுக் கொடுக்கத் துடித்தார்கள். அப்போது ஜனநாயகமும் மலர்ந்து பெண்களுக்கு இருந்த தடைகளை உடைத்து, பெண்களைச் சுதந்திரப் பறவைகள் ஆக்கியது.

எனினும் கண்ணை பறிக்கும் பூவை, கைகள் பறித்து விடுவதுபோல பெண்ணை இலகுவாக எடுத்து விடாமல் வேலி போட்டு வைத்திருப்பது இன்றும் பண்பாடுதான். எனவே எமது பண்பாட்டை நாகரிகம் என்னும் போர்வையில் தூக்கிவீசக் கூடாது. எமது தனித்துவத்தை இழக்கக் கூடாது. ஏனெனில் பண்பாடு என்னும் வட்டம் அதுவே. சீதையைச் சுற்றி எரிந்த தீ, கண்ணகி கண்ணில் வந்த கனல் அது. பெண்களுக்கு அனுகூலமே தான். பெண்ணை அநீதி நெருங்க முடியாது. ஏனெனில் அநீதியை எரிக்கும் சக்தி பெண்ணுக்கு உண்டு. தனி மனித தவறுகள் பெண்களைப் பாதிப்பது கணக்கிட முடியாதவை. மேலைத் தேயத்துடன் ஒப்பிடும்போது, இங்கு பெண்கள் எந்த அளவு சுய பாதுகாப்புக்குப் பழக்கப்படுகின்றார்கள். அதனால் கொடிய நோய் மற்றும் பல ஆடவரின் கொடிய ஆசைக்கு இரையாகாமல் வரையறைக்குள் வெற்றி காண்கின்றார்கள். ஆக எந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணின் கருவறைக்குள் சிறைப்படாமல் பூமியைக் காணவில்லை. எனவே பெண் அடிமைப்படுத்த முடியாதவள். என்றே இயற்கை சொல்கிறது. ஆண்கள் பண்பாடு கலாசாரத்தில் இருந்து விலகிப் போகும் போது கவலைப்படாத சமூகம், கலாசாரம் பெண்கள் விலகிப்போகும் போது மட்டும் கவலைப்படுவது ஏன்? பெண்களே பண்பாட்டைக் காக்கின்றனர். பெண்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் பழைமை வாதம் தடுக்கப்பட்டு உயர் பதவிகளைப் பெண்கள் வகிக்கும் இந்தக்காலத்தில் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு? கலாசாரம் பண்பாட்டை இழந்து விட்டு மீள பெற முடியுமா? எனவே பெண்களைப் பாது காக்கும் பண்பாடு கலாச்சாரத்தைப் பெண்கள் பாதுகாத்து பண்பாட்டுக்குள் வாழ ஒவ்வொரு பெண்ணுமே முடிவு எடுக்க வேண்டும். ★

பண்பாடு பெண்களுக்கு எத்தகைய விலங்குகளை உடைத்து ஓர் சுயசுதந்திரத்தை சுவாசிக்கவும் நீதியை நேசிக்கவும் கற்றுக் கொடுத்து அதனூடு எதிர்காலத்தை உருவாக்கவும் அநீதியை தட்டிக் கேட்கவும் தகுதி அளித்திருக்கின்றது.

# கருவறை...



அம்மா நான் உன் கருவறையிலே
தத்தளித்துக் கொண்டிருந்த போது
உன் மூச்சை நான் சுவாசித்தேன்
இன்று பூவுலகுக்கு வந்தவுடன்
உன் உயிரை மட்டுமே
சுவாசிக்கிறேன் அம்மா
ஆசையாய் பாசமாய் என்னை
நீ வளர்த்தாய்
பாரிய பண்புடையவளாகவும்
ஓர் உயர் பதவியிலும்
என்னை நீ காண்பாய் அம்மா
அன்று நீ என்னைப் பெற்ற
பேற்றை அடைவாய்
அம்மா என் ஆருயிரே..!

கஜானி பிறேம்குமார்
வராகி அம்மன் கோயில்,
கொக்குவில்



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இல்லறம் சிறக்க...



உடுவிலூர்
கலா.


பெண்ணே திருமணம் ஆத்மார்த்தமான உறவு. திருமணம் எனும் சடங்கால் சுமங்கலியாகும் நீ உன்னை முதலில் இல்லற வாழ்வுக்குத் தயார்படுத்திக் கொள். வசதியுள்ள குடும்பத்தில் நீ பிறந்தாலும், வாழப் போகும் வீட்டில் அதே வசதியை எதிர் பாராதே! சிலவேளை கிடைக்கலாம். கிடைக்காமல் போகலாம். பொன்நகைகளும், ஆடம்ப ரங்களும் இல்லறத்தை நிர்ணயிப்பதில்லை. புன்னகையும், பொறுமையும், தன்நம்பிக்கையும், பாசமும், புரிந்துணர்வும் தான் இல்லறத்தின் கிளைகள். இதை நன்கு புரிந்து கொள். சகிப்புத்தன்மை யோடும் அன்போடும் உன் கணவனை ஆளுமை செய்யக் கற்றுக் கொள். அன்பாலும், அணுகு முறையாலும் குல விளக்காக பிரகாசிக்க முடியும். தற்கால ஆடம்பரங்களை எல்லாம் உன் குடும்பத்தில் திணிக்க முயலாதே. எது தேவை, எது தேவையில்லை? என்பதை நீயே தீர்மானித்து உன் கணவனிடம் விண்ணப்பத்தைக் கொடு.

உன் கணவன் கோபப்படும் நேரங்களில் நீயும் கோபப்பட்டு வார்த்தைகளை அள்ளி வீசாதே. பொறுத்திருந்து புன்னகையோடு கூடிய பொறுமையோடு அன்பான வார்த்தைகளால் புரியும்படி தெளிவான கருத்துக்ளை எடுத்தியம்பு. மகளே, உன் மாமியை தாயாக நினைவில் கொள். உனக்கொரு மணமகனை பெற்றுத் தந்தவள் எனப் பெருமை கொள். தினசரி உன் மாமி, மைத்துனி குறை சொல்லி வாழாதே! அது உன் மீது வெறுப்பை ஏற்படுத்தும். அவரவர் குணங்களுக்கும், மனநிலைகளுக்கும் தக்கவாறு வாழக் கற்றுக்கொள். மாமி மைத்துனி செய்வது பிடிக்காது போனால் அதை பெரிது படுத்தாமல் விலக்கி வாழக்கற்றுக் கொள். குற்றம் பாக்கில் சுற்றமில்லை. நற்சிந்தனைகளையும், பரோபகாரத்தையும் உன் குடும்பத்தில் விதைத்துக் கொள். அதுவே, அறுவடைக் காலத்தில் நற்பலனைத் தரும்.

பல நூற்றாண்டுகளைக் கடந்தும் மோனாலிசா ஓவியம் அழியாப் புகழ் கொள்வதற்குக் காரணம் பொன்நகையல்ல புன்னகையே. ஓவியத்திலிருப்பவர் பெண். வாரத்தில் ஒரு நாள் இருவரும் மனம் விட்டுப் பேச சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள். மாதத்தில் ஒரு முறை மனதிற்கு இதமாக, ரம்மியமாக இருக்க இயற்கைக் காட்சிகள் மற்றும் இடங்களுக்குச் சென்று நேரத்தைக் காலத்தைக் கழிக்கக் கற்றுக்கொள். வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் அன்புடன் மாமிக்கு சொல்லிச் செல்லவும். திரும்பி வரும்போது மாமிக்கு ஏதாவது வாங்கி வரவும் பழகிக் கொள். எதையும் கடமை என ஏனோ தானோ எனச் செய் யாது மனம் விரும்பி செய். புகுந்த வீட்டில் பொறுமையையும் பிறந்த வீட்டின் பெருமையையும் காக்க உன்னை நீயே ஆயத்தப்படுத்து. அதுவே இல்லறம் சிறக்க வழி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண நிலை சிறுவர் பரிசளிப்பு



தென்மராட்சி, நவ.26

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரிவால் மாகாண நிலை சிறுவர் பரிசளிப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர், ப.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் 12 கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாகாண நிலையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரம், திருக்குறள் மனனம், பொதுஅறிவு, வினாடிவினா, சிறுவர் நாடகம் ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே இந்த வருடம் நடத்தப்பட்ட மாகாண நிலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஐந்தாம் தரப் புலமைப்பரிசில்பரீட்சையில் வலய ரீதியாக அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. (ம-9)

# மாவிட்டபுரத்தில் நாளை சொக்கப்பனை

யாழ்ப்பாணம், நவ.26

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகைத் திருநாள் குமாரலயதீபம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் சுவாமி வீதி வலமும் மகேஸ்வர பூஜை அன்னதானமும் இடம்பெறும். அதைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் 3.30 மணிக்கு ஷண்முகார்ச்சனையும் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, சுவாமி வெளிவீதி வலம் வருதலுடன் சொக்கப்பனை இடம்பெறும். (ஒ-14)

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலட்சுமி யோகானந்தம்



ஈஞ்சடி சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி யோகானந்தம் நேற்று (25.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் நடேசு -தையல்நாயகி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற யோகானந்தத்தின் (திருநெல்வேலி) அன்பு மனைவியும், மகேந்திரராஜா, காலஞ்சென்றவர்களான மகாதேவன், மனோகரன் ஆகியோரின் சகோதரியும், வாசுகி (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), தற்பரன் (பெல்ஜியம்), அநந்திதை (முகாமைத்துவ உதவியாளர், கடற் றொழில் நீரியல் வளத்திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயும், கோபிநாத் (சமுர்த்தி உத்தியோகத்தர்), பிருந்தா (ஆசிரியை, பேர்த்தமிழ் வித்தியாலயம், கோறன, கொழும்பு) ஆகியோரின் மாமியும், ஸ்ரீநாத்தின் பேர்த்தியும், அன்னபூரணி, கனகசபை, ஜெகதீசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2012) திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி/1884)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

# அயர்லாந்து சம்பிரதாயப்படி 38 மாணவருக்கு சான்றிதழ் யாழ்.ஆயர் வழங்கினார்

கொழும்புத்துறை.நவ.26

யாழ்.அகவொளி நிலையமும் அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய உளவளத்துணை டிப்ளோமா சமாதானக் கட்டுமானமும் சமூக அபிவிருத்திக்குமான டிப்ளோமா பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் யாழ்.அகவொளி நிலையத்தில் நடைபெற்றது.

அகவொளி இயக்குநர் அருட்திரு.எஸ்.ஜே. இராஜநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 38 மாணவர்கள் பட்டச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும், கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் ஓய்வு நிலை பிராந்திய முகாமையாளர் எஸ்.ஹென்றியும் கலந்து கொண்டனர்.

அயர்லாந்து பல்கலைக்கழகத்தின் சம்பிரதாய முறைப்படி ஆயரால் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்தின் அதிபர் கலாநிதி ஜேம்ஸ்பிறவுண், இளைஞர் தொடர் கல்வியின் பதில் இயக்குநர் நியூலா எம்.கியூன் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளுடன் பதக்கங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து அகவொளி நிலையம் நடத்திய முதலாவது பயிற்சி நெறி இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-135)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

விற்பனைக்குண்டு
தேநீர் கடைக்குரிய கண்ணாடிக் கதவு, மேசை, சோக்கேஸ், குளிர்சாதனப்பெட்டி, சமையல் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771934340 (28834)(3.14)

Glory to God......



"THOU SHALT ALSO DECREE A THING, AND IT SHALL BE ESTABLISHED UNTO THEE: AND THE LIGHT SHALL SHINE UPON THY WAYS."
[Job: 22-28]

Since 1982 November 25th

We offer our heartiest greetings
to our loving Pastor.S.Jonathan On this
Precious day of his 30 YEARS
COMPLETION IN GODS' MINISTRY.
May God, the greatest bless him
With all his heavenly blessings.

With all love in Christ,
Prayer Home Family.

## மரண அறிவித்தல்

### முருகேசு பஞ்சரத்தினம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், றோஸ் பிராண்ட் ரொபி கம்பனி மானிப்பாய்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பஞ்சரத்தினம் நேற்று முன்தினம் 24.11.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - அன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும், ராதாகிஷ்னன் (London), சாந்தினி (London), தயாநிதி (ஜேர்மனி), மதிவண்ணன், யாழினி, புருசோத்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகிலா (London), பாலசிங்கம் (London), சதீஸ்குமார் (ஜேர்மனி), விக்னகுமார் (மதுவரித்திணைக்களம், கிளிநொச்சி), கிருஷ்னராஜ் (ஆஸ்திரேலியா), டியானி (ஆஸ்திரேலியா) டினோதா (ஆஸ்திரோலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், திவ்வியா (London), தர்ஷன் (London), அபிகேன் (London), ஈனொக் (London), சரண் (London), சகானா (ஜேர்மனி), சபீன் (ஜேர்மனி), செரீனா (ஜேர்மனி), பவிராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலாதேவியின் (ஆஸ்தி ரேலியா) அன்புச் சகோதரனும், தனபாலன் (ஆஸ்திரேலியா), பால சுப்பிரமணியம், கந்தசாமி, நேசமணி, காலஞ்சென்ற பாலகிஷ்னன், தவமணி, திலகமணி, பிறேமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் மேற்கு, சுன்னாகம்.
0777117080, 0776264145 (சி/1882)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

# 'வரிவீத அறவீடு' தொடர்பாக இருநாள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ.26

நிதி திட்டமிடல் அமைச்சின் மிலோதா நிறுவனத்தினரால் உள்ளூராட்சி சபை அலுவலர்களுக்கான 'வரி வீத அறவீடு' தொடர்பாக இரு நாள் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிநெறி இடம்பெறும்.

இதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான கடிதம் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என சிரேஷ்ட விலைமதிப்பு நிபுணர் பி. டபிள்யூ. சேனரத்தின அறிவித்துள்ளார். (3-50)

## கண்ணீர் அஞ்சலி



கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் அரச முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும்

**செல்வி அனந்திதை யோகானந்தம்**

அவர்களின் அன்புத் தாய்

**திருமதி யோகானந்தம் மகாலட்சுமி**

அவர்கள் இறைவனடி சேர்ந்ததை அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் உறவினரின் துயரில் நாம் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

(25829)(6.7.8)

உதவிப்பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்,
கடற்தொழில் நீரியல் வளத்துறைத்திணைக்கள மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### செல்வநாயகம் சபேசன்

(குபேரன் இரும்பக உரிமையாளர் சாவகச்சேரி)



தோற்றம் 13.04.1983 மறைவு 28.04.1983

கடந்த (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை எங்களை விட்டுப்பிரிந்த எங்கள் அன்புச் செல்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும் நாளை (27.11.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்திற்கு முன்பாக உள்ள நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் (கலாமண்டபம்) நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல 49, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (25833)(9.14)

குடும்பத்தினர்.

# அலுமினியம் பொருத்துதல் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் நடத்தப்பட்டு வரும் அலுமினியம் பொருத்துதல் தொழில் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களுடன் முன்ப[illegible] மேற்கொள்ள[illegible] அறிவிக்கப் பட்டுள்ளது (3-14-253)

## மரண அறிவித்தல்

### வைரவிப்பிள்ளை சண்முகராசா

(கட்டட உரிமையாளர், புலோலி)



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும், புற்றலைப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை சண்முகராசா (23.11.2012) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் அன்புமகனும் மங்கயர்க்கரசி (லண்டன்) அன்பு கணவரும், துளசிமதி, மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,கஜேந்திரனின் (லண்டன்) அன்பு மாமனும் திவியனின் அன்புப் பேரனும் சண்முகநாதன், சண்முகலிங்கம், சண்முகவடிவேல் ஆகியோரின் அன்பு சகோதரனும்,பரமேஸ்வரி யோகேஸ்வரி ,கமலேஸ்வரி, விக்னேஸ்வரன்,சிவகுமார்,இராதாகிருஷ்ணன்(போமன்) (இலங்கை போக்குவரத்துச் சபை பருத்தித்துறை சாலை ) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்


புற்றலைப்பிள்ளையார்கோவிலடி
புலோலி
தொலைபேசி இல.0212262632
00442088419490

தகவல்.
இராதாகிருஷ்ணன் (போமன்)
(இலங்கைபோக்குவரத்துச்சபை, பருத்தித்துறை சாலை)

(c/1981)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டியிட்டது மைக்கல் ஞானம்ஸ் அணி வாகை



கழுகு விளையாட்டுக் கழகம் வருடம் தோறும் நடத்தும் 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

இந்த இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நெற்கொழு கழுகு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இந்த இறுதிப் போட்டி புதிய விதிமுறையின் கீழ் நடைபெற்றது. அதன்படி முதல் 10 பந்துப் பரிமாற்றங்களும் ஒரு அணி துடுப்பெடுத்தாடும் பின்னர் அடுத்த 10 பரிமாற்றமும் அடுத்த அணி துடுப்பெடுத்தாட வேண்டும். இவ்வாறு டெஸ்ட் போட்டிகளைப் போன்று ஒவ்வொரு அணியும் மாறி மாறி இரண்டு இன்னிங்ஸ் விளையாடவேண்டும்.

இந்தப் புதிய விதியின் படி நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக் கழக அணி முதல் இன்னிங்ஸுக்கான 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குக்ளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அச்சுதன் 47 ஓட்டங்களையும், முரளி 8 ஓட்டங்களையும், அமிர் 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் சுவேந்திரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், சுதர்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், குணதீபன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துஷியந்தன் 39 ஓட்டங்களையும், சுகந்தன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மைக்கல் விளையாட்டுக் கழக அணி சார்பில் முரளி 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும், தினேஷ்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தர்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், பிரசாந் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் போதிய வெளிச்சம் இன்மையால், 10 பந்துப் பரிமாற்றங்கள் நடைபெற வேண்டிய ஆட்டம் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இரு இன்னிங்ஸாக மாற்றப்பட்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக் கழக அணியினர் 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 25 ஓட்டங்களையே பெற்றனர். இதில் முரளி 8 ஓட்டங்களையும், தர்சன் 4 ஓட்டங்களையும் தனது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் சயந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், விஜயகுமார் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குப் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களை பெற்றது

இதில் அனுசயந்தன் 23 ஓட்டங்களையும், துசி 3 ஓட்டங்களையும் துசியந்தன் 10 ஓட்டங்களையும், அகிலன் 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மைக்கல் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரசாந் ஒரு பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், தர்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், வினோஷன் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்கினையும் வீழ்த்தினர். இதனால் ஞானம் விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் துஷ்யந்தனும், தொடர் நாயகனாக மைக்கல் விளையாட்டுக் கழக அணி வீரன் அச்சுதனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ங-23)

# கரப்பந்து இறுதிக்கு ஆவரங்கால் மத்தி

யாழ்ப்பாணம், நவ.26

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இதில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த அரை யிறுதியாட்டத்தில் கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:23, 25:22, 25:18 என்ற நேர் செற்கணக்கில் வெற்றியீட்டி, இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. (ங-23)

# உதைபந்தாட்ட லீக் போட்டி முடிவுகள் சில

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

இந்தத் தொடரில் நடைபெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு-

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் புத்தூர் எவரெஸ்ட்டை வென்றது.


கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை திருநகர் பாரதி விளையாட்டுக்கழக அணி எதிர் கொண்டது. இதில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இந்தப் போட்டியில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வளர்மதி அணியை வீழ்த்தியது. (ங-23)

# ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம் நாளை

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (ங-23)



அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேசிய மட்ட கராத்தே போட்டியில் 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தேயில் (சண்டை) ஜனுசன் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுள்ளார்.

ஜனுசன் யாழ். மாவட்ட மட்டத்தில் கராத்தே வீரங்களை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்களில் ஒருவரான சென்.செய் மோகனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது

இவர் சுண்டுக்குழி கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தில் சென்செய் விஜயராயிடம் கராத்தே கலை பயின்று வருகிறார். (ங-23)

# தேசிய மட்ட உதைபந்து கண்டி அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.26

தேசியமட்ட அணித் தெரிவுக்காக நடைபெற்ற இறுதிப்போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை வீழ்த்தி கண்டி மாவட்ட மணி சம்பியன் ஆனது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக 21 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தியிருந்தது.

பிரதேச செயலகம், மாவட்டம், மாகாணம் என்ற ரீதியில் முதல்கட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாவட்ட அணிகள் தேசியமட்டப் போட்டியில் பங்கேற்றன. இதன்போது திருகோணமலை மாவட்ட அணியும், கண்டிமாவட்ட அணியும் தகுதிச் சுற்றுகளில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இந்த இறுதியாட்டம் நேற்று மாலை 3 மணிக்கு கொழும்பு டொறிங்ரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதல்பாதி ஆட்டத்தில் இருந்தே இரண்டு அணியினரும் எப்படியாவது தமது அணிக்கான கோலினை அடித்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் விளையாடியதால் பார்வையாளர்களுக்கு இந்த இறுதிப் போட்டி பரபரப்பான விருந்தினைப் படைத்தது.

இரு அணியினரும் மாறி மாறி எதிர் அணியினுடைய கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆயினும் இரு அணியினராலும் முதல்பாதி ஆட்டத்தில் எதுவித கோல்களையும் பெற முடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போதும் இதே நிலையே தொடர்ந்தது. இரு அணியினரும் முதல்பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்து இரண்டாம்பாதி ஆட்டத்திலாவது தமது அணிக்கான கோல்களை பெற்றிட வேண்டும் என்று கடுமையாக மோதிக்கொண்டனர்.

திருகோணமலை மாவட்ட அணியினர் தமக்கு கிடைத்த கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களை மூன்றை தவற விட்டனர்.

இந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவதற்கு ஒரு நிமிடம் இருக்கையில் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. கண்டி மாவட்ட அணிக்கு அதிர்ஷ்டவசமாக ஒரு தண்டனை உதை கிடைத்தது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தி கண்டி அணி அடித்தது கோல்.

இதனால் ஆட்ட நேர முடிவில் கண்டி மாவட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி தேசிய மட்டச் சம்பியனானது.

இந்த இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவும் மற்றும் விளையாட்டு அமைச்சின் உயர் அதிகாரிகள், உதை பந்தாட்டச் சம்மேளன அதிகாரிகள் என்போரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கண்டி மாவட்ட அணிக்கு 25 ஆயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் வெற்றிக் கிண்ணமும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட திருகோணமலை மாவட்ட அணிக்கு 15 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன. (ங-23)

# ஈஸ்டன் ஈகிள்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம், நவ.26

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் திருகோணமலை மக்கெய்சர் மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஈஸ்டன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

பிக்வூட் விளையாட்டுக் கழக அணிக்கும் ஈஸ்டன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஈஸ்டன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (ங-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து சிறப்பான ஆரம்பம்






நியூஸிலாந்து அணி ஆரம்பத்தில் தடுமாறிய போதும், ரெய்லர் - வில்லியம்ஸ் இடையேயான பகிரப்பட்ட பிரிக்கப்பட முடியாத இணைப்பாட்டத்தின் உதவியுடன் நேற்றைய முதல் நாளில் வலுவான இலக்கை அடைந்தது. ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது 2 இலக்குகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நியூஸிலாந்து அணி விளையாடி வருகின்றது. இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் காலியில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 10 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை, கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

குப்தில் - பிரண்டன் மக்கலம் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கியது. குலசேகரா வீசிய ஆட்டத்தின் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே குப்தில் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து பிரண்டன் மக்கலம் 4 ஓட்டங்களுடன் எரங்கவின் வேகத்தில் வெளியேற, நியூஸிலாந்து அணி 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் அணித் தலைவர் ரோஸ் ரெய்லர், வில்லியம்ஸன் ஜோடி இணைந்தது. இந்த ஜோடி இலங்கை அணியின் பந்து வீச்சை முறையாக கவனித்தது. இலங்கையின் வியூகங்களை தகர்த்தெறிந்து ஓட்டங்களைச் சேர்த்தது. இவர்களது இணைப்பில் நியூஸிலாந்து அணி மீண்டெழுந்தது.

அணித் தலைவர் ரெய்லர் தனது 8 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் வில்லியம்ஸன் தனது 6 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் மழை காரணமாக உரிய நேரத்துக்கு முன்பதாகவே முடிக்கப்பட்டது. மூன்றாவது இலக்குக்காக இருவரிடையேயும் பிரிக்கப்படாத 209 ஓட்டங்கள் பகிரப்பட்டுள்ளன. இது இலங்கை அணிக்கு எதிராக நியூஸிலாந்து அணி, இலங்கை மண்ணில் வைத்து மூன்றாவது இலக்குக்காக் பகிரப்பட்ட மிகச் சிறந்த இணைப்பாட்டமாகும்.

நேற்றைய ஆட்டநேர நிறைவில் நியூஸிலாந்து அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரெய்லர் 119, வில்லியம் ஸன் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (5)

**குப்தில் – பிரண்டன் மக்கலம் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கியது. குலசேகரா வீசிய ஆட்டத்தின் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே குப்தில் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.**



சொந்த மண்ணில் இந்திய அணி, இங்கிலாந்தின் சுழல் பந்து வீச்சுக்கு தடுமாறி தோல்வியின் விளிம்பில் உள்ளது. பீற்றர்ஸனின் அபார ஆட்டத்தின் உதவியுடன் வலுவான இலக்கை முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி நிர்ணயித்தது. பதிலளித்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றைய நாள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் இடையே நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. இ அணிகளும் மோதும் இரண்டாவது டெஸ்ட் மும்பையில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி, இங்கிலாந்தின் சுழல் பந்து வீச்சில் தடுமாறி ஓட்டங்களைக் குவித்தது. ஒரு கட்டத்தில் 169 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்த இந்திய அணி புஜாரா, அஸ்வின் இணைப்பின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் புஜாரா 135, அஸ்வின் 68, சேவாக் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பனஷார் 5, சுவான் 4, அண்டர்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை நேற்று முன்தினமே தொடங்கிய இங்கிலாந்து அணி குக் - பீற்றர்ஸன் இணைப்பின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் இங்கிலாந்து அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் குக் 87, பீற்றர்ஸன் 62 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டத்தில் தொடர்ந்தும் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத்திய இங்கிலாந்து அணி, இந்திய அணியின் பந்து வீச்சை பதம்பார்த்தது. குக் தனது 22 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் அசத்தலாக ஆடிய பீற்றர்ஸனும் தனது 22 ஆவது டெஸ்ட்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இருவரிடையேயும் மூன்ருவது இலக்குக்காக 206 ஓட்டங்கள் பகிரப்பட்டது. குக் 122 ஓட்டங்களுடன் அஸ்வின் சுழலில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் இங்கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை பீற்றர்ஸன் தனித்து நின்று போராடி உயர்த்தினார். சிமித் பட்டேல், பிரையர் ஓரளவு இணைப்பை பீற்றர்ஸனுடன் பகிர்ந்தனர். நேற்றைய நாள் மத்திய போசன இடைவேளையின் பின்னர் பீற்றர்ஸன் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.


பீற்றர்ஸன் 186 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலில் சிக்கினார். அதன் பின்னர் இங்கிலாந்து அணி சரிந்தது. 413 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் ஓஜா 5, அஸ்வின், ஹர்பஜன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

86 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தது இங்கிலாந்து. மொன்டி பனஷார், சுவான் சுழலில் மிரட்ட இந்திய அணி அடி பணிந்தது. இந்திய அணியின் வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினர். இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக வளர்ந்து வரும் புஜாராவும் 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப நிலைமை இன்னும் மோசமானது. கம்பீர் மாத்திரம் அரைச்சதம் அடித்து ஆறுதலளித்தார். சேவாக் 9, சச்சின் 8, ஹோக்லி 7, யுவராஜ் 8, டோனி 6, அஸ்வின் 11 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் சுழலில் ஆட்டமிழந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் நிறைவில் இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் கம்பீர் 53, ஹர்பஜன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காது உள்ளனர். பனஷார் 5, சுவான் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (5)

# வெற்றியின் விளிம்பில் இங்கிலாந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தடுமாறும் தென்னாபிரிக்கா

ஆஸ்திரேலிய அணி நிர்ணயித்த 430 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தை தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலிய அணியின் அபாரப் பந்து வீச்சில் 4 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களை நேற்றைய நாள் நிறைவு வரையில் பெற்று தடுமாறி வருகின்றது.

ஆஸ்திரேலியாக்வுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்ரேலிய அணிக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் ஆட்டம் ஓவல் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன் படி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. தனது முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 550 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 230, வோணர் 119, மைக் ஹஸி 103 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மோர்னி மோர்கல் 5, ஸ்ரெய்ன், கலிஸ் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சில் திணறியது. ஒரு கட்டத்தில் 'பலோ ஒன்' நிலைக்கு தள்ளப்படும் அபாயத்திலிருந்தது. இறுதியில் சகல இலக்குகளையும் இழந்து 388 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஸ்மித் 122, டு பிளெஸிஸ் 78, கலிஸ் 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் ஹில்பென்ஹாஸ் 3, நதன் லயன், சிடில் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

162 ஓட்டங்கள் முன்னிலையுடன் நேற்றுமுன்தினம் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் தடுமாறியது. ஆட்ட நேரநிறைவில் 5 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 9, மைக் ஹஸி 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய நான்காவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஹஸி, கிளார்க் ஜோடி நீண்ட இணைப்பாட்டத்தை மிகச் சிறப்பாக பகிர்ந்தது. கிளார்க் 38, ஹஸி 54 ஓட்டங்களுடன் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து வெளியேறினர். ஆஸ்திரேலிய அணி 8 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

430 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் களமிறங்கியது தென்னாபிரிக்க அணி. முதல் இன்னிங்ஸில் சதம் அடித்த ஸ்மித் இரண்டாவது இன்னிங்ஸில் முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந்து களமிறங்கிய அம்லாவும் 17 ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்க அணி தடுமாறத் தொடங்கியது. இருப்பினும் தொடர்ந்து இணைப்பாட்டங்கள் எதுவும் பலமாகப் பகிரப்படாமல் தொடர்ச்சியாக இலக்குகள் வீழ்த்தப்பட்டன. றுட்லோப் 3, அல்விரோ பீற்றர்ஸன் 24 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேற தென்னாபிரிக்க அணி 45 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த டீ வில்லியர்ஸ், டு பிளஸிஸ் ஜோடி நேற்றைய நாள் ஆட்ட நிறைவு வரையில் பிரிக்கப்படாத 32 ஓட்டங்களைப் பகிர்ந்துள்ளது. தென்னாபிரிக்க அணி 4 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. களத்தில் டீ வில்லியர்ஸ் 12, பிளஸிஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். (5)




**கையடக்கத் தொலைபேசி (mobile phone Repairing) திருத்தும் பாடநெறி**

எந்தவொரு கையடக்கத் தொலைபேசியையும் திருத்துவதற்கு 100% பயிற்சியளிக்கப்படும். பாடநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதுடன் தொழில் உத்தரவாதமும் வழங்கப்படும்.

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
0212224728 / 0777444225
(25832)(3.14)



**Required:preschool teacher trainer**

Applications are invited from female candidates who are having preschool teacher training with experience to be a trainer
good salary for the right candidates!
last date of submission of application along with C.V,& photocopies of certificates in 5th of December 2012.

*the manager,*
*A HEAD preschool*
*&*
*Daycare*
*No.10A WymanRoad,*
*Nallur,Jaffna*

(25831)

E-mail: aheadtrust@yahoo.com


# கலக்கின கரீபியன்கள்

பங்களாதேஷுடனான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் ஆட்டம் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. குல்னாவில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அறிமுக வீரர் அபுல் ஹசன் 113, மஹமதுல்லா 76, நஷீர் ஹுசைன் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் பிடல் எட்வேட்ஸ் 6, சமி 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து 648 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் சாமுவேல்ஸ் 260, சந்தர்போல் 150, டரன் பிராவோ 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் 4, சொகாஷ் ஹாசி 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

261 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி தடுமாறி இலக்குகளை இழந்தது. ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த பங்களாதேஷ் அணியை சகிப் அல் ஹசன், நஷீர் ஹுசைன் ஜோடி மீட்டது. சகிப் அல் ஹசன் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேற்றுமுன்தினம் ஆட்ட நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் நஷீர் ஹுசைன் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

நேற்றைய இறுதி நாள் ஆட்டம் ஆரம்பமானதும் மஹமதுல்லா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்தும் பங்களாதேஷ் அணி இலக்குகளை இழந்தது நஷீர் ஹுசைன் சிறப்பாக ஆடி 94 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் முதலாவது இன்னிங்ஸில் சதமடித்த அறிமுக வீரர் அபுல் ஹசன் பத்தாவது வீரராக களமிறங்கிய போதும் அவருக்கு மறுமுனையில் சரியான இணைப்பு அமையவில்லை. பங்களாதேஷ் அணி 287 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அபுல் ஹசன் ஆட்டமிழக்காது 7 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் பெஸ்ட் 6, வீரச்சாமி பெருமாள் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 27 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. கெயில், கெரன் பவல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். கெயில் தனது பாணியில் ஆட்டத்தை ஆட 4.4 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி மேற்கிந்தியத்தீவுகள் அணி 30 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. கெயில் 20, பவல் 9 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். இந்த வெற்றி மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டுள்ளது. ஆட்டநாயகனாக சாமுவேல்ஸும், தொடர்நாயகனாக சந்தர்போலும் தெரிவாகினர்.


**வெளிநாடு செல்வதற்கு கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டிய ஆங்கிலப் பரீட்சையான (IELTS) உரிய வகுப்புக்களை ஆஸ்திரேலியப் பிரஜையிடம் கற்கக்கூடிய அரிய வாய்ப்பு**

பௌத்த மதகுரு
அதிவண. மைக்கேல்
(Brisbare,Queensland,Australia)



- 15 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்
- தனிப்பட்ட, பிரத்தியேகமான கவனிப்பு
- எம்மிடம் கல்விகற்கும் மாணவர்களுக்கு Student Visa விற்கு 25% கட்டணச்சலுகை.

பதிவு இறுதி நாள் :- 29.11.2012
வகுப்புக்கள் ஆரம்பம்:- 01.12.2012



திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016 (25826)(3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.